# உதய சூரியன்

UTHAYASOORIYAN උදයසූරියන්

Source for reading hunters

உதயசூரியன் (களம் 02 - உதயசூரியன் - 03) (12 செப்டெம்பர் 2013) பக்கம்: 32 **விலை: 20/=**




# வடக்கின் வசந்தம் எமக்கும் கிடைக்குமா?




வவுனியா ஏ9 பிரதான வீதியில் ஓமந்தைக்கு அண்மித்ததாக வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள ஒரு கிராமமே மாணிக்கவளவு (மாணிக்க இலுப்பைக்குளம்) ஆகும்.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் காரணமாக போர் வலயத்திற்குள் காணப்பட்ட இக் கிராமம் தற்போது மீள்குடியேற்றம் செய்யப்பட்ட கிராமங்களில் ஒன்றாகவும் விளங்குகின்றது.

இப் பிரதேச மக்கள் யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து இந்தியாவுக்கும் உறவினர்கள் வீடுகளிலும் தங்கிவிட்டு மீண்டும் 2010 முதல் இப் பகுதியில் குடியேறி வருகின்றனர்.

இவ்வாறு மக்கள் மீள்குடியேறி நான்கு ஆண்டுகள் நிறைவடைகின்ற போதும் அப் பகுதி மக்களின் அடிப்படை வசதிகள் இன்னும்



# வடக்கின் வசந்தம் எமக்கும் கிடைக்குமா?



முழுமையாக பூர்த்தியாக்கப்படவில்லை.

இக் கிராமத்தின் ஊடாக செல்லுகின்ற பிரதான வீதியானது சிதம்பரம்,கள்ளிக்குளம் உள்ளிட்ட 15க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு செல்லுகின்றது. மாணிக்கவளவு, சிதம்பரம், கள்ளிக்குளம் மக்களே இவ் வீதியைப் அதிகமாக பயன் படுத்துகின்றனர். ஏனெனில் இம் மூன்று கிராமங்களினதும் பிரதான வீதி இதுவே.

இந் நிலையில் இவ் வீதி தற்போது உள்ள நிலையில் போக்குவரத்து செய்ய முடியாதுள்ளதாக மக்கள் கூறுகின்றனர்.

இது தொடர்பில் மாணிக்கவளவு கிராமத்தைச் சேர்ந்த எஸ்.செல்லத்துரை கூறுகையில்:- யுத்தம் முடிஞ்ச பிறகு எங்கள இங்க மீள்குடியேற்றம் செய்தாங்க. ஆனா எங்களுக்கான அடிப்படை வச திகள் எதுவும் செய்து தரப்படல்ல. இந்த றோட்டு இப்பவே இப்படி இருக்கு. இனி மழை காலம் வந்தா ஒரே சேறாய் தான் இருக்கும். இங்க ஒரு கிறேசர் போட்டிருக்கிறாங்க. அதால அடிக்கடி டிப்பர் வாகனங்கள்தான் போய்வரும். அதாலதான் இந்த வீதிஇப்படி மோசமாகியிருக்கு. எங்கட பிள்ளைகளும் இந்த வீதியாலதான் பள்ளிக் கூடம் போகனும். வெள்ளை சீருடையோட போற சிறுவர்கள், வரும்போது செம்மண் சீருடையோட வாறாங்கள் என்றார்.

இப் பகுதியின் பிரதான வீதியானது போக்குவரத்து செய்ய முடியாதவாறு குன்றும் குழியுமாக காணப்படுகின்றது. இக் கிராமத்தில் கிறேசர் காணப்படுவதால் தினமும் டிப்பர் ரக வாகனங்கள் இவ் வீதி வழியாக பயணிக்கின்றன. இவ்வாகனம் பயணிக்கும் போது இப்பகுதியே புழுதி மண்டலமாக காட்சியளிக்கும். இப் பகுதி மாணவர்கள் ஆரம்பக் கல்வியினை இப் பகுதியில் உள்ள பாடசாலையில் கற்கின்ற போதும் உயர் கல்வியினை ஓமந்தை மகாவித்தியாலயத்திலேயே கற்கின்றனர். இதனால் இவ் வீதியூடாக வெள்ளை சீருடையுடன் செல்லும் மாணவர்கள் தமது சீருடை வெள்ளை தானா என சந்தேகம் அடையக்கூடிய வகையில் டிப்பர் செல்வதனால் ஏற்படும் தூசிப்படிவுகளால் அவர்களது சீருடை நிறம் மாறுகின்றது. கடந்த வருடம் பெய்த மழையின் போது இவ் வீதியில் போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்பட்டது. பாடசாலை சென்ற மாணவர்கள் வழுக்கி விழுந்து பாடசாலைக்கு செல்லாது இடைநடுவில் வீடு வந்த சந்தர்ப்பங்களும் உள்ளது. இனி மாரி காலம் வரவுள்ள நிலையில் சேறும் சகதியுமாக இவ் வீதி மாறக் கூடிய நிலையில் உள்ளதால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை ஏற்படும் என்கின்றனர் கிராம மக்கள்.

இது ஒரு புறமிருக்க இப் பிரதேசத்தில் குடிநீர் தட்டுப்பாடும் காணப்படுகின்றது. இது தொடர்பில் எம்.குகராணி கூறுகையில்:-

இது கல்லுப் பூமி. இஞ்ச கிணறு வெட்டி தண்ணி எடுக்க ஏலாது. நாலு குழாய்க் கிணறுகள் இருக்கு. ஆனா ரெண்டு குழாய் கிணற்றில தான் குடிக்கிறதுக்கு தண்ணி எடுக்கக் கூடியதாகவுள்ளது. மற்றதுகள் பயன்படுத்தக் கூடிய நிலையில் இல்ல என கூறினார்.

நாளாந்தம் கூலி வேலை செய்து கஷ்டப்பட்டு இப் பகுதியில் வாழும் மக்கள் போக்குவரத்து பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை மட்டுமன்றி சில வீடுகளில் மலசலகூட வசதி கூட இல்லாத நிலையிலேயே குடியிருக்கின்றனர்.

எனவே பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே வடக்கின் வசந்தம் என்றும் துரித அபிவிருத்தி என்றும் நீங்கள் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களில் எமக்கு ஒன்றும் இல்லையா? என்ற ஏக்கத்துடன் இருக்கும் மாணிக்கவளவு மக்களுக்கு என்ன செய்யப் போகின்றீர்கள்?

**-கே.வாசு-**



# நீங்கள்லாம் ரொம்ப நல்லா வருவீங்க!

## வித்தியாசம் காட்டுறாங்களாம்!

வித்தியாசமான முயற்சிகள் எப்போதுமே மக்களைக் கவரும்! மத்திய மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் விளம்பரம் என்ற பெயரில் பணத்தை வாரியிறைத்து போஸ்டர் அடிக்காமல், பதாகைகள் கட்டாமல், மேடைகள் கூட்டாமல் பிரசாரத்தை மேற்கொண்டு வருகிறார். இது நல்ல விடயம்தான்.

அவர் வீடுவீடாகச் சென்று கையளித்து வரும் துண்டுப் பிரசுரத்தின் முழு விபரம் வருமாறு (இத்துண்டுப் பிரசுரம் கலண்டர் தாளின் பின்புறத்தில் எழுதப்பட்டு விநியோகிக்கப்படுகிறது)

குழந்தையும் தெய்வமும் குணத்தாலொன்று - 2004 இல் கொப்பிகள் கொடுத்த நல்ல காரியத்தினாலோ என்னவோ என் பிள்ளைகள் 2 உம் கரகம் ஆடக்கிடைத்தது. இதைவிட மேலும் நல்ல திறமையுள்ள நம் பிள்ளைகளுக்கு உதவவே உங்களைக் கெஞ்சுகிறேன். எனது சின்னத்திற்கு வாக்களித்தால் உங்கள் வீடுகளிலும் வேறு ஏதாவது புதினங்கள் நடக்கலாமல்லவா? மண்குடிசை வாசலென்றால் தென்றல் வர மறுத்திடுமா? நான் உங்கள் காலடிக்கே வருவேன். தாய்மார்+அக்காமார்+தங்கைமார்+மாமிமார்+மதினிமார் வயிறாரவும் மனங்கள் மகிழவும் கண்கள் குளிரவும் எனது மகள்மாரின் கரகாட்டம் சிடியுடன் எதிர்பாருங்கள் என் இனிய சொந்தங்களே!

(மத்திய மாகாணத் தமிழர்களை யாராவது காப்பாத்துங்கப்பா)






இ.தொ.கா. பொதுச் செயலாளரும் கால் நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் நடவடிக்கைக்கு அமைய இலங்கைப் போக்குவரத்து சபையால் ஹட்டனிலிருந்து போடேஸ் வழியாக டயகம நகரத்திற்கும், டயகம பகுதியிலிருந்து மெரோயா, டெஸ்போட் வழியாக நுவரெலியா நகரத்திற்கும் பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த பஸ்சேவைகளை அமைச்சர் தொண்டமான் ஆரம்பித்து வைப்பதை இங்கு காணலாம். இந்நிகழ்வில் இ.தொ.கா. தலைவரும் பிரதி அமைச்சருமான முத்து சிவலிங்கம், இ.தொ.கா. முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

சந்ரு.

## வேட்பாளர் வந்தார், அன்னதானம் போட்டார் சாப்பிடத்தான் முடியவில்லை!



மத்திய மாகாண சபைத் தேர்தல்களை கட்டிவரும் நிலையில் அங்கு அரங்கேறும் சுவாரஸ்யமான விடயங்களுக்கும் பஞ்சமில்லாமல் இருக்கிறது.

அண்மையில் கண்டி புறநகர்ப் பகுதியில் உள்ள கோயிலொன்றில் விஷேட பூஜையும், அன்னதானம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

பூஜையில் பெருமளவான தோட்ட மக்கள் கலந்து கொண்டிருந்தனர். மத்திய மாகாண சபைக்கு போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் பூஜை, அன்னதானத்தில் கலந்து கொள்வார் எனும் அறிவிப்பும் விடுக்கப்பட்டிருந்தது.

பூஜை சிறப்பாக நடைபெற்றது. வேட்பாளர் பூஜை நடைபெறும் வேளையில் வருகை தந்திருக்கவில்லை. பூஜை முடிந்ததும் அன்னதானம் வழங்கப்படுவது வழமை. நேரம் 12 மணியை தாண்டிச் சென்று கொண்டிருந்தது. ஆனால் அன்னதானம் வழங்குவதற்கான எவ்வித அறிகுறியும் காணப்படவில்லை. அவ்வேட்பாளர் வந்து அன்னதானத்தை ஆரம்பித்து வைப்பார் எனவே பக்தர்கள் இருக்க வேண்டும். நாளை அவர் மத்திய மாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரிடம் பல உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என மக்களை வேட்பாளர் வரும்வரை நிறுத்தி வைத்தனர் வேட்பாளரின் கைக்கூலிகள்.

அவர்கள் கூறியபடி வேட்பாளர் வந்தார். வந்து அன்னதானம் போட்டார். ஆனால் அதை யாராலும் சாப்பிட முடியவில்லை. காரணம் நேரம் 4 ஐத் தாண்டியிருந்ததால் அன்னதானம் கெட்டுப் போயிருந்தது. தானே அடுத்த கல்வி அமைச்சர் என தனக்குத்தானே கூறிக்கொண்டு கண்டியில் களமிறங்கியுள்ள இவ்வேட்பாளரின் இச்செயற்பாடு அனைவரையும் முகம் சுளிக்க வைத்ததாக தகவல். தனது அரசியலை வளர்ப்பதற்காக கோயில்களை பலிக்கடாவாக்கும் இவ்வாறான தலைவர்களை என்னவென்று கூறுவது?

இதேபோல தோட்டங்களில் புனரமைத்து வரும் கோயில்களுக்குச் செல்லும் வேட்பாளர் ஒருவர் 5000 - 10000 வரை பணம், கூரைத் தகடுகளை கொடுப்பதோடு, தான் வெற்றிபெற்றால் இக்கோயிலை அழகாக புனரமைக்க உதவி செய்வதாக உறுதிப்பத்திரமும் கொடுத்து வருகின்றாராம். சாராயம் கொடுத்து வாக்குகளை அபகரிக்கும் கலாசாரம் இன்று கண்டியில் கொடிகட்டி பறக்கிறதாக நண்பரொருவர் வருத்தத்துடன் எம்முடன் பகிர்ந்துகொண்டார், தேர்தலுக்கு இன்னும் 10 நாட்களே இருக்கும் நிலையில் மக்கள் சிந்தித்து செயற்படுவது அவசியம் என கருதுகின்றோம்.

தாசன்

## தபால் மூலக் கல்வி

பின்வரும் கற்கை நெறிகளுக்கு மாணவர்கள் சேர்க்கப்படுகின்றார்கள்.

1. Dip. in Social Science – சமூக விஞ்ஞானம்.
2. Dip. in Disaster Mgt – அனர்த்த முகாமை
3. Dip. in Psychology – உளவியல்
4. Dip. in Library Mgt – நூலக முகாமைத்துவம்
5. Dip. in Human Recourse Management – மனித வள முகாமைத்துவம்
6. Dip. in Educational Mgt – கல்வி முகாமைத்துவம்.
7. Dip. in Montessori – ஆரம்ப பாடசாலை
8. Dip. in Marketing – சந்தைப்படுத்தல்
9. Dip. in Business Mgt – வியாபார முகாமை
10. Dip. in Office Mgt – அலுவலக நிர்வாகம்
11. Dip in Spoken English – ஆங்கிலப் பயிற்சி

மொழி மூலம்: தமிழ்

அனைத்து பாடங்களும் தபால் மூலம் கற்பிக்கப்படும். இறுதியில் சர்வதேச அங்கீகார Certificate வழங்கப்படும். காலம் 6 மாதம். கட்டணம் 4800.00 (மாதாந்தம் Rs. 800) Application Form, மேலதிக விபரங்கள் பெற கீழ்வரும் கையடக்க தொலைபேசிக்கு பெயர், முகவரியை SMS செய்யுங்கள். 0713144536

INSTITUTE OF SOCIAL & TECHNICAL STUDIES
400, First Floor, Main Street, Maruthamunai 3,
Kalmunai . http://istsedu.net84.net
வெளிநாட்டில் உள்ளோர்: ists999@gmail.com
affiliated with: IAO – U.S.A

Internationally Recognized Certificate




# யார் என்ன சொன்னாலும் எப்படிக் கொக்கரித்தாலும் இ.தொ.கா. வேட்பாளர்களே வெற்றி பெறுவர்

யார் என்ன சொன்னாலும் எப்படிக் கொக்கரித்தாலும் இ.தொ. கா. வேட்பாளர்கள்தான் அமோக வெற்றியைப் பெறுவார்கள். அதை எதிர்வரும் தேர்தலின் பின் அனைத்து மக்களும் காணுவார்கள் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர் சக்திவேல் தெரிவிக்கிறார்.

அவருடனான நேர்காணல் வருமாறு:-

**நீங்கள் அரசியலுக்கு வந்த காலத்திலிருந்தே இ.தொ.காங்கிரஸோடு இணைந்து செயற்படுகின்றீர்கள். இந்த கட்சியைத் தெரிவு செய்ததற்கான காரணம் என்ன?**

எனக்கு விபரம் தெரிந்த காலம் தொட்டு மக்களுக்காக சேவையாற்றும் கட்சியாக இ.தொ.கா. மட்டுமே காணப்பட்டது. அது மாத்திரமின்றி எனது தந்தையும், தாயும் இந்தக் கட்சியிலேயே அங்கத்தவர்களாக இருந்தனர். அவ்வமைப்பின் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஒரு சக்திவாய்ந்த தலைவராக காணப்பட்டார். ஆகவே இ.தொ.கா.வே முதன்மையானது என நான் தெரிவுசெய்தேன்.

**நீங்கள் பிரதேச சபைத் தலைவராக இருந்த காலத்தில் மக்களுக்காக ஆற்றிய சேவைகள்?**

பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக பாடசாலை உபகரணங்கள் வழங்கியமை, புலமைப்பரிசில்கள் வழங்கியமை, நூலகம் அமைத்தமை (உதாரணம் :- மெராயா, நாகசேனை), இளைஞர்களுக்கு பயிற்சி பட்டறை அமைத்து தலைமைத்துவ பண்புகளை வளர்க்க உதவியமை. இதுமட்டுமன்றி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானின் பணிப்புரைக்கமைய இ.தொ.கா.வுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.



**இ.தொ.கா.வில் இருந்து கட்சி விலகியவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் ஒரு அரசியல் பரம்பரையைச் சேர்ந்தவர். பிரதேசசபை, மாகாணசபை, பாராளுமன்றம் என்பவற்றுக்கு தோட்டபுற இளைஞர்களை உள்வாங்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது. 'வளர்த்த கடா மாரில் பாய்ந்தது' 'நண்டு கொழுத்தா வலையில் நிற்காது' என்ற கருத்துகளுக்கமைய வாக்குகளைப் பெற்று தன்னை வளர்த்துக் கொண்டு கட்சி மாறுகிறார்கள்.

யார் எந்தக் கட்சியில் சேர்ந்தாலும் இ.தொ.கா. கவலைப்படாது. இ.தொ. கா. ஒரு பல்கலைக்கழகம். சிலர் கட்சியின் சட்டத்திட்டங்களுக்கு கீழ்படியாது சுய இலாபத்திற்காக வேறு கட்சிகளுக்குத் தாவிச் செல்கின்றனர். அவ்வாறு சென்றவர்கள் மக்களுக்கு சிறப்பாக சேவையாற்றியோ அல்லது மக்களின் கோரிக்கைகளை ஏற்று அவர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுத்ததாகவோ இதுவரை எனக்குத் தெரியவில்லை.

**நீங்கள் மத்திய மாகாண சபையில் வெற்றிபெறுவீர்களாயின் மக்களுக்கு என்ன செய்ய விரும்புகிறீர்கள்?**

நான் பிரதேச சபைத் தேர்தலில் வெற்றிபெற்று மக்களுக்கு எவ்வாறான சேவைகளை செய்தேனோ அதைவிட பல மடங்கு சேவைகளை செய்வதோடு, மாகாணசபையின் முழு வளங்களையும் மக்களுக்கு பாரபட்சமின்றி பெற்றுத்தருவேன்.

**மலையகத்தில் சிறந்த தலைவராக இருப்பவருக்கு இருக்க வேண்டிய கொள்கைகள் எவை?**

என்னைப் பொறுத்தவரையில் மலையக அரசியலுக்கு ஒரு முன்னுதாரணமான மாபெரும் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். எனவே அவருடைய வழிகளை பின்பற்றுபவர்கள் சிறந்த தலைவர்களாக இருக்க முடியும்.

டி.சந்ரு

# கண்டி மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிப்பது எமது நோக்கமல்ல!

விஞ்ஞானம், ஆங்கிலம், தொழில் நுட்பத்துடனான உலக இணைவே மலையகத்தின் உண்மையான கல்வி மாற்றமென்கிறார் மத்திய மாகாண சபைத் தேர்தலில் கண்டி மாவட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கம் சார்பாக மலையக மக்கள் முன்னணியின் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிடும் முனுசாமி முத்துகுமார்.

அரசியலின் நெருக்கடிக்குள் அதன் சுய இலாபங்களை டாம்பீகமான அரசியலை மக்களுக்குச் செய்ய முடியாது மக்களுடைய அடிப்படைத் தேவைகளையும் அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளில் மட்டுமே என்னால் கவனம் செலுத்த முடியுமென ஒரு முற்போக்கான அரசியலை முனைப்புடன் புதிய ஒரு மாற்றத்தோடு செய்ய விரும்புகிறேன் என்றும் கூறி அரசியலில் புதிய கால் தடம் பதிக்கிறார் முத்துகுமார்.



நாங்கள் கட்சி முரண்பாட்டையோ இன முரண்பாட்டையோ வைத்து வாக்குகளை சேகரிக்க விரும்பவில்லை. மக்களது தேவைகளை என்னென்ன வடிவங்களில் எந்தெந்த மட்டங்களுக்கு கொண்டு சென்று தீர்க்க முடியுமோ இயன்றளவில் அதைச் செய்வதே எமது இலக்கு. எமது மக்களது பிரச்சினைகள் நாடளாவிய ரீதியில் பொதுமைப்படுத்தப்பட்ட பிரச்சினையாக அனைவராலும் இனங்காணப்பட வேண்டும். இதற்காக நான் சகல விதங்களிலும் முனைவேன் என்று மேலும் அவர் கூறுகிறார்.

நாங்கள் கண்டி மாவட்டத்தில் வாக்குச் சிதறலுக்காக களமிறங்கியுள்ளதாக பலர் குறிப்பிடுகின்றனர். நிச்சயமாக அது எமது நோக்கமல்ல. மீதமாக இருக்கும் வாக்குகளை சேகரித்து ஒரு தமிழ் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதே எமது முயற்சியாகும். எக்காரணம் கொண்டும் தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிப்பது எமது நோக்கமாக இருக்காது. பலர் மீது நம்பிக்கையிழந்திருக்கும் மக்கள் மாற்று சக்தி ஒன்றின் வருகைக்காக காத்திருக்கிறார்கள். எனது வரவு கண்டி மாவட்ட மக்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும்.

தேர்தலில் வெற்றி, தோல்வி என்பது எனக்கு முக்கியமல்ல. இத்தேர்தலின் பின் நான் மலையக மக்களின் வாழ்வியல் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் பணியை துரிதமாக முன்னெடுக்கவுள்ளேன்.

புசல்லாவ நயாபனை தோட்டத்தை பிறப்பிடமாகக் கொண்ட நான் உயர்கல்வியை சரஸ்வதி மத்தியக் கல்லூரியிலும் ஸாகிரா கல்லூரியிலும் பயின்று கண்டி அசோகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய அனுபவமுள்ளவன். இந்தியா லயோலா கல்லூரியில் பட்டப்படிப்பை மேற்கொண்டேன். சகவாழ்வு மன்றத்தினூடாக தமிழ் மொழி அமுலாக்கல் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியதோடு, அரசசார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றிய அனுபவமும் உண்டு.

இக்காலகட்டங்களில் மலையக சமூகத்திற்கு பெரும்பாலான சேவைகளை செய்துள்ளேன். அரசியலில் ஈடுபட முன்பே இவ்வாறு பல விடயங்களை செய்த நான் மக்கள் அங்கீகரித்து மாகாண சபைக்குச் சென்றால் மகத்தான புரட்சி மிகு மாற்றத்தோடு பல சேவைகளை செய்வேன் என்று உறுதி கூறுகிறார்.

அரசியல் காழ்ப்புணர்ச்சிகளும், அடிதடிகளும், கவர்ச்சி முனைப்புகளும் என்னிடமில்லை. மலையக சமூக எழுச்சியே எனது முயற்சி. எனவே எனது முயற்சிக்கு அங்கீகாரமளிக்க இளம் தலைமுறையினரே, வாக்குப்பெட்டியை நிரப்பும் அரசியலால் மட்டும் மலையகத்திற்கு விமோசனம் இல்லை. விழிப்புணர்வு பெற்ற வெகுசன பாதையின் பயணமே விமோசன வழி என முன்னெடுக்கும் என்னோடு இணையுங்கள் என்கிறார் முத்துகுமார்.

எம். நவநீதன்

டிஜிடல் வீடியோ கெமரா பயிற்சி
Digital Video Camera Course
அதி நவீன டிஜிடல் வீடியோ கெமராக்களின் ஆக்கிரமிப்புக்கு ஈடுகொடுக்கும் வகையில் தமிழ் மொழிமூலான குறுகிய கால பயிற்சி. அப்புத்தளையில் தங்குமிட வசதியுடன். சனி, ஞாயிறு நாட்களில் காலை 9 மணி முதல் 4 மணி வரை. Script Writing, Production Planning, Art Direction, Photography, Light Techniques, Editing & NoI (Wedding Filming Tech) 25 வருட தொழில் அனுபவம். Ocic Sri Lanka Cinema & Video Production Course சான்றிதழ் பெற்ற கவிமோகன்ராஜ் அவர்களால் கற்பிக்கப்படும்.
Reg No: W-53795
MARUTHI MEDIA
No. 15, Beragala Sub Post Office Road, Beragala, Haldamulla. ☎: 077-7463148

# உட்கட்டமைப்பு பணிகளுடன் உரிமைகளுக்காகவும் மலையக மக்கள் முன்னணி குரல்கொடுக்கும்!




மலையக மக்கள் முன்னணி தோற்றம் பெற்றதில் இருந்துதான் மலையகத்தில் உரிமைகளுக்கான அரசியல் வலுப்பெற்றது. மலையக மக்களை அரசியல் மயப்படுத்துவதில் ஏனைய அமைப்புகளைவிட மலையக மக்கள் முன்னணியே காத்திரமான பங்களிப்பை வழங்கியுள்ளது. மத்தியமாகாண சபையை அர்த்தமுள்ள வகையில் மலையக மக்களுக்காக பயன்படுத்தியவர்கள் அமரர் சந்திரசேகரன், அமரர் வி.டி.தர்மலிங்கம், காதர், மு.சிவலிங்கம், ஜி.ராஜகுலேந்திரா போன்றவர்களே. எனவே எதிர்வரும் தேர்தலில் மலையக மக்கள் முன்னணிக்கு அனைவரும் ஆதரவினை வழங்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் வேட்பாளரும் நுவரெலியா பிரதேச சபை உறுப்பினருமான சிவசாமி பத்மநாதன் தெரிவித்தார். அவருடைய நேர்காணல் வருமாறு;

**இந்தத் தேர்தலில் தாங்கள் களமிறங்குவதன் நோக்கம் என்ன?**

மலையக மக்கள் முன்னணியை உருவாக்கிய அமரர் பெ.சந்திரசேகரன், அமரர் வி.டி..தர்மலிங்கம் போன்றோர் மலையக மக்களை அரசியல் மயப்படுத்தி உரிமைகளுக்கான அரசியலை முன்னெடுத்தபோது, அவர்களுடைய கொள்கையால் நானும் பல தோழர்களும் ஈர்க்கப்பட்டு இந்த அமைப்பில் அங்கத்தவராகி, 1996 ஆம் ஆண்டு மலையக மக்கள் முன்னணியின் இளைஞர் அமைப்பில் தீவிர அரசியலை முன்னெடுத்தோம். தொடர்ந்து தலவாக்கலை நகர அமைப்பாளராகி 2006 ஆம் ஆண்டு நுவரெலியா பிரதேசசபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டினேன். மீண்டும் 2011 ஆம் ஆண்டு தேர்தலிலும் வெற்றியீட்டினேன். இந்நிலையில் நுவரெலியா பிரதேச அமைப்பாளர் என்ற வகையிலேயே எனது சேவைகள் அமைந்திருந்தன. மத்திய மாகாண சபைக்கு தெரிவாவதனூடாக எனது சேவையை விஸ்தரிக்க முடியுமென நினைக்கிறேன்.

**வெற்றியீட்டும் சந்தர்ப்பத்தில் இந்த மக்களுக்கு எவ்வாறான சேவைகளை முன்னெடுப்பீர்கள்?**

தோட்ட, நகர, கிராமப் பகுதிகளுக்கான உட்கட்டமைப்புப் பணிகளுடன் எமது மக்களின் உரிமைகளுக்கான குரலாய் மாகாணசபையில் செயற்படுவேன்.

**மலையக மக்களின் எவ்வாறான பிரச்சினைகளுக்கு முக்கியத்துவமளிப்பீர்கள்?**

மலையக மக்கள் முன்னணி தோட்டத் தொழிலாளர்களின் உட்கட்டமைப்பு மேம்பாட்டை மட்டும் கருத்தில் கொண்டு செயற்பட்டது கிடையாது. வரலாற்றில் உரிமைகளுக்காக குரல் கொடுத்து மலையக மக்களை தேசிய நீரோட்டத்தில் இணைக்க வேண்டும் என்பதே எமது தலைவரின் நோக்கமாகும். எனவே அவரால் வழிநடத்தப்பட்ட நாம் உரிமைகளுக்காகவே செயற்படுவோம். மலையக மக்கள் இன்று வீடு, கல்வி, தோட்டத் தொழிலாளர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியம் இன்மை என பல பிரச்சினைகளுக்கு ஆட்பட்டுள்ளனர்.


ரா. சிவசாமி பத்மநாதன்

எமது தலைவரின் திட்டத்தில் ஒன்றுதான், தோட்டத் தொழிலாளர்களுக்கு தனித்தனி வீடுகள் அமைக்கப்பட வேண்டும் என்பது. இதை மாகாண சபையினூடாக நடை முறைப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில் உறுதியாக உள்ளேன். அதேவேளை சிறுபான்மை மக்களின் நலனுக்காக கொண்டுவரப்பட்ட மாகாணசபையில் கடந்த காலங்களில் போதுமானளவு நன்மை கிடைக்கவில்லை. இருப்பினும் நடைபெறும் இத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது. காரணம் பதின்மூன்றாம் சரத்து நீக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டு வருகின்ற நிலையில் இத் தேர்தல் இடம்பெறுகின்றது. சிறுபான்மை மக்களுக்கு நன்மை பயக்கும் பல்வேறு விடயங்கள் இதில் உள்ளன. எனவே எதிர்காலத்தில் இம்முறைமை நீக்கப்படும்போது மாகாணசபைத் தேர்தல் என்பது தேவைப்படாது போய்விடும். எனவே இது நீக்கப்படக்கூடாது என்பதில் தெளிவாக உள்ளோம். இதற்காக ஒருமித்த வகையில் செயற்படுவோம். அதேபோல் இன்றைய முக்கிய பிரச்சினைகளில் ஒன்று தரிசுநிலம். இந்நிலத்தை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதற்கும், தேசிய பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுப்போம்.

**மலையக மக்கள் முன்னணி இத்தேர்தலில் ஒரு கூட்டணியாக களமிறங்கியுள்ள இவ்வேளையில் வெற்றிவாய்ப்பு எவ்வாறு உள்ளது?**

கடந்த மாகாணசபைத் தேர்தல் தவிர, மலையக மக்கள் முன்னணி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் கூட்டணியாக போட்டியிட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம் வெற்றியீட்டியுள்ளது. இம்முறை நாம் தேசிய கட்சிகளுடன் கூட்டிணையவில்லை. மாறாக மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அமைப்புகளுடனேயே இணைந்து போட்டியிடுகின்றோம். ஒவ்வொரு அமைப்புக்கென வாக்கு வங்கியுள்ளது. இவை ஒன்றிணையும் சந்தர்ப்பத்தில் கணிசமான வாக்குகளைப் பெறமுடியும் என எதிர்பார்க்கிறோம்.

**தலைவர் பெ.சந்திரசேகரனின் மறைவுக்குப் பின் மலையக மக்கள் முன்னணி எழுச்சியடைந்துள்ளதா?**

தலைவரின் மறைவுக்குப் பின் கட்சி மறுசீரமைக்கப்பட்டு மாற்றம் கண்டுவருகின்றது. அவரது பாரியார் சாந்தினிதேவி சந்திரசேகரன், அரசியல் துறைத் தலைவர் வே.இராதாகிருஷ்ணன் உட்பட உயர்பீடம் தற்போது சிறந்த முறையில் செயற்படுகின்றது. கட்சியின் சகல மட்டத்தினரும் பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றார்கள். மலையக மக்கள் முன்னணி மலையக அரசியலில் எத்தளவு தாக்கத்தை செலுத்துகிறது என்பதனை தோட்டத் தொழிலாளர்கள் முதல் சிவில் சமூகம் வரை உணர ஆரம்பித்துள்ளனர். எமக்கு இந்தளவு கருத்து சுதந்திரத்தை வழங்கியுள்ள அமைப்புக்கான மக்களின் தீர்ப்பை ஆவலுடன் நாமும் எதிர்பார்த்து செயற்படுகின்றோம்.

தி.தவராஜ்

**மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணி நடாத்தும் கருத்துக்கணிப்பு**

2013 ஆம் ஆண்டு மத்திய மாகாண சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில்

**மண்வெட்டி சின்னத்தில் இலக்கம் 13 இல் போட்டியிடுகின்ற**

**கலாநிதி ரிஷி செந்தில் ராஜ் அவர்கள்**

இந்த தேர்தலில் எடுக்கப்போகின்ற வாக்குகளின் எண்ணிக்கையை அண்ணளவாக சரியாகக் கணித்து சொல்பவருக்கு ரூபாய் 50,000/= பணப் பரிசாக வழங்கப்படும்

மலையகத்தில் மாற்றுசிந்தனையுள்ள புதிய தலைமைத்துவம் உருவாக்கப்பட வேண்டும் என்பதாலும், மதுசாரத்தின் அநீதிகளை எதிர்க்க நினைக்கும் படித்த மலையக இளைஞர், யுவதிகளின் அரசியல் சிந்தனையை ஊக்குவிக்கும் முகமாகவும் இந்த கருத்துக்கணிப்பு எம்மால் நடாத்தப்படுகின்றது.

**முடிவுத் திகதி - 20/09/2013**

**அனுப்ப வேண்டிய முகவரி:**
பொதுச்செயலாளர்,
மதுசாரத்திற்கு எதிரான தமிழ் இளைஞர் அணி
(அட்டன் கிளை),
இல. 62, மாணிக்கவத்தை, புதிய வீடமைப்புத்திட்டம்,
ரொசல்ல.

**வேலை வாய்ப்பு**

உங்கள் வாழ்க்கையை மேம்படுத்த இலங்கையில் பிரதான தொழிற்சாலைகளான ஜேம், கோர்டியல், சொக்கலட், பிஸ்கட், பால்மா, தேயிலை, புத்தகம், பென்சில் PVC க்ளவுஸ், பொலீத்தீன் போன்றவற்றுக்கு உற்பத்தி உதவியாளர்கள், தரம் பிரித்தல், லேபல் பொதியிடல், களஞ்சிய பிரிவிற்கு 18-55 ஆண், பெண் தேவை. சம்பளம் 20,000/-, 32,000/-, 40,000/- உணவு தங்குமிட வசதிகள் உண்டு. (தனி, குழு, நண்பர்கள், தம்பதியினர்) ஒரே தொழிற் சாலையில் தொழில் புரிய வாய்ப்பு உண்டு. வருகை தரும் நாளிலேயே வேலை வாய்ப்பு.

☎ : 077 - 8508118 / 077 - 0734757

(எமது காரியாலயங்களாக பதுளை, ஹட்டன், நுவரெலியா, கண்டி, இரத்தினபுரி)

**நிரந்தர தொழில் வெற்றிடங்கள்**

எம்மிடம் பல நிரந்தர தொழில் வெற்றிடங்கள் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (JSO, LSO, SSO,OIC) / மேசன், பெயின்டர், டைல்பாஸ், பிளம்பர், எலெக்ரீசன், கை உதவியாளர்கள் / நட்சத்திர ஹோட்டல்கள், ரெஸ்ரோரண்ட் போன்றவற்றுக்கு Kitchen helper, Room Boys, Chef Cook, Steward, Waiter / சுத்திகரிப்பாளர்கள் தேவை 18 - 55 வயது வரை ஆண், பெண் இருபாலாருக்கும் தொழில் அடிப்படையில் சம்பளம் 18,000/- - 40,000/- விரைவாக தொடர்பு கொள்ளுங்கள்.

☎ : 077 - 5561883

**தையல் கலை, அழகுக் கலை**

வயதெல்லை கிடையாது, சான்றிதழ் வழங்கப்படும்.

அழகுக் கலை NVQ முறைப்படி 6 மாத கால பயிற்சி

புதிய வகுப்புக்கள் ஆரம்பம்

- 1 மாதம் சாறி பிளவுஸ் பயிற்சி
- 6 மாதம் சகலவிதமான ஆடைகளுக்கான பயிற்சி
- 1 மாதம் சல்வார் பயிற்சி
- திரைச் சீலை
- வெட்ச் வேர்க்
- எம்ரோய்டிங் வகைகள்.

| கண்டி CSC | மாத்தளை நவோதயம் | கட்டுகஸ்தொட்டை Steps | கம்பளை IHS | நாவலப்பிட்டிய Computer Studies Center | ஹட்டன் லைசியம் Academy |
| --- | --- | --- | --- | --- | --- |
| Sep: 15, 17 9.00 AM | Sep: 15, 16 1.30 PM | Sep: 16 9.00 AM | Sep: 14 8.00 AM | Sep: 14 10.30 AM | Sep: 14 2.00 PM |

என்றும் தரத்துடன் திருமதி [illegible] 077-5454002, 077-5454110


# புதிர் BOX



## கண்ணாமூச்சி

கண்கள் சொல்லும் பார்வை யாருடையது? கண்டுபிடியுங்கள்


01




02




03



04



## சூப்பர் ரூப்பர்



ஒளிந்திருக்கும் முகம் எது கண்டுபிடியுங்கள்!



a விவேக்



b சிம்பு



c தனுஷ்




சொல்லுங்கள்

இதற்கான விடையை 27 பக்கம் பார்க்க...

பார்க்கலாம்...

**வாசகர்களின் கவனத்திற்கு!**

உங்கள் பகுதியில் இடம்பெறும் சம்பவங்கள், சிறுகதை, கவிதை, கட்டுரை என அனைத்து விதமான ஆக்கங்களையும் எமது முகவரிக்கு அனுப்பிவையுங்கள். தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.

முகவரி:
உதயசூரியன்
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்
இல.68, ஸ்ரேஷன்வீதி,
கொழும்பு 15.

மின்னஞ்சல்: thinaupcountry@yahoo.com

Fax: 0112540695

# உதயசூரியன் செய்திக்கு பலன்கள்!

டயகமயிலிருந்து நுவரெலியாவிற்கு சேவையிலீடு படுத்தப்பட்டிருந்த பஸ் நான்கு வருடங்களுக்கு முன் சேவை நிறுத்தம் செய்யப்பட்டதால் பயணிகள் படும் அல்லல்கள் குறித்தும் உதயசூரியன் செய்தி வெளியிட்டிருந்தது.

நுவரெலியா வைத்தியசாலைக்கும் மற்றும் பொதுச் சேவைகளை பெற்றுக்கொள்வதற்காகவும் டயகமயிலிருந்து செல்வோர் இந்த பஸ் சேவையின்றி பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இதனைச் சுட்டிக்காட்டியதோடு இந்த பஸ் சேவை மீண்டும் ஏற்படுத்தப்பட வேண்டும் என மக்கள் சார்பில் உதயசூரியனால் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது.

இச்செய்தியைத் தொடர்ந்து வெகுவிரைவில் பஸ் சேவை ஏற்படுத்தப்படும் என நுவரெலியா டிப்போ அதிகாரிகள் உறுதி கூறிய போதும் பஸ்சேவை ஈடுபடுத்தப்படவில்லை.

நுவரெலியாவிருந்து மெராயா வழியாக டயகம செல்லும் பாதை குன்றும் குழியுமாக இருப்பதால் பஸ் சேவையை ஏற்படுத்த முடியாது என்றும் காரணம் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் அப்பாதை செப்பனிடப்பட்டதுடன் ஹட்டன் டிப்போவிற்கு உரிய பஸ் சேவை கடந்த 06 ஆம் திகதி அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

***

நானுஓயா பிரதேசத்தில் ரயில் பாதையுடன் இணையும் வீதிகளில் எந்த ஒரு பாதுகாப்பு வேலிகளும்





இல்லாத நிலையில் அடிக்கடி விபத்துகள் இடம் பெறுகின்றன. இதுபற்றி சுட்டிக்காட்டி உதயசூரியன் செய்தி வெளியிட்டது. இதைத்தொடர்ந்து அதிகாரிகள் எடுத்த நடவடிக்கையின் பயனாகக் குறித்த இடங்களில் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டதோடு இருபத்தொரு பேருக்குவேலை வாய்ப்பும் (பொலிஸ் கமிட்டி உறுப்பினர்களாக) வழங்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக நானுஓயா கிளசோலைவச் சேரந்த ராஜா கருத்து தெரிவிக்கையில் உதயசூரியனுக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்க வேண்டும். எத்தனையோ பிரச்சினைகளை உதயசூரியனால் சுட்டிக்காட்டப்பட்டு சீர்செய்யப்படுகின்றது. உதாரணமாக நானுஓயா நகரில் அமைக்கப்பட்ட பஸ்தரிப்பு நிலையம் பாதை அபிவிருத்தி திட்டங்கள் தண்ணீர் வசதிகள் என்று கூறிக்கொண்டே போகலாம் என்றார்.

ஆட்டோ சாரதியான ஆர்.பாரதிராஜா கருத்துத் தெரிவிக்கையில் நாங்கள் புகையிரதப் பாதையைக் கடந்தே எங்கள் இருப்பிடங்களுக்கு செல்ல வேண்டும். பாதுகாப்பு வேலிகள் இல்லாத நிலையில் பெரும் சிரமங்களை அனுபவித்தோம். எமது பிரச்சினைகளை எடுத்துரைத்து நன்மைப் பயக்கும் உதயசூரியனுக்கு நன்றிகள் என்று கூறினார்.

சந்ரு நானுஓயா

# சூடு பிடிக்கும் முழந்தாள் தண்டனையும்

# முழந்தாளிட்டு வணங்கும் மாடும்!



ஆசிரியர் ஒருவரை அரசியல்வாதியொருவர் முழந்தாளிட வைத்து பகிரங்கமாக தண்டனை வழங்கிய சம்பவத்தையடுத்து முழந்தாளிடல் விவகாரம் நாட்டில் சூடுபிடித்தது எனலாம்.

பாடசாலை காலங்களில் தவறுகள் இழைத்துவிட்டு முழந்தாளிட்டு தண்டனை பெற்ற சம்பவங்களை யாரும் எளிதில் மறந்திருக்க முடியாது.

பெருந்தோட்டங்களை பொறுத்தவரையில் இரவு பாடசாலைகளிலேயே இவ்வாறான தண்டனைகள் அதிகமாக வழங்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக தோப்புக் கரணம் போடுதலும் அந்த இரவு பாடசாலைகளில் பிரசித்தமாகவிருந்தது. (தோட்டப்புறங்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக அந்த தோட்டத்தில் கல்விக்கற்றவர்களால் இரவு வேளையில் நடத்தப்படும் பிரத்தியேக வகுப்பே இரவு பாடசாலை என்பர்)

ஆக குறைந்தபட்ச தண்டனையான இந்த முழந்தாளிடல் தண்டனை இன்றைய காலக்கட்டத்தில் பாடசாலைகளில் இல்லாமல் போய்விட்டது.

ஆனால், அரசியல்வாதிகளிடத்திலும், பொலிஸ் உயரதிகாரிகள் மட்டத்திலும் முழந்தாளிட்டு தண்டனை வழங்கும் முறை இன்றும் நடைமுறையில் இருப்பது வியக்க வைப்பதாகவே இருக்கின்றது.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு சமூகமளிக்காத அரச அதிகாரியொருவரை அமைச்சர் மேர்வின் சில்வா மரத்தில் கட்டி வைத்து தண்டனை வழங்க ஆரம்பித்ததிலிருந்து அரச ஊழியர்களுக்கு எதிராக அரசியல்வாதிகளின் தண்டனைகள் தொடர்கின்றன.

புத்தளம், நவகத்தேகம நவோதய பாடசாலையில் ஆசிரியைக்கு வடமாகாண சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் உறுப்பினரான ஆனந்த சரத்குமார பாடசாலைக்கே சென்று பாடசாலை வளாகத்தில் வைத்து முழந்தாளிடவைத்து பகிரங்க தண்டனையை வழங்கியிருந்தார்.

முழங்கால்கள் தெரியும் வகையில் தொடர்ந்து சீருடையை அணிந்து வந்த மாணவிகளின் சீருடையிலுள்ள வாட்டியை பிரித்து முழங்கால் தெரியாதவகையில் சீருடையை சீர்படுத்தி ஆசிரியையே அரசியல்வாதியினால் இவ்வாறு தண்டிக்கப்பட்டார்.

ஆசிரியைக்கு அடுத்தப்படியாக பொலிஸாருக்கு முழந்தாள் தண்டனை வழங்கப்பட்ட சம்பவமொன்று கிழக்கு மாகாணத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து சென்ற பொலிஸ் அதிகாரியொருவரே பொலிஸ் சார்ஜன்களை சுமார் அரை மணிநேரமாக முழந்தாளிடவைத்து தண்டனை வழங்கியுள்ளார்.

இலஞ்சம் பெற்ற பொலிஸ் சார்ஜன் ஒருவரை தண்டிக்கும் வகையிலேயே இந்த தண்டனை அந்த நிலையத்தில் கடமையாற்றும் சகல சார்ஜன்களுக்கும் வழங்கப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

இரண்டு கைகளையும் உயர்த்தியவாறு முழந்தாளிட்டிருந்த சார்ஜன்களில் இருவர் மயங்கி விழுந்ததை அடுத்தே அந்த தண்டனை விவகாரம் அம்பலத்திற்கு வந்தது.

இவ்வாறு முழந்தாள் தண்டனை விவகாரம் நாட்டில் தற்போது சூடுபிடித்திருந்தாலும் இந்துக்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களின் வணக்க முறைமைகளில் முழந்தாள் பின்னிப் பிணைந்துள்ளது.

முழந்தாளிட்டு தண்டனை வழங்கப்படும் சம்பவங்கள் ஒருபுறம் அரங்கேற்றப்பட்டு கொண்டிருக்கின்ற சமயத்தில் காளை மாடொன்று முழந்தாளிட்டு வணங்கும் சம்பவமானது அனைவரையும் வெகுவாக ஈர்த்துள்ளது.

களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹொரனை, கோணபொலவைச் சேர்ந்த வர்த்தகரான எஸ்.டீ.டியுட்டர் என்பவர் வளர்க்கின்ற மாடே இவ்வாறு முழந்தாளிட்டு வணங்குகின்றது.

இறைச்சிக் கடைக்கு வழங்கப்படவிருந்த இந்த மாட்டை குறித்த வர்த்தகர் மீட்டு தன் தொழுவத்தில் வளர்த்து வருகிறார்.

இதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் குறித்த வர்த்தகரையும் அவரது வீட்டு அங்கத்தவர்களையும் அக்கிராமத்திலுள்ள விஹாரையின் தேரரரையுமே இந்த மாடு முழந்தாளிட்டு வணங்குகின்றது.

இறைச்சி கடைக்கு வழங்கப்படவிருந்த இந்த மாட்டை நான்கு வருடங்களுக்கு முன்னர் மீட்டெடுத்து வர்த்தகர் வளர்த்து வருகின்றார்.

நானும் எனது வீட்டைச் சேர்ந்தவர்களும் கூறினால் மட்டுமே மாடு முழந்தாளிட்டு வணங்கும் என வர்த்தகர் தெரிவிக்கிறார்.

முழந்தாள் தண்டனைக்கு மட்டுமல்ல வணக்க வழிபாடுகளின் போதும் பயன்படுத்தப்படுகின்றது என்பதனை பார்க்கின்றபோதும் மாடு முழந்தாளிட்டு வணங்கின்றது என்கின்றபோதும் முழந்தாளிட்டு தண்டனை வழங்குவோர் ஒன்றுக்கு இரண்டுமுறை சிந்திக்கத்தான் வேண்டும்.

- நாடோடி -



# நைசாக பேசி... ஊற்றிக் கொடுத்து....!

## நுவரெலியாவில் நிகழும் பகல் கொள்ளைகள்!



நாட்டில் கொலை, கொள்ளைகள், பாலியல் வல்லுறவுகள் வெகுவாக அதிகரித்துவிட்டன. என்னதான் விழிப்பாக இருந்தாலும் குற்றவாளிகளின் புதிய புதிய யுக்திகள் அப்பாவிகளை இந்தக் குற்றங்களுக்கு ஆட்பட வைத்து விடுகின்றன.

நுவரெலியா பகுதியில் அப்பாவிகளை ஏமாற்றி ஆட்டோவில் அழைத்துச் சென்று அவர்களின் உடைமைகளை சூறையாடும் கும்பல் ஒன்று அண்மைக்காலமாக தன் கைவரிசையைக் காட்டி வருவதாக தெரியவந்துள்ளது.

இக்கும்பலிடம் உடைமைகளை இழந்த பலர் பொலிஸாரிடம் புகார் தெரிவித்ததையடுத்து இக்கும்பலை வலைவீசிப் பிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட ஒருவர் இதுபற்றி தெரிவிக்கையில்,

நான் ஒரு கட்சித் தொண்டன். தேர்தல் பணிகளில் ஈடுபட்டிருந்த வேளை, மூன்று பேர் பச்சை நிற முச்சக்கரவண்டியில் வந்து அங்கே நிறுத்தினார்கள். நாங்கள் இரத்தினக்கல் வியாபாரம் செய்கின்றவர்கள். வெளிநாட்டிலிருந்து வந்திருக்கின்றோம். நுவரெலியாவில் தங்க எங்களுக்கு நம்பிக்கையான ஒரு தங்குமிடத்தை ஏற்பாடு செய்துத் தாருங்கள் எனக் கேட்டனர்.

எனக்குத் தெரிந்த ஒரு விடுதியின் முகவரியை அவர்களுக்குக் கொடுத்தேன். அதற்கு அவர்கள் இல்லை ஐயா நீங்கள் எங்கள் உடன் வந்து விடுதியைக் காட்டுங்கள் எனக் கூறினர். நானும் வழிகாட்டுவதற்காக அவர்களுடன் முச்சக்கர வண்டியில் ஏறிச் சென்று விடுதியையும் காட்டினேன். அங்கு முற்பணமாக 500/= கட்டிய பின் என்னை ஏற்றிய இடத்திலேயே கொண்டு சென்று விடுவதாகக் கூறி மறுபடியும் ஏற்றி வந்தனர்.

மீண்டும் நுவரெலியா நகரை நோக்கி வரும் வழியில் என்னை மது அருந்த அழைத்தனர். நான் மறுத்தேன். என்னை வற்புறுத்தாத அவர்கள் குளிர்பானம் ஊற்றிக் கொடுத்தனர். அதன் பிறகு எதுவும் எனக்கு நினைவில் இல்லை. கண்விழித்த போது வைத்தியசாலையில் கிடந்தேன் என்றார்.

குறித்த நபரிடம் இருந்த 25000/= ரொக்கப்பணம் உட்பட இரண்டு பவுண் தங்கச் சங்கிலி, ஒன்றரை பவுண் மோதிரம் போன்றவற்றை அபகரித்ததோடு அவரை கந்தப்பளை குளத்தருகே சகதியில் அமிழ்த்திவிட்டுச் சென்றுள்ளனர்.

முழு உடம்பும் சகதியில் அமிழ்ந்து தலை மாத்திரம் வெளியில் தெரிய சிக்குண்டு கிடந்த இந் நபரை கண்ட வழிப்போக்கர் ஒருவர் மீட்டெடுத்து நுவரெலியா பொது வைத்தியசாலையில் அனுமதித்ததோடு பொலிஸாருக்கும் தெரிவித்துள்ளார்.

குறித்த கொள்ளைக் கோஷ்டியினர் தமிழிலேயே கதைத்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான நிகழ்வுகள் நுவரெலியாவில் அண்மைக்காலமாக அதிகமாக நடப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து மக்கள் விழிப்போடு நடந்து கொள்ளவேண்டும் எனவும் முன்பின் அறியாதவர்கள் அழைத்தால் அவர்களுடன் செல்வதை தவிர்க்கும்படியும் பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

சந்ரு நானுஓயா





## 5 வயதே நிரம்பிய விமான ஓட்டுநர்

சீனாவைச் சேர்ந்த 5 வயதுச் சிறுவன் ஒருவன் உலகின் மிக இளம் வயதில் விமான ஓட்டுநராகி கின்னஸ் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்துள்ளான். டுவோடுவோ என்ற செல்லப் பெயரால் அழைக்கப்படும் ஹேயிடே எனும் இச்சிறுவன் ஆகஸ்ட் 31 ஆம் திகதி பீஜிங் உயிரியல் பூங்காவிற்கு மேலாக அல்ட்ராலைட் விமானம் ஒன்றை 35 நிமிடம் ஓட்டி கின்னஸ் சாதனை புரிந்ததாக செவ்வாய்க்கிழமை சீன மீடியா அறிவித்துள்ளது. டுவோடுவோ விமானம் ஓட்டுவதைக் கற்றுக்கொண்ட ஏவியேஷன் கிளப்பின் இயக்குநரான ஷாங் யொங்குயி இது பற்றிக் கூறுகையில் இச்சிறுவன் 30 ஓட் தூரத்துக்கு விமானத்தை ஓட்டியிருந்ததாகக் கூறியுள்ளார்.

## வைரத் தோட்டை விழுங்கிய கோழி கொல்ல மனமில்லாத எஜமானி




இங்கிலாந்தின் பெர்க்ஷயர் பகுதியில் வசிக்கும் 38 வயதான கிளாரி லெனான் எனும் பெண்மணி வீட்டில் கோழி ஒன்றை செல்லமாக வளர்த்து வருகிறார். அதற்கு சாரா என்று பெயரிட்டுள்ளார்.

சாராவை தோளில் வைத்துக் கொண்டு வீட்டில் சுற்றிக் கொண்டிருந்தார். அப்போது, செல்ல சாரா திடீரென கிளாரியின் காதில் இருந்த வைரத் தோட்டை கொத்தி விழுங்கி விட்டது. எதிர்பாராத விதமாக கோழியின் தொண்டைக்குள் வைரத்தோடு சென்று விட்டதனால் அதிர்ச்சி அடைந்தார் சாரா.

இதை காதலர் ஆடம் கிளாரிக்கு அன்பு பரிசாக வழங்கி இருந்தார். அதனால் கோழியை உடனடியாக டாக்டரிடம் கொண்டு சென்றார். எக்ஸ்ரே எடுத்து பார்த்த போது, கோழியின் வயிற்றில் தோடு சிக்கி இருப்பது உறுதியானது. ஆனால், சிக்கலான பகுதியில் தோடு இருந்ததால் அதை ஆபரேஷன் மூலம் வெளியில் எடுக்க முடியாது என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். கோழியின் இரண்டாவது இரைப்பையில் சிக்கியுள்ள வைரத் தோட்டை சத்திரசிகிச்சை மூலம் அகற்றுவது கடினம். அப்படியே செய்தாலும் கோழியின் உயிருக்கு உத்தரவாதம் இல்லை. உள்ளே தோடு இருந்தால் அதன் உயிருக்கு எந்த பாதிப்பும் வராது என்று டாக்டர்கள் கூறினர். அதனால் சாராவுடன் வீட்டுக்கு வந்து விட்டார் கிளாரி.

இதுகுறித்து கிளாரி கூறுகையில்; வைரத்தோடு எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் என் சாரா. அதைக் கொன்று தோட்டை எடுக்க எனக்கு மனமில்லை. சாரா அதிக பட்சமாக இன்னும் 8 ஆண்டு உயிர் வாழும். அதுவரை காத்திருப்பேன் என்று கூறியுள்ளார்.



## மனைவியின் வினோத ஆசையை நிறைவேற்றிய கணவர்

ஜிம் மற்றும் மேரி எனும் கலிபோர்னியாவைச் சேர்ந்த தம்பதிகள் 3 வருட கடின உழைப்பின் பின்னர் காண்டாமிருகம் ஒன்றினை உருவாக்கியுள்ளனர்.

எனினும் இதற்கு பின்னால் உள்ள கதை சுவாரஸ்யமாகவே காணப்படுகின்றது.

அதாவது மேரி தனது கணவரை பார்த்து வைன் போத்தலில் உள்ள தக்கைகளை பயன்படுத்தி பொழுதுபோக்காக ஏதாவது ஒரு உருவத்தை செய்யுமாறு கேட்டுள்ளார்.

கணவரும் 20 வருடங்களாக தம்மால் சேகரிக்கப்பட்ட தக்கைகளை கொண்ட ஒட்டகச்சிவிங்கி ஒன்றை வடிமைக்கவுள்ளதாக நெடுநாட்களாக கூறிவந்துள்ளார்.

எனினும் அதை செய்தபாடே இல்லை. இருந்தபோதும் கடந்த 3 வருடங்களுக்கு முன்னர் காண்டாமிருகம் ஒன்றினை வடிவமைக்க ஆரம்பித்து தற்போது வெற்றியடைந்துள்ளனர்.

12 அடிகள் நீளமான இந்த காண்டாமிருகத்தை வடிவமைப்பதற்கு சுமார் 12,000 தக்கைகள் பயன்படுத்தியுள்ளனர்.

## இணையத்தைக் கலக்கிக் கொண்டிருக்கும் அடர்த்தியான முடியுடன் காணப்படும் பூனை

அடர்த்தியான முடியுடன் காணப்படும் பூனை ஒன்று இணையத்தை கலக்கிக் கொண்டிருக்கிறது.

அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த ஆனி மேரி (வயது 52), கனோல் மியாவ் என்ற பூனையை வளர்த்து வருகிறார். இந்தப் பூனையின் உடலில் மிக அடர்த்தியுடன் 22.87 செ.மீ. நீளமுள்ள முடி உள்ளது. இதனை பராமரிக்க 2 ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வாரத்துக்கு மூன்று நாட்களுக்கு பூனைக்கு ஷாம்பு குளியல், டிரையர், முடி பராமரிப்பு, பியூட்டிஷியன் மேற்பார்வை போன்ற கவனிப்புகளும் நடந்து வருகிறது.



தற்போது இந்த பூனைதான் இணையத்தை கலக்கிக் கொண்டிருக்கிறது. இதற்கான பிரத்தியேக இணையத்தளங்களும் தொடங்கப்பட்டுள்ளது. பேஸ்புக்கில் இதற்கு தினமும் 2 ஆயிரம் பேர் வரை லைக் கொடுத்து வருகின்றனர். உலகளவில் பூனையில் புகழ் பரவி உள்ளதால், கின்னஸ் புத்தகத்தில் பதிவு செய்ய பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறாராம் ஆனி மேரி. கறுப்பு - வெள்ளை நிறத்தில் ஆங்காங்கே பிரவுண் புள்ளிகளோடு உள்ள இந்த பூனையை வெளியில் அழைத்துச் சென்றால் நடிகர், நடிகைகளுக்கு இல்லாத அளவுக்கு வரவேற்பாம்.

# விபரீத சமாதானம்

தோழியின் மகள் 1 ஆம் வகுப்பு படிக்கிறாள். பாடசாலையில் அவளது ஆசிரியை என்ன காரணத்துக்காகவோ அவளை அடித்திருக்கிறார். இதை வீட்டில் வந்து அழுதபடி தன் அம்மாவிடம் அச்சிறுமி சொல்லியிருக்கிறாள். உடனே என் தோழி அவளை சமாதானப்படுத்துவதற்காக, 'அழாதம்மா... நாளைக்கு நான் ஸ்கூலுக்கு வந்து உன்ன அடிச்ச அந்த டீச்சர் கையை உடைக்கிறேன் சரியா...!' என்று கூறி சமாதானப்படுத்தியிருக்கிறாள். இதனால் அழுகையை நிறுத்திய அந்தச் சிறுமி வழக்கம்போல விளையாடி, இரவு உணவை அருந்திவிட்டு உறங்கி, மறுநாள் பள்ளிக்குச் சென்றிருக்கிறாள். தன் அம்மா சொன்னதை மறந்திருப்பாள் என்று பார்த்தால் நேராக தன்னை அடித்த ஆசிரியையிடம் சென்று, 'நேற்று என்னை அடிச்சிங்கல்ல... இருங்க... எங்க அம்மா வந்து உங்க கையை உடைப்பாங்க...!' என்று கூறியிருக்கிறாள்.

அதிர்ந்துபோன அந்த ஆசிரியை, உடனே அச்சிறுமியை அழைத்துக் கொண்டு அதிபரிடம் சென்று முறைப்பாடு செய்துள்ளார்.

அதிபர் மறுநாள் பெற்றோரை அழைத்துக்கொண்டுதான் பாடசாலைக்கு வரவேண்டும் என உத்தரவிட்டுவிட்டார்.

தோழி என்ன ஏதென்று அறியாது பாடசாலை செல்ல ''குழந்தைகிட்ட இப்படி நீங்க சொல்லலாமா? குழந்தை தப்பு செய்ததாலதானே கண்டிச்சோம். குழந்தையை சமாதானப்படுத்த நீங்க இப்படி சொன்னீங்கன்னா, எப்படி குழந்தை திருந்துவா?'' என்று தோழியை கடுமையாக ஏசியிருக்கிறார் அதிபர்.

என் தோழி தன் தவறை உணர்ந்து அந்த ஆசிரியையிடம் மன்னிப்புக் கேட்டாள்.

உண்மைதான். குழந்தை தாயிடம் புகார் செய்தால் முதலில் நீ என்ன தப்பு செய்தாய் என்று விசாரித்து. தன் குழந்தை மீது தப்பு இருந்தால் அவளுடைய தவறை புரியவைக்க வேண்டுமே தவிர, அதற்காக அடுத்தவர்களை குற்றம் சாட்டி அவர்களை குழந்தை முன் திட்டினால் அடுத்த முறை குழந்தை அதே தப்பை செய்வாள் என்பது பல பாசக்கார தாய்மார்களுக்கு புரிவதில்லையே!



# என்னாச்சி...!

## தமிழ் பாட்டால் வந்த சிக்கல்

சில வாரங்களுக்கு முன் பெட்டாவில் இருந்து மொரட்டுவ செல்லும் பஸ்ஸில் நான் ஏறினேன். பஸ்ஸில் ஏறியதும் எனது காதில் நல்ல அதுவும் இடைக்கால தமிழ் பாட்டு கேட்டது. நடத்துநர் தமிழர் என்பதால் தமிழ்பாட்டுகளை ஒலிபரப்பினார். அன்று அந்த பஸ்சில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாகத்தான் இருந்தனர். நான் இருக்கும் இடத்தில் இருந்து இரண்டு சீட்கள் தள்ளி அமர்ந்திருந்த ஒரு பெரும்பான்மையினப் பெண் அந்த பாடல்களைக் கேட்டு முகம் சுளித்தார். அருகிலிருந்த சிங்கள நபரிடம் அதுபற்றி முணுமுணுக்கவும் செய்தார்.

அவ்வேளை குறித்த பெண்மணிக்கு மொபைல் மூலம் அழைப்புவரவே அதை எடுத்து காதில் வைத்துக் கொண்டு ''பைத்தியக்காரர்கள் இவ்வளது சத்தமாக பாட்டு போடுகிறார்கள். அதனால் போனில் கதைக்கக்கூட முடியவில்லை'' என்று கத்தி சொல்லிவிட்டு போனை கட் செய்தார்.



உண்மையில் பயணிகளுக்கு இடைஞ்சலாக இருந்தால் பஸ்ஸில் பாட்டுப் போடுவது தவறுதான். பாட்டை நிறுத்தினால் நல்லது என நானும் எண்ணிக் கொண்டேன். சிறிது நேரத்தில் அந்தப் பெண்மணியின் அருகிலிருந்த நபர் எழுந்து நடத்துநரிடம் சிங்களப் பாட்டை போடுங்கள் என கேட்டுக் கொண்டார். நடத்துநர் என்ன நினைத்தாரோ தெரியாது. சிங்கள பைலாப் பாடலை சத்தமாக ஒலிபரப்பினார்.

பஸ்ஸில் காது கிழியும் அளவுக்கு பைலா பாட்டு போட்டார்கள். குறித்த பெண்மணியின் முகத்தில் வெற்றிப் பெருமிதத்தைக் காணமுடிந்தது. அந்தப் பெண்மணிக்கு பஸ்ஸில் பாட்டுப் போட்டது பிரச்சினையில்லை. அது தமிழ்பாட்டு என்பதுதான் பிரச்சினை என்று புரிந்தது.

நம்நாட்டு ஜனாதிபதி தமிழ் பேசுகிறார். ஆனால், தமிழனுக்கு இந்த நாட்டில் எத்தகைய உரிமையும் சுதந்திரம் இருக்கிறது என்பதற்கு இந்த விடயம் ஒரு சான்று!



## தற்புகழ் பாடும் நிகழ்வுகள்

கடந்த வாரம் நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் பக்திப்பரவசமாக நடந்தேறியது அனைவரும் அறிந்ததே.

இந்நிகழ்வில் இலங்கையின் சில வானொலிகளும் போட்டி போட்டுக்கொண்டு அங்கிருந்து நேரலையாக நிகழ்ச்சிகளை வழங்கின. நல்லூர் கோவிலுக்கு வருபவர்கள் இவர்களது கலையகத்தை பார்வையிட்டு தங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டதோடு, அறிவிப்பாளர்களையும் சந்தித்து உரையாடினர். பின்னர் அவர்கள் குரல் மூலமாக தங்கள் வானொலியைப் பற்றி கருத்துக்கள் சொல்லவும் முன்னுரிமை வழங்கப்பட்டது.

இதில் என்னவொரு வேடிக்கை என்றால், சைவமும் தமிழும் தழைத்தோங்கிய யாழ் மண்ணில், அநேகமான நேயர்கள் ''நான் நல்லூருக்கு வந்ததே கடவுளை தரிசிக்க அல்ல. குறித்த வானொலி கலையகத்தை பார்க்கவும் மற்றும் தன் உள்ளம் கவர்ந்த அறிவிப்பாளரை நேரில் சந்திக்கவும்தான்'' என்று உருகினர். அதைக் கேட்டு சில அறிவிப்பாளர்கள் ஆரவாரித்து மகிழ்ந்தனர். இவ்வாறான தற்புகழ்பாடும் நிகழ்வுகளே அதிகம் ஒலிபரப்பாகியது. அதிலும் அங்கு வந்திருந்த நேயர்கள் குத்துப்பாடல்களையே அதிகம் விரும்பிக் கேட்டனர். நல்லூருக்கு வந்த இளைஞர் பட்டாளம் இறைவழிபாட்டைவிட முழுக்கமுழுக்க இந்தக் கலையகங்களையே முகாமிட்டிருந்ததைக் காணமுடிந்தது.

யாழ் மண்ணுக்கே சென்று அங்குள்ள நிகழ்வுகளை தொகுத்து வழங்கியதும், கந்தனின் புகழை பரப்பியதும் நல்ல விடயமே. ஆனால், இவ்வாறான சில முகம் சுளிக்கும் நிகழ்வுகளை தவிர்த்துக் கொண்டால் நல்லதல்லவா?

தகவல் தொகுப்பு ஆர்.அபி

தினக்குரல்
Voice of Students
இலவச இணைப்பிதழ்
வெள்ளி தோறும்
100% NATURAL

# விதயாதரம்

கல்வியால் ஆகாதது ஒன்றுமில்லை

## க.பொ.த.(சா/த ) மாணவர்களுக்குரியது

அன்பார்ந்த மாணவச் செல்வங்களே! நீங்கள் இவ்வாண்டு நடைபெறவுள்ள க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ளீர் களாயின் எமது கல்விக்குரலுடன் இணைந்து கொண்டு கணித பாடத்தில் சித்தியை இலகுவாகப் பெற்றுக் கொள் ளுங்கள்.

கடந்த கால வினாப்பத்திரங்களில் கேட்கப்பட்ட வினாக்களை அடிப்படையாகக் கொண்டு பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்களை ஆராய்ந்து அதன் படி முறையையும் பயிற்சியையும் இங்கு தருகின்றோம்.

வெள்ளிதோறும் இவ்வினாக்களுக்குப் பயிற்சி செய்து வாருங்கள். நீங்களும் கணிதபாடத்தில் சித்தியடைந்து உயர்தரக் கல்வியை தொடரமுடியும்.

கணிதம் பகுதி – I A இல் உள்ள முதல் பத்து வினாக்களுக்கான 01 புள்ளிக்கு கற்றல்.....

### அலகு I
### வாக்கிய வினா

**பாடக்குறிப்பு –: புதிய பாடத்திட்டத்தில் கடந்த 4வருடங்களாக வாக்கிய வினா என்ற பாடப்பரப்பிலிருந்து வினாக்கள் கேட்கப்படுகின்றன.**

1. பல பொருளின் விலை தரப்பட்டு ஒரு பொருளின் விலையைக் கணித்தல்.
2. ஒரு பொருளின் விலை தரப்பட்டுப் பல பொருளின் விலையைக் கணித்தல்.
3. ஒரு பொருளை விலைக்கு வாங்கி அதற்காகப் பணம் செலுத்தும் போது கிடைக்கும் மீதிப்பணம் காணல்.
4. ஒரு பொருளின் விற்பனை மூலம் கிடைக்கும் இலாப நட்டம் கணித்தல்.

இந்த அமைப்பில் ஏதாவதொரு வினா கேட்கப்படலாம். இவ்வினாவில் தசமப் பெருக்கலும் கருத்தில் கொள்ளப்படும். எனவே, இவ்வினாவிற்கு விடையளிக்கும் போது நடைமுறைவாழ்க்கையுடன் ஒப்பீட்டு விடையளித்தால் ஒரு புள்ளியை இலகுவாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

**கடந்த கால வினாப்பத்திரங்களில் எவ்வாறு வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன என்று பார்ப்போம்.**

**01. 2011 டிசெம்பர் – வினா 01**

8 பேனாக்களின் விலை ரூ.72 எனின், ஒரு பேனையின் விலையைக் காண்க.

**விடை –:** $\frac{72}{8} = 9$ரூபா

**02. 2010 டிசெம்பர் – வினா 05**

3 தோடம்பழங்களின் விலை ரூ.72 எனின், ஒரு தோடம்பழத்தின் விலை யாது?

**விடை –:** $\frac{72}{3} = 24$ரூபா

**03. 2009 டிசெம்பர் – வினா 01, 05**

1. ரூ.62 விலையுள்ள பொருள்களுக்காகப் பணத்தைச் செலுத்துவதற்கு ரூ.100 தாளைக் கொடுக்கும் போது கிடைக்கும் மீதிப்பணம் யாது?
   **விடை –: மீதிப்பணம் 100 – 62 = 38ரூபா**
2. ரூ.450 இற்கு வாங்கிய ஒரு கதிரையை ரூ.425 இற்கு விற்கும் போது ஏற்படும் நட்டம் யாது?
   **விடை –: 450 – 425 = 25ரூபா நட்டம்**

**04. 2008 டிசெம்பர் – வினா 01**

ஒன்று ரூபா12.50 வீதம் 6பேனைகளை வாங்கத் தேவையான பணத்தைக் காண்க.

**விடை –: 12.50 X 6 = 75ரூபா**

**05. 2007 டிசெம்பர் – வினா 01**

ரூ.50இற்கு வாங்கிய ஒரு பொருளை ரூ.65இற்கு விற்கும் போது கிடைக்கும் இலாபம் யாது?

**விடை –: 65 – 50 = 15ரூபா**

**06. 2006 டிசெம்பர் – வினா 01**

ஒன்று ரூ.3.50வீதம் 5 பென்சில்களைக் கொள்வனவு செய்யக் கொடுக்க வேண்டிய தொகை எவ்வளவு?

**விடை –: 3.50 X 5 = ரூ.17.50**

### எதிர்பார்க்கை வினாக்கள்

01. ஒரு பேனையின் விலை ரூ13.50 எனின், 5பேனைகளின் விலை யாது?

02. ஒரு பென்சிலின் விலை ரூ4.50 எனின், 3பென்சில்களின் விலை யாது?

03. 3 அப்பிள்களின் விலை ரூ.36 எனின், ஒரு அப்பிளின் விலை யாது?

04. 5தேங்காய்களின் விலை ரூ.75 எனின், ஒரு தேங்காயின் விலை யாது?

05. ரூ.72இற்குப் பொருட்களை வாங்கும் ஒருவர், 100ரூபா தாளைக் கொடுக்கும் போது அவருக்குக் கிடைக்கும் மீதிப்பணம் யாது?

06. ரூ.50 தாளைக் கொடுத்து 24ரூபா பெறுமதியான ஒருபொருளை வாங்குபவருக்கு மீதியாகக் கிடைக்கும் பணம் யாது?

07. ரூ.150இற்கு வாங்கிய பொருளொன்றை ரூ175இற்கு விற்கும் ஒருவருக்குக்கிடைக்கும் இலாபம் யாது?

08. ரூ.250இற்கு வாங்கிய பொருளொன்றை ரூ.300இற்கு விற்கும் ஒருவருக்குக்கிடைக்கும் இலாபம் யாது?

09. ரூ.180இற்கு வாங்கிய பொருளொன்றை ரூ.170இற்கு விற்கும் ஒருவருக்கு ஏற்படும் நட்டம் யாது?

10. ரூ.270இற்கு வாங்கிய பொருளொன்றை ரூ.265இற்கு விற்கும் ஒருவருக்கு ஏற்படும் நட்டம் யாது?

11. ஒரு பென்சிலின் விலை ரூபா. 5.50 எனின், ஒருடசின் பென்சிலின் விலை யாது?

12. ஒரு டசின் பேனாவின் விலை ரூபா. 156 எனின், ஒரு பேனாவின் விலை யாது?

13. 1kg சீனியின் விலை ரூபா.96 எனின், 500g சீனியின் விலை யாது?

14. 1kg தேயிலையின் விலை ரூபா. 360 எனின், 250g மாவின் விலை யாது?

15. 100g தேயிலையின் விலை ரூபா. 45 எனின், 1kg தேயிலையின் விலை யாது?

16. 250g சீனியின் விலை ரூபா. 24 எனின், 1kg சீனியின் விலை யாது?

17. ஒரு மீற்றர் துணியின் விலை ரூபா. 130 ஆகும். அத்துணியின் 50சென்ரிமீற்றரின் விலையைக் காண்க.

18. ஒன்று ரூபா. 2.75 ஆன 28 வாழைப்பழங்களின் விலை யாது?

19. ஒரு பேனையின் விலை ஒரு பென்சிலின் விலையின் மூன்று மடங்காகும். ஒரு பேனையின் விலை ரூ.12 எனின், ஒரு பென்சிலின் விலையைக் காண்க.

20. அரை டசின் பென்சிலின் விலை ரூபா. 36 எனின், ஒரு டசின் பென்சிலின் விலை யாது?

**முக்கிய குறிப்பு :- இவ்வினா பணம் சார்ந்த வினா என்பதால் "ரூபா" என்று அலகு குறிப்பிடப்படல் வேண்டும். "ரூபா" என்ற அலகு குறிப்பிடாது. இலக்கத்தை, மட்டும் விடையாக அளித்தால் புள்ளிகள் வழங்கப்பட மாட்டா.**

## அலகு 2
## பின்னங்கள்

பாடக்குறிப்பு -: புதிய பாடத்திட்டத்தில் கடந்த 4வருடங்களாக பின்னங்கள் என்ற பாடப்பரப்பிலிருந்து வினாக்கள் கேட்கப்படுகின்றன.

1. இரு பின்னங்களின் கூட்டல், கழித்தல், பெருக்கல் என்பவற்றில் வினா கேட்கப்படல்.
2. அட்சரகணிதப் பின்னங்களின் கூட்டல், கழித்தல்
3. நிழற்றப்பட்ட உருவை முழுவுருவின் பின்னமாக எழுதுதல்.
4. பின்னத்தை உருவில் நிழற்றிக் காட்டுதல்.
5. முழு எண்ணின் பகுதியைக் காணல்.
6. சமவலுப் பின்னத்தை எழுதுதல்.

**கடந்த கால வினாப்பத்திரங்களில் எவ்வாறு வினாக்கள் கேட்கப்பட்டுள்ளன என்று பார்ப்போம்.**

**01. 2012 டிசெம்பர் – வினா 01**

பெறுமானத்தைக் காண்க -: $\frac{1}{5}+\frac{2}{5}$ விடை-: $\frac{3}{5}$

**02. 2011 டிசெம்பர் – வினா 01**


சுருக்குக-: $\frac{4}{a}-\frac{3}{a}$ விடை-: $\frac{1}{a}$

**03. 2010 டிசெம்பர் – வினா 01**


சுருக்குக -: $\frac{1}{5} \times \frac{1}{5}$ விடை-: $\frac{1}{25}$

**04. 2008 டிசெம்பர் – வினா 03**

உருவில் $\frac{1}{3}$ பகுதியை நிழற்றுக.




விடை-:



**04. 2007 டிசெம்பர் – வினா 03**

முழு உருவில் நிழற்றப்பட்டுள்ள பின்னம் யாது?



விடை -: $\frac{4}{8}$ அல்லது $\frac{2}{4}$ அல்லது $\frac{1}{2}$

**05. 2004 டிசெம்பர் – வினா 04, 11**

01. $\frac{1}{3}$ இற்கு ஒரு சமவலுப் பின்னத்தை எழுதுக.

விடை -: $\frac{2}{6}$ அல்லது $\frac{3}{9}$ அல்லது $\frac{4}{12}$

02. இங்கே நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம்?



விடை -: $\frac{1}{12}$

**06. 2002 டிசெம்பர் – வினா 06**

ரூ. 400 இன் $\frac{1}{5}$ எவ்வளவு? விடை -: $400 \times \frac{1}{5}$ = ரூ.80.00

# க.பொ.த.(சா/த ) மாணவர்களுக்குரியது




அன்புள்ள மாணவச் செல்வங்களே!

இவ்வாண்டு நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள நீங்கள் தமிழ் மொழியும் இலக்கியமும் பாடத்தில் அதிவிசேட சித்தி (A தர) பெற வாழ்த்துக்கள்.

* மாணவர்கள் கவனிக்க வேண்டியவை:

* க.பொ.த (சா/த) பரீட்சை வினாத்தாள் அமைப்பு முறையைச் சரியாக விளங்கிக் கொள்ளுதல்.

* வினாக்களுக்கு எவ்வாறு மிகச் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடைகளை எழுதுவது என்பதை விளங்கிக் கொள்ளுதல்.

*இவற்றின் மூலமே அதிக புள்ளிகளைப் பெற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற முடியும்.க.பொ.த. சாதாரணதர தமிழ்மொழியும் இலக்கியமும் என்ற பாடத்திட்டத்தின் பரீட்சை வினாத்தாளுக்கு ஏற்றவாறு மிக இலகுவான செய்முறை விளக்கங்களுடன் எமது வழிகாட்டல் அமையவுள்ளது. நன்றாகப் படித்த மாணவர்கள் கூட சில வினாக்களுக்கு விடை எழுதும் முறை தெரியாது குறைந்த மதிப்பெண்களைப் பெறுகிறார்கள். எமது இந்த வழிகாட்டலில் அத்தகைய இடங்கள் சுட்டிக்காட்டப்பட்டு உங்களுக்குத் தேவையான விளக்கங்கள் தரப்படும்.நீங்கள் ஆர்வத்துடன் இந்த வழிகாட்டலைப் பின்பற்றி வினாக்களுக்கு விடை எழுதி பயிற்சி செய்து வந்தால் சிறந்த பெறுபேறு கிடைப்பது திண்ணம்.

## தமிழ்மொழியும் இலக்கியமும் வினாத்தாள் அமைப்பு:-

### வினாத்தாள் -I

நேரம் : ஒரு மணித்தியாலம்
மொத்தப்புள்ளிகள் 40

பல்தேர்வு வினாக்கள்

எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
ஒரு வினாவுக்கு 01 புள்ளி வீதம் வழங்கப்படும்.

### வினாத்தாள் -II

நேரம் : இரண்டு மணித்தியாலங்கள்
மொத்தப்புள்ளிகள் 80

எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

01. குறுவிடை வினாக்கள் 10.ஒரு வினாவுக்கு 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்.
02. கட்டுரை எழுதுதல் 25 புள்ளிகள் (வழிகாட்டற் குறிப்புகளுடனான நான்கு கருப்பொருள்களுள் ஒன்றினைத் தெரிவு செய்தல் வேண்டும்)
03. சுருக்கம் எழுதுதல் 10 புள்ளிகள்.
04. கிரகித்தல் தொடர்பான வினாக்களுக்கு 10 புள்ளிகள்.
05. நடைமுறைத் தேவைகளுக்காக எழுதுதல் 15 புள்ளிகள்.

### வினாத்தாள் -III

நேரம் : இரண்டு மணித்தியாலங்கள்
மொத்தப்புள்ளிகள் 80

விதிக்கப்பட்ட தமிழ் இலக்கியப் பாடநூலில் ஏழு வினாக்கள் தரப்படும்.

நான்கு கட்டாய வினாக்களுக்கும் மேலும் ஒரு வினாவுக்கும் விடையளித்தல் வேண்டும்.

1,2,3,4 ஆகிய வினாக்கள் கட்டாயமானவை.5,6,7 ஆம் வினாக்களில் ஒன்றினை மட்டும் தெரிவு செய்து விடை எழுதுதல் வேண்டும்.

1. குறுவிடை வினாக்கள் 10.
   ஒரு வினாவுக்கு 2 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்.
2. செய்யுள் பகுதியும் உரைநடைப் பகுதியும் சேர்ந்த நான்கு உபபகுதிகள்.ஒரு உப பகுதிக்கு 5 புள்ளிகள் வீதம் மொத்தம் 20 புள்ளிகள்.
3. விருப்பு வினாக்கள் இரண்டு வழங்கப்படும். அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும்.15 புள்ளிகள்.
4. விருப்பு வினாக்கள் 2 வழங்கப்படும். அவற்றுள் ஒன்றுக்கு விடையளித்தல் வேண்டும். 15 புள்ளிகள்
5. 5,6,7 ஆகிய வினாக்களில் யாதேனும் ஒரு வினாவுக்கு விடையளித்தல் வேண்டும். 10 புள்ளிகள்.

பகுதி-I,பகுதி-II,பகுதி-III மூன்று வினாத்தாள்களினதும் மொத்தப்புள்ளி 200 இரண்டால் வகுத்து 100 புள்ளிகள் வழங்கப்படும்.

### தமிழ்மொழியும் இலக்கியமும்

பகுதி- I இல் இரண்டு பிரதான பகுதிகளை நாம் தயார்படுத்த வேண்டும்.

1.மொழிவளம்
2.தமிழ் இலக்கணம்

**மொழிவளம் என்பதில் அடங்கும் விடய அலகுகள்**

1. அருஞ்சொற்கள்
2. மரபுத்தொடர்கள்
3. இணைமொழிகள்
4. உவமைத்தொடர்கள்
5. தொடர்மொழிக்கு ஒரு மொழி
6. பழமொழிகள்
7. அணிகள்
8. கலைச்சொற்கள்
9. தொகைப்பெயர்கள்
10. ஒரு பொருள் பன்மொழி

## அருஞ்சொற்கள்

க.பொ.த(சாதாரண)தர தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி – I வினாத்தாளில் பெரும்பாலும் 1ஆம்,2ஆம்,3ஆம் வினாக்கள் அருஞ் சொல் பற்றியதாக அமையும்.

### கடந்தகால வினாக்கள் ஓர் ஆய்வு

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**2011 டிசெம்பர் - வினா 01,02**

01. "வேயின் திரண்ட தோள் வேல் கண்ணாய்" - இங்கு வேய் என்பதன் பொருள்
1.மலை 2. மூங்கில் 3. வேய்தல் 4. புனை

02. 'அரசிளங் குமரன் வேட்டையாட வேங்கையும் வேழமும் அகப்படாமையால் அலக்கணுற்றான்' " வேங்கையும் வேழமும் என்பன முறையே
1. யானையும் புலியும் 2. புலியும் சிங்கமும்
3.புலியும் யானையும் 4. சிங்கமும் புலியும்

**2010 டிசெம்பர் - வினா 01,02**

01. 'மின்னும் தார் வீமன் தன் மெய்ம்மரபு' - இங்கு தார் என்பதன் பொருள்
1.மலர் 2. கருமை 3. மாலை 4. முடி

02. 'மல்லல் மறுகில் மட நாகுடனாகச் செல்லும் மழவிடை' - நாகு என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1.பசு 2. எருது 3. காளை 4. ஆடு

**2009 டிசெம்பர் - வினா 01,02,03**

01. 'விண் இயங்கும் ஞாயிற்றைக் கை மறைப்பார் இல்' - இங்கு ஞாயிறு என்பதன் பொருள்
1.கிழமை 2. நாள் 3. சூரியன் 4. பகல்

02. 'வெற்றி வேலோ உனது நயனங்கள்' நயனங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1.புருவங்கள் 2. கண்கள் 3. இதழ்கள் 4. பற்கள்

03. 'ஆழிவாய்ச் சத்தம் அடங்காதோ' - இங்கு ஆழி என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1.கடல் 2. சக்கரம் 3. காற்று 4. ஆகழி

**2008 டிசெம்பர் - வினா 01,02,03**

01. 'வெள்ளத்தால் அழியாதது வெந்தழலால் வேகாது' " தழல் என்பதன் ஒத்த சொல்
1. விறகு 2. நெருப்பு 3. வெப்பம் 4. நீர்

02. "பெருந்தடங்கண் பிறை நுதலார்" - நுதல் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1.நெற்றி 2. கண் 3. புருவம் 4. கூந்தல்

03. "மனிதனைத் தேவனாக்கும் மகாகாவியமாக இருக்கிறது இராமாயணம்" - காவியம் என்பதன் ஒத்த சொல்
1.புராணம் 2. காப்பியம் 3. பிரபந்தம் 4. பரணி

### எதிர்பார்க்கை வினாக்கள்

01. "அறைகல் அருவி அணி மலை நாட..." இங்கு -அணி என்பதன் பொருள்
1. ஒழுங்கு 2. பனி 3. உயர 4. அழகிய

02. "ஆய்மணிப் பைம்பூண்.." இங்கு பூண் என்பதன் - ஒத்த கருத்துச் சொல்
1. பூணுதல் 2. அணிதல் 3. ஆபரணம் 4. பூட்டு

03. "பொய்வைத்த சொப்பனமாம் மன்னர் வாழ்வும் புவியுமெங்கே" - இதில் சொப்பனம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. நனவு 2. சுவர்க்கம் 3. கனவு 4. அமராவதிப்பட்டணம்

04. "நகை நலம் நட்டார்கண் நந்தும்" - இதில் நட்டார் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. நண்பர் 2. துன்புற்றவர்
3. நடுகைசெய்தவர் 4. நற்பண்புடையோர்.

05. "நித்தியமாய் நினைத்திருந்த நிலைகுலைய அயலிருந்தோர் புயல்வரவு மரஞ்சரிவு" - இதில் நினைத்த என்பதன் கருத்து
1. உண்ணல் 2. ஊகித்தல்
3. சிந்தனைசெய்தல் 4. உன்னல்

06. "குன்றிற் பொழிந்த மழையின் பெரு வெள்ளம்" - இங்கு குன்று என்பதன் பொருள்
1. வானம் 2. பூமி 3. மலை 4.குளம்

07. "கணையாளி பரிசாய்க் கை விரலில் அவர் போட" இங்கு கணையாளி என்பதன் பொருள்
1. காப்பு 2. பரிசு 3. வளையல் 4. மோதிரம்

08. "தேனின் கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல்" - இங்கு காமுறுதல் என்பதன் பொருள்
1. விரும்புதல் 2. வெறுத்தல்
3. போற்றுதல் 4. சொல்லுதல்

09. "பெருந்தடங்கட் பிறைநுதலார்க்கெல்லாம்" - இங்கு நுதல் என்பதன் ஒத்த சொல்
1. கழுத்து 2. முகம் 3. கண் 4. நெற்றி

10. துண்ணிய கேளிர் பிறர் இல்லை. - இங்கு கேளிர் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. நண்பர் 2. பகைவர் 3. உறவினர் 4.அயலவர்

11. "பெருஞ்செல்வர் இல்லத்து நல்கூர்ந்தார் போல" - இங்கு நல்கூர்ந்தார் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. அரசர் 2. பகைவர் 3. உறவினர் 4. அயலவர்

12. விண்ணரசர் எல்லோரும் வெள்கி மனஞ்சுளித்தனர். - இங்கு வெள்கி என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. மகிழ்ச்சியுற்று 2. வெட்கப்பட்டு
3. கோபப்பட்டு 4. ஆச்சரியப்பட்டு

13. "காரென்று பேர் படைத்தாய் ககனத்துறும் போது" - இங்கு ககனம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. கானம் 2. உலகம் 3. வானம் 4. மேகம்

14. "தெய்வச் சிதம்பரத் தேவா உன் சித்தம் திரும்பி விட்டாற் பொய் வைத்த" - சித்தம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்
1. உள்ளம் 2. வெள்ளம் 3. தாமரை 4. வாழ்க்கை

15. "கண்ணிமைத்த லாலடிகள் காசினியில் தோய்தலால்" - இங்கு காசினி என்பதன் கருத்து
1. திருமகள் 2. மகிழ்ச்சி 3. பாதம் 4. நிலம்

16. 'தோயுந்திரைகள் அலைப்ப தோடார் கமலப்பள்ளி'- இங்கு கமலம் என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. அலைகள் 2. தாமரை 3. அன்னம் 4. பொய்கை

17. "மருப்பூசியாக மறங்கனல் வேல் மன்னர்" - இங்கு மருப்பு என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1. யானைத்தந்தம் 2. தும்பிக்கை 3. வாள் 4. கண்

### மாணவர்கள் தெரிந்திருக்க வேண்டிய அருஞ்சொற்கள்

அளகம் - கூந்தல் ஆழி -கடல்
இகல் - மாறுபாடு ஈதல் - கொடுத்தல்
உலோபம் - ஈயாமை ஊனிரை - மாமிசஉணவு
எவ்வம் - துன்பம் ஏதம் - குற்றம்



அழகு...
உடல் நலம்...
குழந்தை வளர்ப்பு...
சாதனை மகளிர்...
ஆலோசனை...
ஊளவியல்...

சி நே கி தி யே

# கருவளையம் நீங்க சில டிப்ஸ்கள்



சில பெண்களுக்கு கண்களைச் சுற்றி கருப்பு வளையம் இருக்கும். இந்த பிரச்சினைதான் பெண்களை வயதானவர் போல் காட்டும். இதை எளிதாக நீக்கி விடலாம்.

* வெள்ளரிக்காய், உருளைக்கிழங்கு இரண்டையும் சம அளவு எடுத்து அதை நன்றாக அரைத்துக் கொள்ளவும். ஒரு மெல்லிய வெள்ளைத் துணியை பன்னீரில் நனைத்து கண்களின் மீது வைத்து, அதன் மேல் அரைத்த கலவையை வைக்க வேண்டும். இப்படி முப்பது நிமிடம் இருக்க வேண்டும். இவ்வாறு 5 நாட்கள் செய்தாலே போதுமானது. கருவளையம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

* சரியான தூக்கம் இல்லாமல் போனாலும் கண்களில் கருவளையம் தோன்றும். தினமும் குறைந்தது எட்டு மணி நேரமாவது தூங்க வேண்டும்.

* வெள்ளரிச்சாறை முகத்தில் தேய்த்து, ஒரு மணி நேரத்திற்கு பின் கழுவிவிட வேண்டும். தொடர்ந்து இதுபோல் செய்து வந்தால், கண் அழகை பாழாக்கும் கருவளையம் படிப்படியாக மறைய ஆரம்பித்துவிடும்.

* உணவில் அதிகளவு காய்கறிகளை சேர்த்துக்கொள்ள வேண்டும். தினமும் குறைந்தது நான்கு லீற்றர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

# அழகிய காதுகளைப் பெற



நம்மில் பலர் தமது முக அழகைப் பராமரிப்பதைப் போல எமது அழகை மிகவும் ஜொலிக்க வைக்கும் நமது காதுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை என்கிறார் நாம் அழகுக் கலை நிபுணரான தனு ரசாக்.

பெண்களின் அழகை ஜொலிக்க வைப்பதில் காதுகளுக்கும் அதிக பங்கு உண்டு. இதனால் முகம் பளபளப்பாக இருந்தாலும், காதுகள் இரண்டும் முக அழகைக் கெடுத்துவிடும். அதிலும் சிலரது காதுகள் அழுக்கடைந்து பார்ப்பதற்கு அகோரமாகக் காட்சி அளிக்கும்.

ஆகவே, நாம் தினமும் உடலையோ, முகத்தையோ சுத்தம் செய்யும்போது எமது காதுகளையும் கழுவிக் கொள்ளுதல் மிகவும் முக்கியமாகும். எமது உடல் உறுப்புகளிலே மிகவும் முக்கியமானது எமது காது களாகும்.

நாம் எமது காதுகளை அழகாகப் பேணுதல் மிகவும் இன்றியமையாததாகும். சிலர் காது களின் வெளிப்பக்கத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்வதில்லை. காது வெளிப்பக்கத்தையும் அதே நேரம் உட்பக்கத்தையும் எப்போதும் நாம் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

இதற்காகவென்றே சந்தைகளில் விற்பனை செய்யப்படும் கொட்டன் பட்ஸ் எனப்படும் பஞ்சுகளின் மூலம் அதுவும் நாம் குளித்ததின் பின் சுத்தம் செய்வது சாலச் சிறந்தது. ஈரலிப்பாக இருக்கும் போது சுத்தம் செய்வதால் காதுகளில் இருக்கும் அழுக்குகளை விரைவில் நாம் சுத்தம் செய்ய முடியும்.



தனு ரசாக்

சிலருக்கு காதைச் சுற்றி கருவளையம் போன்ற ஒன்று காணப்படும். இதை இல்லாதொழிக்க காதுகளுக்கு பேபிலோஷன்கள் இட்டு 15 நிமிடம் கழித்து காதுகளை அழுத்தமாக துடைக்கவும். இப்படி தொடர்ந்து செய்து வந்தால் நாளடைவில் கருப்பு வளையம் மாயமாகிவிடும். முகத்தில் பூசும் பேஸ் பேக்குகளை காதுகளிலும் பூசலாம். இப்படிச்செய்து வந்தால் காது மட்டும் கறுப்பாக தனியாகத் தெரியாது.

சிலருக்கு காதுகளுக்கு கவரிங் காதணிகள் அணிவது ஒவ்வாமையை ஏற்படுத்தி புண்களையும் ஏற்படுத்தி சீழும் ஏற்பட்டு அவதிப்படுவர். இவ்வாறானவர்கள் முடிந்தளவு கவரிங் நகைகளை அணிவதைத் தவிர்த்தல் நல்லது. நாளடைவில் இது காதுகளில் அடையாளங்களை ஏற்படுத்தி பார்ப்பதற்கு அவலட்சணமாகிவிடும்.

எமது முகத்திலே எம் காதுகள் தான் பார்ப்பதற்கு பிரதானமாக இருக்கவேண்டிய ஒன்றாகும். ஏனெனில் நாம் அணியும் சில காதணிகளின் அழகு எம்மை மேலும் அழகாகக் காட்டுவதேயாகும்.

அத்தோடு காதுகளை சுத்தம் செய்கின்றோம் என்று சிலர் காதுகளுக்கு குச்சிகளையும், பின்களையும் இடுவர் இது முற்றிலும் தவறான செயற்பாடாகும். இதனால் எமது காதுகளில் உள்ளே உள்ள செவிப்பறை பாதிப்படையும் வாய்ப்பும் இருக்கின்றது.

ஒவ்வொருவரின் காதுகளுக்கும் ஏற்றவகையில் காதணிகள் வாங்கி அணிவதால் நாம் எம் அழகை மேலும் அதிகப்படுத்தலாம்.

எஸ்.பிரியதர்ஷினி

# கரும்புள்ளிகளைப் போக்கும் பேஸ் மாஸ்க்குகள்



* தயிர் - தயிரில் தேன் மற்றும் கடலை மா சேர்த்து கெட்டியான பேஸ்ட் போல் கலந்து, முகத்தில் தடவி மசாஜ் செய்து, 5 நிமிடம் ஊற வைத்து, நன்கு காயவைத்து, தண்ணீர் ஊற்றி மீண்டும் ஸ்கரப் செய்ய வேண்டும்.

* எலுமிச்சை - எலுமிச்சையில் ப்ளீச்சிங் தன்மை அதிகம் இருப்பதால், அதனைக்கொண்டு முகத்தை சிறிது நேரம் மசாஜ் செய்தால், சருமத்தில் உள்ள அழுக்குகள், அதிகப்படியான எண்ணெய் பசையுடன், கரும்புள்ளிகளும் நீங்கிவிடும். மேலும் முகமும் வெள்ளையாகும்.

* ஒரேஞ்சுத்தோல் - ஒரேஞ்சுத் தோலை நன்கு உலர வைத்து, பொடி செய்து, அதனை பால் மற்றும் தேனுடன் சேர்த்து கெட்டியான பேஸ்ட் போல் கலந்து, முகத்தை ஸ்கரப் செய்து, உலர விட்டு கழுவினால், முகத்தில் உள்ள கரும்புள்ளிகள் மறைந்துவிடும்.

* பேக்கிங் சோடா - பேக்கிங் சோடாவும் கரும்புள்ளியைப் போக்கும் பொருள் தான். அதற்கு பேக்கிங் சோடாவை நீரில் கலந்து, ஈரமான முகத்தில் அதனைக் கொண்டு மசாஜ் செய்தால், கரும்புள்ளிகளுடன் முகப்பருக்களும் நீங்கிவிடும்.

* பப்பாளி - பப்பாளியும் கரும்புள்ளியைப் போக்கும் பொருட்களில் சிறந்தது. எனவே நன்கு கனிந்த பப்பாளியை மசித்து, அதில் பால் மற்றும் தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி உலர வைத்து கழுவ வேண்டும்.

* முட்டை - முட்டையை உடைத்து ஒரு கிண்ணத்தில் ஊற்றி, அதில் சிறிது தேன் சேர்த்து கலந்து, முகத்தில் தடவி நன்கு காயவைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவினால் கரும்புள்ளிகள் மறைந்துவிடும்.



* கடலை மா - கடலை மாவை பால் மற்றும் எலுமிச்சை சாறு கலந்து, வேண்டுமெனில் அத்துடன் சிறிது தேனையும் சேர்த்து, முகத்திற்கு மாஸ்க் போட்டால், இயற்கையாகவே கரும்புள்ளிகள் போய்விடும்.

* கற்றாழை - கற்றாழையின் ஜெல்லை கரும்புள்ளிகள் உள்ள இடத்தில் தினமும் தடவி மசாஜ் செய்து கழுவினால், நாளடைவில் கரும்புள்ளிகள் வருவதை தவிர்க்கலாம்.

* வேப்பிலை - வேப்பிலையை நீரில் போட்டு கொதிக்க வைத்து, அந்த நீரில் ஆவி பிடித்து, முகத்தை நல்ல சுத் தமான துணியால் துடைத்தால், கரும்புள்ளிகள் போய்விடும்.



* சந்தனப் பொடி - சந்தனப் பொடியில், சிறிது மஞ்சள் தூளை சேர்த்து, தண்ணீர் ஊற்றி பேஸ்ட் போல் கலந்து, முகத்திற்கு தடவி 20-25 நிமிடம் ஊற வைத்து கழுவ வேண்டும்.

* இஞ்சி - ஒரு துண்டு இஞ்சியை எடுத்து, அதனை முகத்தில் 5-10 நிமிடம் தேய்த்து, வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இந்த முறையை ஒரு நாளைக்கு 2-3 முறை செய்து வந்தால், கரும்புள்ளி போவது உறுதி.

* பாதாம் - பாதாமை இரவில் படுக்கும் போது பசும் பாலில் ஊற வைத்து, காலையில் எழுந்து பேஸ்ட் போல் அரைத்து, முகத்தில் தடவி கையால் மென்மையாக மசாஜ் செய்து, 10 நிமிடம் ஊற வைத்து, மீண்டும் பசும் பாலை முகத்தில் தடவி, சிறிது நேரம் மசாஜ் செய்து, வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும்.

* வெள்ளரிக்காய் - முகத்திற்கு ஆவி பிடித்து 10 நிமிடம் கழித்து, வெள்ளரிக்காயை அரைத்து முகத்திற்கு தடவி, 10 நிமிடம் ஊற வைத்து கழுவி, சுத்தமான துணியால் துடைத்தால், கரும்புள்ளிகள் எளிதில் நீங்குவதோடு, முகமும் பொலிவோடு இருக்கும்.




படம் :- வருத்தப்படாத வாலிபர் சங்கம்
பாடியவர் :- ஜெயமூர்த்தி
இசை :- டி.இமான்
பாடல்வரிகள் :- யுகபாரதி

இந்தப் பொண்ணுங்களே
இப்படித்தான் புரிஞ்சுபோச்சுடா
அவங்க கண்ணு நம்ம
கல்லறன்னு தெரிஞ்சிபோச்சுடா
(இந்தப் பொண்ணுங்களே)

பின்னால சுத்த வச்சி
பித்துக்குளி ஆக வச்சி
இல்லாத கணக்க
எல்லாம் போடுவாங்கடா
அவங்க பார்வையால
பால்டாயில ஊத்துவாங்கடா

(இந்தப் பொண்ணுங்களே)

கார்டு வாங்கிக் குடுக்குறோம்
கவித எழுதி குடுக்குறோம்
செல்லு வாங்கிக் குடுக்குறோம்
ரீசார்ஜும் பண்ணிக் குடுக்குறோம்

அன்பக் கூட
வாரி வாரி குடுக்குறோம்
அவங்க வீட்டுக்குத்தான் ரேஷன்
வாங்கிக் குடுக்குறோம்
நாம குடுத்ததெல்லாம்
வாங்கிக்கிட்ட அவங்கதான்
நமக்கு வேதனைய
குடுக்குறாங்க என்னடா..
இதுல நீதி நேர்மை இருக்குதான்னு
சொல்லுடா சொல்லுடா

(இந்தப் பொண்ணுங்களே)
வீடு வாசல் மறக்குறோம் வெட்கம்
ரோஷம் மறக்குறோம்
நல்லா தூங்க மறக்கிறோம்
நண்பனையும் மறக்கிறோம்
நாளு கெழம கூட நாம மறக்கிறோம்
அவங்க நெனப்புலதான்
எல்லாத்தையும் மறக்கிறோம்
நாம மறப்பதெல்லாம்
தெரிஞ்சிக்கிட்ட அவங்கதான்
நம்மள போற போக்கில்
மறக்குறாங்க என்னடா
இந்த சோகம் மறக்க
குடிக்கிறேன்னு சொல்லுடா

(இந்தப் பொண்ணுங்களே)

2012 ஆம் ஆண்டு விஜய் சேதுபதி, காயத்ரி நடிப்பில் வெளிவந்த படம் 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' இந்தப் படத்தை குறும்பட இயக்குநர் பாலாஜி இயக்கியிருந்தார். வித்தியாசமான கதையம்சத்தில் வெளிவந்த இப்படம் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது.

இந்நிலையில் இந்தப் படத்தை மலையாளத்தில் ரீமேக் செய்யவிருக்கின்றனர். இப் படத்தின் கதாநாயகனாக நேரம் படத்தில் நடித்த நிவின் பவுலி நடிக்கிறார். நடிகை அம்பிகாவின் தம்பி சுரேஷ் இப்படத்தை இயக்குகிறார்.



## மலையாளத்தில் ரீமேக் ஆகும் நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்

தமிழ்த் திரைப்பட நடிகை சிந்து மேனன் அளவுக்கு அதிகமாக தூக்க மாத்திரை சாப்பிட்டதால் உடல்நிலை பாதிக்கப்பட்டு சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். நடிகை சிந்து மேனன் தற்கொலைக்கு முயன்றதாக கூறப்படுகிறது. சிந்து மேனன் சமுத்திரம், கடல்பூக்கள், யூத், ஈரம் உள்ளிட்ட தமிழ்ப் படங்களில் நடித்துள்ளார். மேலும் தெலுங்கு, மலையாளம், கன்னட மொழிப் படங்களிலும் நடித்துள்ளார்.



## நடிகை சிந்து மேனன் தற்கொலை முயற்சி

## ஒரு பாடலுக்கு நடனமாடும் நளினி!



*உயிருள்ளவரை உஷா, தங்கைக்கோர் கீதம் உள்ளிட்ட பல தமிழ்ப் படங்களில் நடித்து, ரசிகர்களின் ஆதரவைப் பெற்று முன்னணி நடிகையாகத் திகழ்ந்தவர், நளினி. திருமணத்துக்கு பின் நடிப்பை விட்டு ஒதுங்கினார்.*

*கடந்த சில ஆண்டுகளாக சின்னத்திரைத் தொடர்களில், வில்லி ரோலில் நடித்து வந்தார். திரைப்படங்களிலும், காமெடி கேரக்டர்களிலும் தலை காட்டி வந்தார். நளினி, இயற்கையாகவே ஒரு டான்சராம். இதனால், தற்போது அவரை ஒரு பாடலுக்கு ஆட வைத்துள்ளனர். ஆனால் இதற்கு நளினி ரொம்பவே தயங்கினாராம். உடல் எடை அதிகமாகிவிட்டது.*

*இப்போது ஆடினால், நன்றாக இருக்காது என்றாராம். ஆனாலும், படக் குழுவினர், அவரை அந்த பாடலுக்கு ஆட வைத்து விட்டனர். ஆனால், இது குத்துப் பாடல் கிடையாது. வளைகாப்பு நிகழ்ச்சியின்போது பாடப்படும் ஒரு பாடலுக்கு ஆடுகிறார் அவ்வளவுதான் என்கிறது படக்குழு.*

# CineBits

* வாலு, வேட்டை மன்னன் படத்தையடுத்து, பாண்டிராஜ் இயக்கத்தில் தான் நடிக்கும் படத்திற்கு ஹன்சிகாவை ஜோடி சேர்க்க நினைத்தார் சிம்பு. ஆனால், இந்த கதைக்கு அவர் பொருந்தமாட்டார் என்று மறுத்து விட்டார் பாண்டிராஜ்.

* தென்னிந்திய மொழிகளில் 400 படங்களில் நடித்த வில்லன் நடிகர் சரண்ராஜ், தன் மகன் தேஜ்ராஜை ஹீரோவாக்க கதை கேட்டு வருகிறார்.

* விளம்பரத்திற்காக விஸ்வரூபம் - 2 என்ற பெயரில், படமெடுக்கவில்லை என்று கூறும் கமல், ''முதல் பாகத்தின் தொடர்ச்சியாக, இரண்டாம் பாகத்தை எடுக்க வேண்டிய கட்டாயம் உள்ளது...'' என்கிறார்.

* அஜீத்தின் 54 ஆவது படமான வீரம், பொங்கல் அன்று வெளியாகவுள்ளது.

* தெலுங்கு, இந்தியில் பிசியாகிவிட்ட ஸ்ருதிஹாசன் ஒரு கோடியாக இருந்த தன் படக்கூலியை தற்போது ஒன்றரை கோடியாக உயர்த்திவிட்டார்.

* எத்தன் சுரேஷ் இயக்கத்தில் விஷ்ணு நடிக்கும் சபாஷ் மாப்பிள்ளை என்ற படத்தில் பொலீஸ் வேடத்தில் நடிக்கிறார் பிந்து மாதவி.

* குழந்தைகள் நாட்டின் பொக்கிஷம் என்ற கருத்தை மையமாக வைத்து ஜெய்ஹிந்த் - 2 படத்தை இயக்கி, நடித்து வருகிறார் அர்ஜூன்.

* தசாவதாரம் படத்தில் கமலுடன் நடித்த அசின், அவர் நடிக்கும் உத்தம வில்லன் படத்திலும் நடிப்பார் என்று கூறப்படுகிறது.

* ரேஸ் பிரியரான அஜீத் சமீபத்தில் பி.எம். டபிள்யூ 1000 ஆர்.ஆர். என்றொரு பைக் வாங்கியுள்ளார். இதன் விலை 24 இலட்சம். ( இந்திய மதிப்புப்படி)

* யோகி படத்தில் ஹீரோவாக நடித்த டைரக்டர் அமீர் இப்போது பேரன்பு கொண்ட பெரியோர்களே என்ற படத்தில் மீண்டும் ஹீரோவாக நடித்து வருகிறார்.

* ஜில்லா, ஆல் இன் ஆல் அழகுராஜா படங்களில் நடித்து வரும் காஜல் அகர்வால் அடுத்து உதயநிதியுடன் நண்பேன்டா படத்தில் நடிக்கிறார்.

* விஷால் நடித்த திமிரு படத்தை இயக்கிய தருண்கோபி, சரவண குடில், பேச்சியக்கா மருமகன், கன்னியும் காளையும் மற்றும் செம காதல் ஆகிய படங்களில் ஹீரோவாக நடிககிறார்.

* கஹாணி - 2 படத்திலும், வித்யாபாலனே நாயகியாக நடிக்கிறார். இதையடுத்து, உடம்பை ட்ரிம் செய்யும் முயற்சியாக, தினமும் நான்கு மணிநேரம், 'ஜிம்'மில் பயிற்சி எடுத்து வருகிறார்.

* அழகி படத்தோடு எடிட்டிங் செய்வதை நிறுத்தி வைத்திருந்த லெனின், மீண்டும் தங்கர் பச்சான் இயக்கியுள்ள களவாடிய பொழுதுகள் படத்துக்கு எடிட்டிங் செய்துள்ளார்.

* அண்ணன் செல்வராகவன் இயக்கிய படங்களில் நடித்தபோது, உதவி இயக்குநராகவும் பணியாற்றியதாக சொல்லும் தனுஷ் அடுத்த ஆண்டு, ஒரு மெகா படத்தை இயக்கத் திட்டமிட்டுள்ளார்.

* விமல் நடித்து வரும் ரெண்டாவது படம் என்ற படத்தில் அவருக்கு ஜோடியாக ரம்யா நம்பீசன், விஜயலட்சுமி ஆகியோர் நடிக்கின்றனர். இப்படம் மூலம், முதன் முறையாக, காமெடி ட்ராக்கில் நடித்துள்ளார் விஜயலட்சுமி.

* குங்குமப்பூவே கொஞ்சிப்புறாவே, கோரிப்பாளையம் படங்களில் நடித்த ராமகிருஷ்ணன், தற்போது, போங்கடி நீங்களும் உங்க காதலும் என்ற படத்தை இயக்கி, நடித்து வருகிறார்.





## மீண்டும் பருத்திவீரன் கார்த்தி

மீண்டும் பருத்திவீரன் அவதாரம் எடுக்கவுள்ளார் நடிகர் கார்த்தி. ஆல் இன் ஆல் அழகுராஜா, பிரியாணி ஆகிய படங்களைத் தொடர்ந்து அட்டகத்தி ரஞ்சித்துடன் கூட்டணி சேரவுள்ளார் நடிகர் கார்த்தி.

பெயரிடப்படாத இப்படத்தில் கார்த்திக்கு ஜோடியாக லட்சுமி மேன[ன்] நடிக்கவுள்ளாராம்.

பியாவுக்கு போட்டோகிராஃபி மீது அதீத ஈடுபாடு வந்துவிட்டது. எல்லாம் அஜித்தை பார்த்து வந்த புதுப் பழக்கம்தான். இப்போது பியா எங்கே போனாலும் கேமராவும் கையுமாக அலைகிறார். கண்ணில் படும் ஒவ்வொரு காட்சிகளையும் வகை வகையாகச் சுட்டுத் தள்ளுகிறார்.

# லட்சுமிராய்

## எச்சரிக்கை மணி!

தன்னைப்பற்றி தவறான செய்தி வெளியிட்டதற்காக, ஒரு பத்திரிகை மீது வழக்கு தொடர்ந்து, நஷ்டஈடு பெற்றவர் லட்சுமிராய். இருப்பினும் அவரைப் பற்றிய தவறான செய்திகள் வெளியாவது நின்றபாடில்லை. இதனால் இந்தியா முழுவதிலும் உள்ள தன் அபிமானிகள் மூலம் தன்னைப்பற்றி அந்தந்த மாநிலங்களில் வெளியாகும் செய்திகளை சேகரித்து வருகிறார். அதில் சில செய்திகளுக்கு தன், ''டுவிட்டர்'' மூலம் தெளிவுபடுத்தி வரும் லட்சுமிராய், சில மீடியாக்களை நேரடியாக தொடர்பு கொண்டு எச்சரிக்கை மணியும் அடிக்கிறார்.

# ஹன்சிகா அண்ணியாவதை தடுக்கிறார்கள்!

சிம்பு, ஹன்சிகா காதல் தொடர்பாக பரவி வரும் புது தகவலால் சினிமா வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. சிம்பு, ஹன்சிகா இணைந்து 2 படங்களில் நடிக்கின்றனர். வாலு படத்தில் நடித்தபோது இருவருக்கும் காதல் மலர்ந்தது.

ஆனால் இதுபற்றி அறிவிக்காமல் இருவரும் ரகசியம் காத்து வந்தனர். கடந்த மாதம் இருவருமே காதல் ரகசியத்தை போட்டு உடைத்தனர். இதற்கிடையில் சிம்பு, ஹன்சிகாவுக்கு இடையேயான காதல் விவகாரம் பகிரங்கமானதைத் தொடர்ந்து ஹன்சிகாவின் பட வாய்ப்புகள் குறைய ஆரம்பித்திருப்பதாக கொலிவுட்டில் பேசப்படுகிறது. இதற்கு பதில் அளிக்கும் விதமாக இன்னும் 5 வருடம் கழித்துத் தான் திருமணம் செய்துகொள்வேன் என்று ஹன்சிகா தெரிவித்துள்ளார். இந்தநிலையில் நடிகை சிம்ரன் மற்றும் சில மூத்த நடிகைகள் காதல் விடயத்தில் எச்சரிக்கையாக இருக்கும்படி ஹன்சிகாவுக்கு அறிவுரை கூறியுள்ளனராம்.

மேலும் மற்றொரு சீனியர் நடிகையும் ஹன்சிகாவை போனில் தொடர்பு கொண்டு, என்னிடம் சிம்பு திருமணம் செய்துகொள்ள சம்மதம் கேட்டார். வயது வித்தியாசத்தால் ஏற்கவில்லை



என்று தெரிவித்தாராம். சீனியர் நடிகை ஒருவர் இப்படி சொன்னதாக பரவியுள்ள புதுத்தகவல் சினிமா வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த தகவல்கள் இணையதளத்தில் பரப்பப்படுவதை அறிந்து சிம்பு ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஹன்சிகா எங்களின் அண்ணி ஆவதைத் தடுக்க சிலர் சதி செய்கிறார்கள் என அவர்கள் கொதிக்கின்றனராம்.

# சினிமா



## மம்முட்டியின் மகனுக்கு ஜோடியாகிறார் நஸ்ரியா

குறும்பட இயக்குநரான பாலாஜி மோகன் 'காதலில் சொதப்புவது எப்படி' படத்தின் மூலம் பெரிய திரைக்கு அறிமுகமானார். இவர் அடுத்து இயக்கவிருக்கும் படத்தில் மலையாள நடிகர் மம்முட்டியின் மகனுமான துல்கர் சல்மானை தமிழில் அறிமுகப்படுத்த உள்ளார். இவர் மலையாளத்தில் முன்னணி நடிகராக உள்ளார்.

துல்கர் சல்மான் தமிழில் முதன்முதலாக நடிக்க இருக்கும் இந்தப் படத்தில் இவருக்கு ஜோடியாக நடிக்க நஸ்ரியா நசீம் ஒப்பந்தமாகியுள்ளார். விரைவில் படப்பிடிப்பு தொடங்கவுள்ளது. மேலும்



துல்கர் சல்மானும், நஸ்ரியாவும் தற்போது 'சலால மொபைல்ஸ்' என்ற மலையாளப் படத்தில் இணைந்து நடித்து வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



## சீமான் திருமணவிழாவில் வித்தியாசமான பரிசு

நாம் தமிழர் கட்சித் தலைவர், இயக்குநர் மற்றும் நடிகருமான சீமான் மற்றும் கயல்விழியின் திருமணம் சென்னையில் நடைபெற்றது. சென்னை நந்தனம் வை.எம்.சி.ஏ. விளையாட்டு மைதானத்தில் இவர்களது திருமணம் பழ.நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது. இத்திருமண வைபத்தில் பல்வேறு தமிழர் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், திரைத்துறையினர், மக்கள் பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருமணத்தில் கலந்துகொண்டவர்களுக்கு மரக் கன்றுகள் நினைவுப் பரிசாக வழங்கப்பட்டன.

# பாடல்



படம் : அமர்க்களம்
இசை : பரத்வாஜ்
பாடலாசிரியர்: வைரமுத்து
பாடியவர்கள் : S.P.பாலசுப்ரமணியம்

மேகங்கள் என்னைத் தொட்டு
போனதுண்டு
சில மின்னல்கள் என்னை உரசி
போனதுண்டு

மேகங்கள் என்னைத் தொட்டு
போனதுண்டு
சில மின்னல்கள் என்னை உரசி
போனதுண்டு
தேகங்கள் ஒன்றிரண்டு கடந்ததுண்டு
மனம் சில்லென்று சில போது
சிலிர்த்ததுண்டு
மோகனமே உன்னைப் போல
என்னை யாரும்
மூச்சுவரை கொள்ளையிட்டுப்
போனதில்லை ஆகமொத்தம் என்
நெஞ்சில் உன்னைப் போல
எரி அமிலத்தை வீசியவர் எவருமில்லை
(மேகங்கள் என்னைத் தொட்டு)

பிரிவொன்று நேருமென்று
தெரியும் பெண்ணே
என் பிரியத்தை அதனால்
குறைக்க மாட்டேன்
எரியும் உடலென்று தெரியும் பெண்ணே
என் இளமைக்கு தீயிட்டு எரிக்க மாட்டேன்
(மேகங்கள் என்னைத் தொட்டு)

கண்ணிமையும் சாமரங்கள் வீசும் காற்றில்
என் காதல் மனம் துண்டுத் துண்டாய்
உடையக் கண்டேன்
துண்டு துண்டாய் உடைந்த மனத்
துகளையெல்லாம் அடி தூயவளே
உனக்குள் தொலைத்து விட்டேன்
(மேகங்கள் என்னைத் தொட்டு)

செவ்வாயில் ஜீவராசி உண்டா என்றே அடி
தினந்தோறும் விஞ்ஞானம் தேடல்
கொல்லும் செவ்வாயில் உள்ளதடி
எனது ஜீவன் அது தெரியாமல் விஞ்
ஞானம் எதனை வெல்லும் எவ்வாறு
கண்ணிரெண்டில் கலந்து போனேன்
அடி எவ்வாறு மடியோடு தொலைந்து
போனேன் இவ்வாறு தனிமையில்
பேசிக்கொண்டேன் என்
இரவினைக் கவிதையாய்
மொழிபெயர்த்தேன்
(மேகங்கள் என்னைத் தொட்டு)

மூடி மூடி வைத்தாலும் விதைகளெல்லாம்
மண்ணை முட்டி முட்டி முளைப்பது
உயிரின் சாட்சி
ஓடி ஓடிப் போகாதே ஊமைப்பெண்ணே
நாம் உயிரோடு வாழ்வதற்குக்
காதல் சாட்சி
(மேகங்கள் என்னைத் தொட்டு)

சிறுவர் பகுதி

# பணக்காரனின் தோட்டம்



ஒரு பணக்காரனுக்கு பெரிய மாந்தோப்பு இருந்தது. அந்தப் பகுதியிலேயே மிகச் சுவையான மாம்பழங்கள் அந்தத் தோட்டத்தில்தான் விளைந்தன. அந்தத் தோட்டத்தின் பக்கம் செல்பவர்கள் அந்த மாம்பழங்களை பறித்து சாப்பிட்டனர். இதைக் கவனித்த அந்தப் பணக்காரன் தோட்டத்தைக் காவல் காக்க ஓர் ஆளை நியமித்தான்.

அந்தப் பணக்காரன் ஒரு கருமி. அந்தக் காவல்காரனுக்கு மிகவும் குறைவான சம்பளத்தைக் கொடுத்தான். அந்த சம்பளம் அந்தக் காவல்காரனுக்குப் போதவில்லை. எனவே அவன் தோப்பிலிருந்து நல்ல சுவையான மாம்பழங்களைப் பறித்து சாப்பிட்டு பசியைப் போக்கிக்கொண்டான். மேலும் அவ்வப்போது பழங்களைத் திருடி விற்று பணத்தை சம்பாதித்தான்.

இது அந்த பணக்காரனுக்குத் தெரிந்துவிட்டது. உடனே அந்த காவல்காரனை வேலையிலிருந்து நிறுத்திவிட்டு தன் மனைவியிடம் இதைப்பற்றிச் சொன்னான்.

''அந்த வேலைக்காரனுக்கு சரியான சம்பளம் கொடுத்தால் அவன் திருடமாட்டான். தப்பு உங்க மேல்தான்'' என்றாள் மனைவி.

ஆனால், பணக்காரன் இதை ஒப்புக் கொள்ளவில்லை. அவன் வேறொரு காவல்காரனை நியமித்தான். அவனும் இதே திருட்டுத்தனத்தைச் செய்தான்.

இப்போதும் பணக்காரனின் மனைவி காவல்காரனுக்கு சரியான சம்பளத்தைத் தந்தால் திருடமாட்டான் என்று சொன்னாள்.

''ஆம்பிளை காவல்காரப் பசங்கதான் இப்படி. ஒரு பொம்பளையை காவலுக்குப்போட்டால் அவள் நிச்சயம் திருடமாட்டாள்'' என்றான் பணக்காரன்.

ஒரு பெண்ணை காவலுக்கு நியமித்து அவளுக்கும் அதே சொற்ப சம்பளத்தைத் தருவதாய்ச் சொன்னான்.

ஆனால், அந்தப் பெண்ணும் சம்பளம் போதாமல் பழங்களைத் திருடி விற்க ஆரம்பித்தாள்.

இப்போது பணக்காரன் அந்தப் பெண்ணையும் காவல் வேலையிலிருந்து நிறுத்திவிட்டு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து யோசித்தான்.

அப்போது அந்த வழியாக ஒரு குருடனும் ஒரு நொண்டியும் சென்றுகொண்டிந்தார்கள். அவர்களைப் பார்த்ததும் அந்தப் பணக்காரனுக்கு ஓர் எண்ணம் தோன்றியது.

குருடனால் பார்க்க முடியாது. நொண்டியால் நடக்க முடியாது. எனவே, இருவராலும் பழங்களைத் திருட முடியாது என்று நினைத்து இருவரையும் தன் தோட்டத்தில் காவல்காரர்களாக நியமிக்கலாம் என்று முடிவு செய்தான். இருவரையும் அழைத்துப் பேசினான். இந்த இருவரும் பணக்காரன் சொன்ன சொற்ப சம்பளத்திற்கு காவல் காக்க ஒப்புக்கொண்டு வேலைக்குச் சேர்ந்தார்கள்.

சில காலம் சென்றது. இருவருக்கும் சம்பளம் போதவில்லை. மாம்பழ வாசனை மூக்கைத் துளைத்தது. குருடன் நொண்டியிடம் சொன்னான்.

''டேய், மாம்பழம் வாசனையா இருக்கு. எனக்கும் பசிக்குது. பழத்தைப் பறிச்சி சாப்பிடலாமா?''

''உனக்கு கண்ணு தெரியாது. என்னால நடக்க முடியாது. நாம எப்படி பழத்தைப் பறிக்கமுடியும்?''

''ஏன் முடியாது. எனக்கு கால் இருக்கு. உனக்கு கண் இருக்கே. நீ என் தோள் மேல உட்கார்ந்துக்க. எனக்கு வழியைச் சொல்லு. உன்னை அங்கே தூக்கிகிட்டுப் போறேன். நீ பழங்களைப் பறிச்சி கீழே போடு. இரண்டு பேரும் சாப்பிடலாம். மீதி இருந்தா யாருக்காவது வித்துடலாம். நம்ம முதலாளி குடுக்கிற சம்பளம் போதமாட்டேங்குது.'' இருவரும் ஒன்று சேர்ந்து பழங்களைப் பறித்து சாப்பிட்டார்கள். மீதமிருந்ததை நல்ல விலைக்கு விற்றார்கள்.


இந்த விஷயம் பணக்காரனுக்குத் தெரிந்து அவர்களையும் வேலையிலிருந்து நிறுத்திவிட்டான்.

அன்று தன் மனைவியிடம் இதுப்பற்றிப் பேசினான். ''நீ சொன்னது சரிதான். குடுக்கிற சம்பளம் போதலைன்னா திருடத்தான் செய்வாங்க.''

அந்த பணக்காரன் தன் மனைவி சொன்னதை ஒப்புக் கொண்டான்.

ஆனாலும், அவன் நிறைய சம்பளம் கொடுத்து காவல்காரனை நியமிக்க விரும்பவில்லை. அதனால் தன் தோட்டத்தை அவனே காவல்காக்க ஆரம்பித்தான்.

# யானையின் காது!



யானையின் காதுகள் பெரிதாக இருக்கின்றன. ஏன் தெரியுமா?

யானைகளுக்கு உடலில் வியர்வை வெளியேறும் அல்லவா? அப்போது அது தனது உடல் வெப்பத்தைக் காதுகள் மூலமாக வெளியேற்றும். உடலில் இருக்கும் இரத்தத்தில் பெரும்பகுதியைக் காதுகளுக்குக் கொண்டு சென்று உஷ்ணத்தை வெளியேற்றுகிறது. இதனால்தான் யானையின் காதுகள் பெரிதாக இருக்கின்றன. ஆபிரிக்கக் காடுகளில் உஷ்ணம் இன்னும் அதிகம். ஆகவே, அங்குள்ள யானைகளின் காதுகள் மிகப் பெரியதாக இருக்கும்.

# மன உறுதி!



மாவீரன் நெப்போலியன், ஒருமுறை தனது தளபதியிடம், ''நம்மிடம் இலட்சம் வீரர்கள் இருக்கிறார்கள் அல்லவா?'' என்று கேட்டார்.

அதற்கு, அந்தத் தளபதி, ''அறுபதாயிரம் பேர்தான் உள்ளனர்'' என்றார்.

உடனே நெப்போலியன், ''அவர்களோடு என்னையும் சேர்த்துக்கொள். ஒரு இலட்சமாகிவிடும்...'' என்றார்.

தனது வீரத்தின் மீது அவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார் நெப்போலியன்.

Black
Colour: Cyan Magenta

ஒட்பம் - அறிவு
ஓதம் - கடல்
ககனம் - ஆகாயம்
காமம் - விருப்பம்
கிளைஞர் - உறவினர்
கும்பி - நரகம்
கூற்றுவன் - இயமன்
கெழுதகைமை- நெருங்கிய நட்பு
கேண்மை - நட்பு
கைதவம் - பொய்
கொடுங்கோல் - அநீதி
கோதை - சேரன்

## எதிர்ப்பொருட் சொல்

க.பொ.த(சாதாரண)தர தமிழ்மொழியும் இலக்கியமும் பகுதி -I வினாத்தாளில் பெரும்பாலும் 3ஆம்.4ஆம்.5ஆம் வினாக்கள் எதிர்ப்பொருட் சொல் பற்றியதாக அமையும்.

### கடந்தகால வினாக்கள் ஓர் ஆய்வு

பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

**2011 டிசெம்பர் - வினா 03,04**

01. "உற்றுழித் தீர்வார் உறவு அல்லார்." - உறவு என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1. தோழமை 2. அடிமை 3. தீது 4. பகை

02. "ரோஹினியின் நிஷ்களங்க நெஞ்சத்தில் பரவசநிலை பிறந்தது." - நிஷ்களங்கம் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1. களங்கம் 2. கலக்கம் 3. மங்கலம் 4. கழங்கு

**2010 டிசெம்பர் - வினா 03,05**

01. "பாரதியின் பாடல்களைப் பாமரரும் படித்தின்புறுகின்றனர்." பாமரா என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1. அறிவிலிகள் 2. நகரத்தவர் 3. பண்டிதர் 4. புத்திசாலிகள்

02. எந்தவொரு கலைப் படைப்பினையும் காய்தல் இன்றி நோக்கல் வேண்டும். - காய்தல் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1. தேய்தல் 2. உவத்தல் 3. வெறுத்தல் 4. கண்டித்தல்

**2009 டிசெம்பர் - வினா 04,05**

01. 'வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்று உபசாரம் செய்தல் நல்ல பழக்கமாகும்'. உபசாரம் என்பதன் எதிர்ப்பொருட் சொல்
1. ஆபசாரம் 2. அவமானம் 3. அபகாரம் 4. விவகாரம்

02. சபையில் கொண்டு வரப்பட்ட பிரேரணை சிலரால் ஆட்சேபிக்கப்பட்டது. ஆட்சேபித்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. நிராகரித்தல் 2. ஆமோதித்தல் 3. பிரேரித்தல் 4. அமுலாக்குதல

**2008 டிசெம்பர் - வினா 04,05**

01. "பாரதியாரின் பாடல்களைப் பாமரரும் படித்தின்புறுகின்றனர்".- பாமரர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. கவிஞர் 2. அரசர் 3. மாந்தர் 4. பண்டிதர்

02. "முல்லைக்குத் தேர் தந்தான் வள்ளல் பாரி" - வள்ளல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. ஊதாரி 2. கொடையாளி 3. உலோபி 4. ஆண்டி

## எதிர்பார்க்கை வினாக்கள்

01. "தன்னை அகழ்பவரையும் தாங்குவது நிலமாகும்" - அகழ்தல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. சேர்தல் 2. தூர்த்தல் 3. பிணைத்தல் 4. நெருங்குதல்

02. பேராசிரியர் சிவத்தம்பி பழுத்த தமிழ்ப்புலமை மிக்கவராவார். புலமை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. சிறுமை 2. பொறுமை 3. ஏழ்மை 4. மடமை

03. "ஊழி திரண்டதோ கங்குல்" இங்கு கங்குல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. இரவு 2. பகல் 3. மாலை 4. சாமம்

04. பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட இருசாராருக்குமிடையே எவ்வித இணக்கமும் ஏற்படவில்லை. இங்கு இணக்கம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. சுணக்கம் 2. தயக்கம் 3. பிணக்கம் 4. களங்கம்

05. 'குழி நிரம்பாத புன்செய் குறும்பயிர் தடவி' - இங்கு புன்செய் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1. வன்செய் 2. நன்செய் 3. தின்செய் 4. மண்செய்

06. 'அகந்தை கொண்டவர் அழிவது உறுதி' - இங்கு அகந்தை என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1.செருக்கு 2. செல்வம் 3. கீழ்மை 4. பணிவு

07. நளமகாராசன் கிளைஞர் புடை சூழ மண்டபம் சென்றான் - இங்கு கிளைஞர் என்பதன் எதிர்கருத்துச் சொல்
1.பகைவர் 2. நண்பர் 3. சுற்றத்தவர் 4. அமைச்சர்

08. "இவ்வளவு ஞானத்தோடு கசாப்புக்காரன் எனப்பெயர்பூண்டு ஈனமான வேலை புரிய வேண்டுவதென்ன". - இங்கு ஞானம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1.அறிவு 2. அஞ்ஞானம் 3. தெளிவு 4. அழகு

09. "மனிதர் உணரா இனிமை இரகசியத்தைப் பரிமாறும் காக்கைகள்" - இங்கு இரகசியம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
1.பரகசியம் 2. வெளிப்படை 3. தெளிவு 4. வேவு

10. "ஊழி திரண்டதோ கங்குல்" இங்கு கங்குல் என்பதன் எதிர்கருத்துச் சொல்.
1. கனவு 2.நனவு 3.இரவு 4.பகல்

11. "விலைவாசி அதிகரிப்பதால் நாம் சிக்கனமாகச் செலவு செய்ய வேண்டியுள்ளது" சிக்கனம் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1. சேமிப்பு 2.செலவு 3.கட்டுப்பாடு 4.ஊதாரித்தனம்

12. "பாரதியார் பாலர்களுக்கென பாப்பாப்பாட்டுப் பாடியுள்ளார்" இதில் பாலர் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1. சிறுவர் 2.விருத்தர் 3.இராக்கதர் 4.விருத்தமாதவர்

13. "நாம் பிரதேசஇகட்சி பேதங்களின்றி இணங்கி நடப்பதே இம்மண்ணில் நமது இருப்பை நிலைநிறுத்தும்" இதில் இணங்குதல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்.
1. ஒற்றுமை 2.வேற்றுமை 3.பிணக்கம் 4.சுணக்கம்

14. "காட்சியிலே புனல் வீழ்ச்சியிலே" எனும் தொடரில் அமைந்து வரும் புனல் என்பதன் எதிர்ப்பதம்.
1. கனல் 2.அனல் 3.நனல் 4.நீர்

15. காட்டின் வழி எங்கும் நிசப்தமாகி இருந்தது. இங்கு நிசப்தம் என்பதன் எதிர்க்கருத்து
1. இருள் 2.இநிசப்தம் 3.சத்தம் 4.ஒளி

16. "மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் உத்தமனாய் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்" இங்கு உத்தமன் என்பதன் எதிர்க்கருத்துள்ள சொல்.
1. மேலவன் 2.உயர்ந்தவன் 3.அதமன் 4.அநுருத்தமன்

17. "பாடசாலைப் பாடப் புத்தக மீள்பயன்பாடு தொடர்பாக அமைச்சர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணையை சடையினர் ஆமோதித்தனர்"இங்கு ஆமோதித்தல் என்பதன் எதிர்க்கருத்து.
1.ஆட்சேபித்தல் 2.அங்கீகரித்தல் 3.நிராகரித்தல் 4.மாறுதலித்தல்

### எதிர்க்கருத்துள்ள சொற்கள்

| | |
|---|---|
| அண்மை - சேய்மை | அறம் - மறம் |
| அன்பு - வன்பு | ஆக்கம் - கேடு |
| ஆதி - அந்தம் | ஆத்திகன் - நாத்திகன் |
| ஆண்டாள் - அடியான் | ஆலம் - அமிர்தம் |
| இகம் - பரம் | ஆதரவு - அநாதரவு |
| ஆரோகணம் - அவரோகணம் | இசை - வசை |
| தூலம் - சூக்குமம் | தொகை - விரி |
| இலட்சணம் - அவலட்சணம் | உபகாரம் - அபகாரம் |
| உபசாரம் - அபசாரம் | எரிதல் - அவிதல் |
| கனவு - நனவு | கண்டம் - அகண்டம் |
| கதி - அகதி | சன்மார்க்கம் - துன்மார்க்கம் |
| சுரர் - அசுரர் | தமர் - பிறர் |
| தவப்பொழுது - அவப்பொழுது | புரியர் - சீரியர் |
| மருள் - தெருள் | வள்ளன்மை - இவறன்மை |
| வாட்டம் - மலர்ச்சி | மலம் - நின்மலம் |
| ஞானம் - அஞ்ஞானம் | நம்பிக்கை - அவநம்பிக்கை |
| பண்டிதர் - பாமரர் | பக்குவம் - அபக்குவம் |

மாணவர்கள் தரம் 10, தரம் 11 பாடநூல்களில் உள்ள சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களைத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும்.

பின்வரும் சொற்களுக்கு எதிர்க்கருத்துள்ள சொற்களை எழுதுக.

| | |
|---|---|
| 1.அகலம் | 2.அச்சம் |
| 3.அநுகூலம் | 4.இயக்கம் |
| 5.இல்லறம் | 6.இன்சொல் |
| 7.இயற்கை | 8.இம்மை |
| 9.ஈதல் | 10.உலோபி |
| 11.உயர்வு | 12.உவகை |
| 13.ஊடல் | 14.ஐயம் |
| 15. பகல் | 16.கலக்கம் |
| 17.காங்குல் | 18.கீழ்மை |
| 19.கொந்தளிப்பு | 20.கொடுக்கல் |
| 21.சாதகம் | 22.சிக்கனம் |
| 23.சிறப்பு | 24.சிறுமை |
| 25.சீரணம் | 26.சுமங்கலி |
| 27.சுத்தம் | 28.ஞானம் |
| 29.தர்க்கம் | 30.தற்காலிகம் |
| 31.துரிதம் | 32.தூலம் |
| 33.நன்செய் | 34.நாளங்காடி |
| 35.நுண்மை | 36.புராதனம் |
| 37.பேதை | 38.மங்கலம் |
| 39.வெப்பம் | 40.செல்வர் |

(8ஆம் பக்கத் தொடர்ச்சி..)

### முழு எண்ணின் பகுதியைக் காணல்

விளக்கம் -: முழு எண்ணின் பகுதியைக் காணும் பொழுது, இன் என்பது X வைக்குறிக்கும். எனவே, இன் என்ற இடத்தில் X என்ற அடையாளத்தை இட்டு முழு எண்ணைப் பின்னத்தால் சுருக்கி விடையளித்தல் வேண்டும்.

உதாரணம் - 01 வினா ரூ.600 இன் $\frac{1}{3}$ பங்கு யாது?

விடை -: $600 \times \frac{1}{3} =$ ரூ.200

#### எதிர்பார்க்கை வினாக்கள்

01. ரூ.500 இன் $\frac{1}{5}$ பங்கு யாது?

02. ரூ.300 இன் $\frac{1}{3}$ பங்கு யாது?

03. ரூ.750 இன் $\frac{2}{5}$ பங்கு யாது?

04. ரூ.1500 இன் $\frac{2}{3}$ எவ்வளவு?

05. ரூ.320 இன் $\frac{1}{4}$ எவ்வளவு?

06. ரூ.550 இன் $\frac{1}{5}$ எவ்வளவு?

07. ரூ.100 இன் $\frac{1}{10}$ எவ்வளவு?

08. ரூ.1200 இன் $\frac{2}{3}$ பங்கு யாது?

### சமவலுப் பின்னம் காணல்

விளக்கம் -: பின்னமொன்றின் பகுதியெண்ணையும் தொகுதியெண்ணையும் ஓர் முழு எண்ணினால் பெருக்கிப் பெறப்படும் பின்னம் அப்பின்னத்தின் சமவலுப்பின்னமாக அமையும்.

உதாரணம் -: $\frac{1}{4}$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

விடை -: $\frac{1}{4} \times \frac{2}{2} = \frac{2}{4}$ அல்லது $\frac{1}{4} \times \frac{3}{3} = \frac{3}{12}$

#### எதிர்பார்க்கை வினாக்கள்

01. $\frac{1}{2}$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

02. $\frac{2}{3}$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

03. $\frac{1}{5}$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

04. $\frac{1}{3}$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

05. $\frac{2}{5}$ இற்கு ஒரு சமவலுப்பின்னத்தை எழுதுக.

## எதிர்பார்க்கை வினாக்கள்

### பின்னக்கூட்டல், கழித்தல்

விளக்கம் –: இரு பின்னங்களின் கூட்டல் மற்றும் கழித்தலின் போது இருபின்னங்களின் பகுதி எண்கள் சமனாமின் பகுதி எண்ணைப் பொது வான அழுயாகக் கொண்டு தொகுதி எண்கள் கூட்டலின் போது கூட்டப்படும் கழித்தலின் போது கழிக்கப்படும்.

உதாரணம் –: சுருக்குக –: $\frac{1}{7}+\frac{2}{7}$ ← தொகுதி எண் / ← பகுதி எண்

விடை –: $\frac{1+2}{7} = \frac{3}{7}$

உதாரணம் –: சுருக்குக –: $\frac{5}{10}-\frac{2}{10}$ ← தொகுதி எண் / ← பகுதி எண்

விடை –: $\frac{5-2}{10} = \frac{3}{10}$

உதாரணம் –: சுருக்குக –: $\frac{3}{a}+\frac{1}{a}$ ← தொகுதி எண் / ← பகுதி எண்

விடை –: $\frac{3+1}{a} = \frac{4}{a}$

உதாரணம் –: சுருக்குக –: $\frac{5}{X}-\frac{3}{X}$ ← தொகுதி எண் / ← பகுதி எண்

விடை –: $\frac{5-3}{X} = \frac{2}{X}$

உதாரணம் –: சுருக்குக –: $1+\frac{1}{4}$

விடை –: $1\frac{1}{4}$

உதாரணம் –: சுருக்குக –: $1-\frac{1}{5}$

விடை –: $\frac{5}{5}-\frac{1}{5} = \frac{4}{5}$

01. சுருக்குக –: $\frac{1}{4}+\frac{2}{4}$

02. சுருக்குக –: $\frac{2}{9}+\frac{5}{9}$

03. சுருக்குக –: $\frac{2}{5}+\frac{1}{5}$

04. சுருக்குக –: $\frac{1}{3}+\frac{1}{3}$

05. சுருக்குக –: $\frac{5}{7}-\frac{2}{7}$

06. சுருக்குக –: $\frac{6}{8}-\frac{3}{8}$

07. சுருக்குக –: $\frac{2}{3}-\frac{1}{3}$

08. சுருக்குக –: $\frac{3}{5}-\frac{2}{5}$

09. சுருக்குக –: $\frac{3}{y}+\frac{1}{y}$

10. சுருக்குக –: $\frac{4}{b}+\frac{2}{b}$

11. சுருக்குக –: $\frac{2}{x}+\frac{1}{x}$

12. சுருக்குக –: $\frac{1}{a}+\frac{1}{a}$

13. சுருக்குக –: $\frac{2}{x}-\frac{1}{x}$

14. சுருக்குக –: $\frac{4}{y}-\frac{1}{y}$

15. சுருக்குக –: $\frac{7}{a}-\frac{2}{a}$

16. சுருக்குக –: $\frac{6}{c}-\frac{3}{c}$

17. சுருக்குக –: $1+\frac{3}{4}$

18. சுருக்குக –: $1+\frac{1}{2}$

19. சுருக்குக –: $1-\frac{1}{4}$

20. சுருக்குக –: $1-\frac{3}{5}$

21. சுருக்குக –: $1-\frac{2}{5}$

22. சுருக்குக –: $1-\frac{1}{3}$

குறிப்பு –: பின்னக் கூட்டல் மற்றும் கழித்தல் தொடர்பான வினாக்கள் பகுதி எண்கள் சமனான இருபின்னங்களின் கூட்டல் மற்றும் கழித்தல் வினாக்களாக மட்டுமே அமைந்திருக்கும். எனவே இவ்வகையிலான வினாக்களை மட்டும் பூரணமாகக் கற்றுக் கொண்டால் 1 புள்ளியை இலகுவாகப் பெ-றமுடியும். இவ்வினாவானது தங்களின் பின்னம் தொடர்பான அறிவினைப் பரிசீலிப்பதற்காகக் கேட்கப்படும்.

பலர் இவ்வாறான பின்னக் கூட்டல் மற்றும் கழித்தல் வினாக்கள் கேட்கப்படும் போது தொகுதி எண் மற்றும் பகுதி எண்களை நேர்நேராகக் கூட்டியும் கழித்தும் விடையளித்துவிடுவார்கள். இவ்விடை தவறானதாகும்.

### பின்னப் பெருக்கல்

விளக்கம் –: இருபின்னங்களின் பெருக்கலின் போது தொகுதி எண்ணை தொகுதி எண்ணாலும் பகுதி எண்ணைப் பகுதி எண்ணினாலும் பெருக்கி விடையளித்தல் வேண்டும்.

உதாரணம் –: சுருக்குக –: $\frac{1}{2} \times \frac{1}{3}$ ← தொகுதி எண் / ← பகுதி எண்

விடை –: $\frac{1 \times 1}{2 \times 3} = \frac{1}{6}$

1. $\frac{1}{3} \times \frac{1}{4}$

2. $\frac{3}{5} \times \frac{3}{4}$

3. $\frac{1}{2} \times \frac{1}{3}$

4. $\frac{1}{4} \times \frac{3}{5}$

5. $\frac{1}{7} \times \frac{1}{2}$

6. $\frac{3}{5} \times \frac{1}{2}$

7. $\frac{1}{6} \times \frac{1}{2}$

8. $\frac{1}{5} \times \frac{1}{2}$


குறிப்பு –: இவ்வினாவிற்கு ஒரு புள்ளி வழங்கப்படுவதால் இரு பின்னங்களின் பெருக்கலின் போது பகுதி எண்ணை பகுதி எண்ணாலும் தொகுதி எண்ணை தொகுதி எண்ணாலும் பெருக்கிப் பெறப்பட்ட விடையை மீளச் சுருக்கி எழுதும் வகையில் வினாக் கேட்கப்படமாட்டா. எனவே மேலே தரப்பட்ட வினா அமைப்பிலேயே வினாக்கள் அமைந்திருக்கும்.

**பின்னத்தை முழு உருவில் நிழற்றிக் காட்டுதல்**

**விளக்கம் :- ஒரு பின்னத்தை முழு உருவில் நிழற்றிக் காட்டும் பொழுது சமச்சீர் அச்சுத் தொடர்பான மற்றும் சமவலு பின்னம் தொடர்பான பிரயோகங்கள் தெரிந்திருத்தல் வேண்டும்.**

**உதாரணம் :-**


1. உருவில் $\frac{1}{4}$ பகுதியை நிழற்றுக.




விடை :- உருவில் சமச்சீர் அச்சுக் கொண்ட 8 சதுரங்கள் உள்ளன. இதில் நான்கில் ஒன்றிற்கு நிறம் தீட்ட வேண்டும். எனவே 1/4 என்ற பின்னத்தில் பகுதி எண் நான்கினை எட்டிற்கு மாற்றுதல் வேண்டும். அதற்காக பகுதி எண்ணையும் தொகுதி எண்ணையும் 2 ஆல் பெருக்கி சமவலுப்பின்னமொன்றைப் பெறுதல் வேண்டும்.

$$\frac{1}{4} \times \frac{2}{2} = \frac{2}{8}$$


இனி உருவில் எட்டு சதுரங்கள் உள்ளதால் இரு சதுரத்திற்கு நிறம் தீட்டி விடையளித்தல் வேண்டும்.



2. உருவில் $\frac{1}{8}$ பகுதியை நிழற்றுக.




விடை :- உருவில் சமச்சீர் அச்சுக் கொண்ட 4 சதுரங்கள் உள்ளன. இதில் எட்டில் ஒரு பகுதிக்கு நிறம் தீட்ட வேண்டும். எனவே தரப்பட்ட உருவை சமச்சீர் அச்சுத் தொடர்பான அறிவைக் கொண்டு 8 சமச்சீர் அச்சு வருமாறு வரைதல் வேண்டும். அதன்பின்னர் எட்டில் ஒரு பகுதிக்கு நிறம் தீட்டுதல் வேண்டும்.




உருவில் எதிர்எதிர் மூலைகளை இணைத்து செங்கோண முக்கோண வடிவிலான 8 சமச்சீர் அச்சுக்கள் பெறப்பட்டுள்ளன. அதில் ஒரு சமச்சீர் அச்சிற்கு நிறம் தீட்டி விடையளிக்கப்பட்டுள்ளது.

**1. உருவில் $\frac{1}{4}$ பகுதியை நிழற்றுக.**




**2. உருவில் $\frac{3}{8}$ பகுதியை நிழற்றுக.**



**3. உருவில் $\frac{1}{3}$ பகுதியை நிழற்றுக.**




**4. உருவில் $\frac{5}{8}$ பகுதியை நிழற்றுக.**




**5. உருவில் $\frac{1}{8}$ பகுதியை நிழற்றுக.**



**6. உருவில் $\frac{2}{3}$ பகுதியை நிழற்றுக.**



**7. உருவில் $\frac{4}{8}$ பகுதியை நிழற்றுக.**



**8. உருவில் $\frac{2}{5}$ பகுதியை நிழற்றுக.**



**முழு உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியினை பின்னமாகக் காட்டுதல்.**

**விளக்கம் :- ஒரு முழு உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதியைப் பின்னமாகக் காட்டும் பொழுது உருவில் சமச்சீர் அச்சினை பகுதியெண்ணாகக் கொண்டு நிழற்றப்பட்டுள்ள சமச்சீர் அச்சுக்களைத் தொகுதி எண்ணாகக் கொண்டு பின்னமொன்றினை உருவாக்கி விடையளித்தல்.**

**உதாரணம் :-**


1. முழு உருவில் நிழற்றப்பட்டுள்ள பின்னம் யாது?




விடை :- $\frac{2}{8}$ அல்லது $\frac{1}{4}$

முழு உருவில் 8 சமச்சீர் துண்டுகள் உள்ளன. அதில் இரண்டு சமர்ச்சீர் துண்டுகளுக்கு நிறம் தீட்டப்பட்டுள்ளன. இவ் முழுவுருவில் நிழற்றப்பட்ட பகுதியை பின்னமாக எழுதும் போது முழு உருவிலுள்ள 8 சமர்ச்சீர் துண்டுகளையும் பகுதி எண்ணாகவும் நிழற்றப்பட்டுள்ள இரு சமச்சீர் துண்டுகளையும் தொகுதி எண்ணாகக் கொண்டு $\frac{2}{8}$ என விடையளித்தல். அல்லது $\frac{2}{8}$ என்ற பின்னத்தை சுருக்கி $\frac{1}{4}$ என்றும் விடையளிக்கலாம்.

2. முழு உருவில் நிழற்றப்பட்ட பின்னம் யாது?




விடை :- முழு உருவில் சமச்சீர் அச்சுக்கள் பூரணமாக வரையப்படவில்லை. எனவே முழு உருவில் சமச்சீர் அச்சை வரைந்து உருவை பூரணப்படுத்தி பின்னர் விடையளித்தல் வேண்டும்.




முழு உருவில் 8 சமச்சீர் அச்சுக்கள் உள்ளன. இதில் 8 சமச்சீர் அச்சுக்களில் ஒரு சமச்சீர் அச்சிற்கு நிறம் தீட்டப்பட்டுள்ளது. எனவே விடை $\frac{1}{8}$


**1. இங்கே நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம் ?**




**2. உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம்?**




**3. முழு உருவில் நிழற்றப்பட்டுள்ள பகுதி என்ன பின்னம் ?**



**4. இங்கே நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம் ?**



**5. இங்கே நிழற்றப்பட்டுள்ள பகுதி முழு உருவின் என்ன பின்னம் ?**



( தொடர்ச்சி 7ஆம் பக்கம் பார்க்க .....)

# பேய் விரட்டப் போனவரை பேய் அடித்ததா?

காலம் எவ்வளவுதான் நாகரிகத்தை நோக்கிப் பயணித்தாலும் போலிச் சாமியார்களின் மூட நம்பிக்கையில் கட்டுண்டு கிடப்பவர்கள் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கின்றார்கள். பேய், பிசாசுகளை விரட்டுவதாகக் கூறி (நர) பலி கொடுக்கும் சம்பவங்கள் கூட சர்வசாதாரணமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

அண்மையில் சிறுமியொருவருக்கு பேய் பிடித்து விட்டதாகக் கூறி வீட்டு முற்றத்தில் தீயை மூட்டி அச்சிறுமியை அத்தீயில் தள்ளி, பின் அவளின் வாயில் கத்தியைவிட்டு சுழற்றி கோரமாகக் கொலை செய்த போலிச் சாமியார் தொடர்பான தகவலை அண்மையில் வெளியிட்டிருந்தோம். இதேபோல பேய்விரட்டப் போய் விபரீதத்தில் முடிந்த சம்பவமொன்று ஹோமாகமை பிலியந்தலை பகுதியில் கடந்த வாரம் பதிவாகியது.

ஹோமாகமை, பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த மெக்ஷிம் கஸ்ட்ரோ (30 வயது) தனியார் வகுப்பு ஆங்கில ஆசிரியராகப் பணிபுரிகின்றார். கஸ்ட்ரோ பேயோட்டுதல், யாகம் வளர்த்து மாந்திரீகப் பூஜையில் ஈடுபடுவதுண்டு. சம்பவதினம் பிலியந்தலை பெலன்வத்த பகுதியில் உள்ள பாழடைந்த வீட்டில் பேய் இருப்பதாகவும் அதை மாந்திரீகப் பூஜையின் மூலம் விரட்டப் போவதாகவும் கூறியுள்ளார்.



அதை நம்பிய வீட்டு உரிமையாளர்கள் அவருக்கு வேண்டிய உதவிகளைச் செய்தனர். பூஜை நடாத்துவதற்கு வீட்டுக்குள் 6 இற்கு 4 அடி ஆழமான குழியொன்றை தோண்டக் கூறியுள்ளார். அக்குழியில் இறங்கியே பேய் விரட்டும் காரியத்தை மேற்கொள்ளப் போவதாகவும் தான் குழியினுள் இறங்கியதும் குழியை தகரம், கம்புகளால் மூடி அதற்குமேல் மண்ணால் நிரப்பி மூடிவிடும்படியும் கூறியுள்ளார். பூஜை முடிந்ததும் கத்தியின் நுனி மேலே வரும். அதன் பின்னர் தான் குழியைத் தோண்ட வேண்டும் என ஆலோசனை வழங்கியுள்ளார்.

கஸ்ட்ரோவின் அறிவுரையின் பிரகாரம் சம்பவதினம் பேய்விரட்டும் பூஜை ஆரம்பமானது. பூஜைக்குத் தேவையான பொருட்களுடன் பூனைக் குட்டி, அரிவாள் கத்தி, கற்பூரம் போன்றவற்றுடன் குழியில் இறங்கியுள்ளார். அவர் குழியில் இறங்கியதும் கஸ்ட்ரோவின் அறிவுரை பிரகாரம் குழியை மூடிவிட்டனர்.

பூஜை தொடங்கி ஒரு மணிநேரம் கடந்தது. கத்தியின் ஊசிமுனை வெளிவரவுமில்லை. எவ்வித சத்தமுமில்லை. சரி இன்னும் சற்று பொறுத்துப் பார்ப்போம் என அமைதி காத்தனர். எவ்வித சமிக்ஞையும் வராத நிலையில் குழியைத் தோண்டினால் பேய் தம்மை தாக்கிவிடுவதோடு, கஸ்ட்ரோவின் கோபத்திற்கு ஆளாக வேண்டிவரும் என வீட்டுக்காரர்கள் சமிக்ஞை வரும்வரை காத்திருந்தனர்.

நேரம் 1, 2 என 3 மணித்தியாலங்கள் கடந்து சென்று கொண்டிருந்தது. குழிக்குள் இருந்த கஸ்ட்ரோவிடமிருந்து எவ்வித சமிக்ஞையும் வரவில்லை. இனியும் பொறுமை காப்பது ஆபத்தை ஏற்படுத்திவிடும் என பயந்துபோன கஸ்ட்ரோவின் உதவியாளர்கள் குழியைத் தோண்ட ஆரம்பித்தனர். குழியை தோண்டிக் கொண்டு செல்லச்செல்ல உள்ளிருந்து எவ்வித சத்தமும் வரவில்லை. அமைதியான சூழலே காணப்பட்டது. கஸ்ட்ரோவிற்கு ஏதும் ஆகிவிட்டதோ? பேய்விரட்டப் போன கஸ்ட்ரோவை பேய் தாக்கிவிட்டதோ? எனும் சந்தேகங்கள் உதவியாளர்கள் மத்தியில் எழுந்தது.

வேகமாகக் குழியை தோண்டிப் பார்த்தபோது கஸ்ட்ரோ இறந்த நிலையில் பிணமாகக் கிடந்தார். பயந்துபோன வீட்டார் பொலிஸுக்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குழியை நோட்டமிட்டபோது கஸ்ட்ரோ தன் பூஜைக்காக கொண்டுசென்ற பூனைக்குட்டி இறந்து கிடந்ததுடன், கற்பூரங்கள், கத்தி போன்றவற்றையும் கைப்பற்றியுள்ளனர். பேய்விரட்டப் போன கஸ்ட்ரோ பேய் தாக்கி இறந்துவிட்டதாக அவரின் உதவியாளர்கள் நம்பினாலும், அவர் மூச்சுத் திணறலினால் மரணமானதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த மாந்திரீக பூஜைக்கு உதவியவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

மூட நம்பிக்கைகளால் தலைகால் புரியாமல் நடந்து கொள்ளும் நபர்கள் எம்மத்தியில் இன்னும் இருக்கிறார்கள் என்பதை கஸ்ட்ரோவின் மரணம் எமக்கு சொல்லிச் செல்கின்றதல்லவா?

எம்.தாசன்

## முடிவெட்ட காசு கொடுக்காததால் தற்கொலையா?

இளவயது தற்கொலைகள் அதிகரித்து வருவதாக புள்ளிவிபரத் தரவுகள் கூறும் நிலையில் அற்பசொற்ப காரணங்களுக்கு தம் உயிரை மாய்த்துக்கொள்ளும் போக்கு அதிகரித்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இக் கூற்றை உண்மையாக்குவது போல தற்கொலை சம்பவமொன்று நல்லதண்ணி பகுதி தோட்டமொன்றில் கடந்தவாரம் பதிவாகியுள்ளது. நல்லதண்ணி பகுதி தோட்டமொன்றைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளி ஒருவரின் 10 வயது மகனே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டுள்ளார். இது தொடர்பாக தெரியவருவதாவது:-

நாளை மூன்றாம் தவணைக்காக பாடசாலை ஆரம்பிக்கப் போகின்றது. எனவே முடிவெட்ட காசு தாருங்கள் என தனது தந்தையிடம் காசு கேட்டுள்ளான் அச்சிறுவன். நாளை பாடசாலைக்கு போயிட்டு வா, வந்த பின்னால் முடிவெட்ட காசு தருகின்றேன் எனக் கூறிவிட்டு வேலைக்குச் சென்றுள்ளார் அத்தந்தை. தான் காசு கேட்டு அப்பா கொடுக்காமல் போய்விட்டார் எனும் விரக்தியில் வீட்டிலிருந்த கேபல் வயரில் தூக்குமாட்டித் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக நல்லதண்ணி பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



இச்சிறுவன் முடிவெட்ட காசு கொடுக்காததால் மனம் உடைந்துபோய் இத்தற்கொலை செய்துகொண்டானா? இல்லை வேறு காரணங்கள் இருக்குமா? என்பது குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

10 வயது சிறுவன் தற்கொலையை நாடும் அளவிற்கு இன்று உளநெருக்கடிகளும், மன அழுத்தங்களும் அதிகரித்துள்ளதோடு, தற்கொலைகளுக்கு சினிமா மிகப்பெரிய காரணமாக அமைந்துவிடுகின்றது என்பதும் மறுப்பதற்கில்லை.

எம்.தாசன்

# ஹிட்லர் எனும் நல்ல தலைவன்!



ஒரு தனி மனிதனால் உலகத்தையே புரட்டிப் போட முடியும். உலகையே அச்சுறுத்த முடியும் என நிருபித்தவர் ஹிட்லர். அமைதி, சமாதானம் என்பவற்றை விரும்புபவர்களுக்கு ஹிட்லர் என்ற நாமம் வேப்பங்காயாக கசக்கும். ஏனெனில் அவர் காலத்தில் நடந்த ஹிட்லரால் நடத்தப்பட்ட அநியாயங்கள் நம்மை பதைபதைக்க வைக்கும். மனிதர்களால் இப்படியும் கொடூரமாக நடந்துகொள்ள முடியுமா? என்று நடுங்க வைக்கும்.

அப்படிப்பட்ட ஹிட்லருக்கும் ஒரு வியக்கத்தக்க மறுபக்கம் உண்டு.

வெள்ளைத்துணியில் உள்ள கறுப்புக் கரைகளே நம் கண்களை ஈர்க்கும். அதேபோன்று ஹிட்லரின் தவறுகளால் அவரை பற்றிய நினைவுகள் உலக சமுதாயத்தால் ஒதுக்கப்பட்டபோது அவரின் சாதனைகளும் கூடவே மறக்கப்பட்டுவிட்டன.

சர்வதிகாரிகளின் ஆட்சிக் காலத்தில் ஆபாச அத்துமீறல்கள் அதிகமாகவே இருக்கும். ஆனால் ஹிட்லர் அத்தகைய ஆபாசங்களை ஒருபோதும் அனுமதிக்கவில்லை. ஒரு விபசார விடுதி கூட அவரின் ஆட்சிக்காலத்தில் இல்லை என்பதே மிகப்பெரிய சாதனை அல்லவா...!

இலக்கியம், சினிமா, கலை, பத்திரிகைகள், சுவரொட்டிகள் எதிலும் ஆபாசம் இருக்க நான் அனுமதிக்க மாட்டேன் என்று எச்சரித்தவர் ஹிட்லர்.

1035 பக்கங்கள் கொண்ட 'அடால்ப் ஹிட்லர்' என்ற புத்தகத்தை எழுதிய பேராசிரியர் ஜான் டோலேண்ட், ஹிட்லர் ஆட்சிக்கு வந்த நாலாவது ஆண்டில் ஏதாவது காரணத்தால் இறந்திருந்தால் உலகமே ஹிட்லரை ஜேர்மனியின் சரித்திரத்தில் தோன்றிய மிகச்சிறந்த மாமனிதன் என்று பாராட்டியிருக்கும் என்று கூறுகிறார். ஆக ஹிட்லரின் சாதனைகளில் சிலவற்றை பார்ப்போம்.

முதலாம் உலகப்போரால் வாடி வதங்கிப் போயிருந்த ஜேர்மனியின் பொருளாதாரத்தை ஆட்சிக்கு வந்த மூன்றே ஆண்டுகளில் தூக்கி நிறுத்தியவர் ஹிட்லர்.

ஹிட்லர் பதவியேற்ற 1933 இல் ஜேர்மனியில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கை 60 இலட்சம். ஆனால் மூன்றே ஆண்டுகளில் ஜேர்மனியில் வேலையில்லாதவர் என்று ஒருவர் கூட இல்லை என்ற நிலை உருவானது.

இத்தனைக்கும் பொருளாதார அறிவு சிறிதும் ஹிட்லருக்கு இல்லை. இந்த சாதனைக்கு காரணம் ஹிட்லரால் தேடிக்கண்டுப்பிடிக்கப்பட்ட ஜால்மர் ஷ்ஹாக்ட் என்ற பொருளாதார நிபுணர் ஆவார்.

ஜால்மர் ஷ்ஹாக்ட் ஒன்றும் முன்னணித் தலைவரில்லை. ஆயினும் அவரது திறமையை உணர்ந்திருந்த ஹிட்லர் அவரை பொருளாதார அமைச்சராக நியமித்தார். திறமைக்கு மரியாதை கொடுத்து பதவியை கொடுப்பவனே சிறந்த தலைவன்.

ஹிட்லரின் ஆட்சியில் வேலைக்கேற்ற ஊதியம். போனஸ், விலைவாசி எல்லாம் கட்சிதமாக நிர்ணயிக்கப்பட்டன.

ஹைவே எனப்படும் அதிவேகப் பாதைகள் உலகில் முதலில் கட்டப்பட்டது ஹிட்லரின் ஆட்சிக்காலத்தில்தான்.

முதியவர்களுக்கு பென்ஷன் மற்றும் இலவச வைத்தியம், எல்லோருக்கும் காப்புறுதித் திட்டங்கள் எல்லாம் படுவேகமாக நடைமுறைக்கு வந்தன.

தொழிற்சாலைகளால் சுற்றுச்சூழல் மாசு அடையக் கூடாது என்று ஹிட்லர் சட்டம் கொண்டுவர, அத்தனை தொழிற்சாலைகளும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டன. அதனால் ஜேர்மனியில் ஓடிய நதிகள் அத்தனையும் படு சுத்தமாக இருந்தது.

பல வலி நிவாரணிகளும் போதைப் பொருள் பழக்கத்தில் இருந்து வெளிவர உதவும் மருந்துகளும் ஹிட்லரின் கடும் முயற்சியால் கண்டுபிடிக்கப்பட்டன. மருத்துவத்துறையில் வியக்கத்தகு முன்னேற்றம் அடைந்தது ஜேர்மனி.

பெண்களுக்கு இராணுவத்தில் பல பணிகளில் இடம் தந்து பெண்ணுரிமையை காப்பதில் தலைசிறந்து விளங்கினார். ஹிட்லர் பெண்களை எப்போதும் தாழ்வாக நினைத்தது இல்லை.

இப்போதுள்ள மிருகவதை தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ஹிட்லர். தன் தாயிடமும், மனைவியிடமும் அன்பு காட்டும் மனிதராகத் திகழ்ந்தார். அதற்கு உதாரணம் இறக்கும் வரை தன் தாயின் புகைப்படத்தை தன் பொக்கட்டிலேயே வைத்திருந்தார் ஹிட்லர். சைவ உணவுகளையே சாப்பிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தார் ஹிட்லர்.

ஹிட்லரின் காலத்தில் அவரின் பெரும் முயற்சியால் ஜேர்மனி இராணுவத் தொழில்நுட்பத்திலும் விஞ்ஞானத்திலும் மிகப் பெரிய முன்னேற்றம் அடைந்திருந்தது. போரில் ஜேர்மனி தோல்வியடைந்த பின், ஜேர்மனியின் இராணுவத் தொழில்நுட்ப வல்லுநர்களையும் விஞ்ஞானிகளையும் அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் பங்கு போட்டு பிரித்துக் கொண்டனர். அவர்களே இப்போதைய நாசாவின் இத்தகைய வளர்ச்சிக்கு காரணமாக இருந்தனர் எனக் கூறுவோரும் உளர்.

ஒரு தலைவனின் கடமை நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதும், வேலையில்லாமையை ஒழிப்பதும், இந்நாட்டைச் சேர்ந்தவன் நான் என்று பெருமிதமாக கூறிக்கொள்ளும் நிலைமையை உருவாக்குவதுவுமே ஆகும். ஹிட்லர் தனது ஆட்சிக்காலத்தில் அத்தகைய தலைவனாகத் திகழ்ந்தார் என்பதில் சந்தேகமே இல்லை.

ஹிட்லர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது ஜேர்மனியின் இராணுவ வீரர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் ஒரு இலட்சம்தான். அப்போது உருப்படியான நவீனரகத் துப்பாக்கிகள் கூட இராணுவத்தில் கிடையாது. ஆனால் ஹிட்லர் ஆட்சியேற்ற நான்கே ஆண்டுகளில் ஐரோப்பாவின் மிகப் பிரமண்டாமான இராணுவமாக அது மாறியது. நவீன போர் விமானங்கள், பீரங்கிகள், துப்பாக்கிகள், டாங்கிகள் கொண்ட அசுர சக்தியாக ஜேர்மனியின் இராணுவம் மாறிய வேகம் உலக வரலாற்றிலேயே இதுவரை நிகழ்ந்திடாத பெரிய ஆச்சரியம் என்று இன்னும் உலகப் பெரும் இராணுவ ஆராய்ச்சியாளர்கள் இன்னும் வியந்து கொண்டிருக்கிறார்கள்.

ஹிட்லரின் மொத்த பன்னிரண்டு வருட ஆட்சிக் காலத்தைப் பார்த்தால் அவரின் தவறுகளே நம் கண் முன்னே விரிந்திருக்கும். ஆனால் அவரின் முதல் ஐந்தாண்டு கால சாதனைகள் மகத்தானவை.

ஒரு புத்திசாலி சாடிஸ்ட்டாக மாறினால் மிகவும் ஆபத்தான ஒன்றுதான். அதுதான் ஹிட்லருக்கும் நிகழ்ந்தது.

அந்த ஆபத்துகள் அடுத்த வாரம்...

தொகுப்பு ரிஷி

## ஆஹா அப்படியா?

உலகில் கோடானுகோடி பேர் தோன்றி மறைந்தாலும், சரித்திரம் சிலரை மட்டுமே ஞாபகம் வைத்திருக்கிறது. தியாகம், சோகம், சாதனை, முயற்சி என அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவங்கள் அவர்களை சரித்திரத்தில் இடம்பிடிக்க வைத்திருக்கின்றன. சரித்திரத்தில் இடம்பிடித்த நாயகர்களின், நாயகிகளின் வாழ்க்கையில் பொதிந்த சுவாரஸ்யமான, அதிர்ச்சியான, ஆச்சரியமான சோகமான சம்பவங்களின் தொடர் இது!

# இந்துமகா சமுத்திரத்தில் இரண்டாவது சைப்பிரஸ் தீவாக இலங்கை உருவெடுக்குமா?

வடக்கு மாகாணசபைத் தேர்தல் வடக்கிலும் பார்க்க தென்னிலங்கையில் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் இதற்கு காரணமாக அமைகின்றது.

உச்சகட்ட பேரினவாத அமைப்பான ஜாதிக ஹெல உறுமய என்ற அரசியல் கட்சி இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண நியமிக்கப்பட்ட விசேட பாராளுமன்றத் தெரிவுக்குழுவிலிருந்து வெளியேறிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளியேறியதற்கு காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தைக் காட்டியுள்ளது. ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும் அமைச்சருமான சம்பிக்க ரணவக்க இன்னொருபடி மேலேபோய் யுத்த பிரகடனம் ஒன்றை விடுத்துள்ளார்.

"தமிழ்த் தலைமைகள் மூன்றாம் கட்ட ஈழப்போரை ஆரம்பித்துவிட்டன. அதனை எதிர்கொள்ள இராணுவமும் சிங்கள மக்களும் உடனடியாக தயாராக வேண்டும்" என்று அவர் அறைகூவல் விடுத்துள்ளார். பிரபாகரனிடம் மண்டியிடாத நாம் விக்னேஸ்வரனிடமா மண்டியிடப் போகிறோம்? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் வடக்கு, கிழக்கு இணைந்த மாநில சுயாட்சி ஐக்கிய இலங்கைக்குள் தீர்வாக அமையவேண்டும் என்பதே தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் கூறுகிறது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்பு இனப்பிரச்சினை தொடங்கிய காலத்தில் தந்தை செல்வா முன்வைத்த ஆரம்பக் கோரிக்கையாக அது இருந்தது. அக்கோரிக்கையின் அடிப்படையில் 1957 ஆம் ஆண்டில் அப்போது தனிச் சிங்கள மொழி சட்டத்தைக் கொண்டுவந்து நிறைவேற்றிய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க தந்தை செல்வநாயகத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கை அமைந்தது.

அதற்கு எதிராக அன்றைய சிங்கள கடும்போக்காளர்கள் குரல் எழுப்பினர். அப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக இருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனா அதற்கு தலைமைத் தாங்கினார். பண்டா - செல்வா ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் வடக்கு - கிழக்கில் தமிழருக்கு ஒரு தனிநாடு கிடைத்துவிடும் என்று ஜெயவர்தனா முழக்கமிட்டார். அத்துடன் அவர் நிற்கவில்லை. கொழும்பிலிருந்து கண்டி நோக்கி பாதயாத்திரை புறப்பட்டார். இடைநடுவில் பாதயாத்திரை தடுத்து நிறுத்தப்பட்டது. இனக்கலவரம் வெடித்தது. இனப்பிரச்சினைக்கு இரண்டு இனங்களின் தலைவர்கள் செய்த உடன்பாடு கிழித்து எறியப்பட்டது. இனப்பிரச்சினை தீர்வின்றி தொடர்ந்தது.

1965 பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆட்சி அமைப்பதற்கு பெரும்பான்மை இல்லாததால் தந்தை செல்வாவின் தலைமையிலான தமிழரசுக் கட்சியின் உதவியை நாடினர். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுவதை நிபந்தனையாக வைத்து தந்தையும் உதவினார்.

டட்லி - செல்வா உடன்படிக்கை உருவானது. பேரினவாதிகளின எதிர்ப்பு காரணமாக டட்லி - செல்வா உடன்பாடு கிழித்தெறியப்பட்டது. சமாதானமாகக் காணப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் நிராகரிக்கப்பட்ட நிலையில் தமிழ்த் தலைமைகள் தமிழர் விடுதலைக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கின.

தனி நாடு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. மிதவாதத் தமிழ்த் தலைமைகள் இறுக்கமாக இருக்காத நிலையில் போராளித்தலைமைகள் தமிழீழக் கோரிக்கையை முன்னெடுத்தன. தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட மூன்று தசாப்தகால யுத்தம் முள்ளிவாய்க்காலுடன் முடிவுக்கு வந்தது.

1987 இல் இந்தியாவின் அனுசரணையுடன் அப்போது இருந்த இந்தியா, இலங்கை அரசாங்கங்களின் தலைமைகள் இந்திய - இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர். அந்த உடன்படிக்கையில் வடக்கு - கிழக்கு இணைந்த மாநில சுயாட்சியைக் கொண்டு வரும் 13 ஆவது அரசமைப்புச் சட்டத்திருத்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபைக்கான தேர்தல் 1988 இல் நடத்தப்பட்டது.

இணைந்த மாகாணசபை ஆட்சி முறை 1990 இல் ஜனாதிபதி பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் கலைக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் வடக்கு - கிழக்கு இணைப்பு உயர்நீதிமன்றத்தினால் இரத்துச் செய்யப்பட்டது. அதன் பின்னர் பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாணசபைக்கு இரண்டு தடவைகள் தேர்தல் நடத்தப்பட்டன.

இப்போதுதான் இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு அதுவும் சர்வதேச அழுத்தம் காரணமாக வடக்கு மாகாண சபைக்கு எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படவிருக்கிறது. இத்தேர்தலையே சிங்களக்கடும் போக்குவாதிகள் நாட்டைப் பிரிக்கும் தேர்தலாக வர்ணித்து வருகின்றனர்.

இப்பின்னணியில் வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் முடிவை சர்வதேச சமூகம் குறிப்பாக இந்தியாவும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றது. தேர்தல் முடிவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மிகவும் சாதகமாகவே அமையும் என்பது அவதானிகளின் எதிர்பார்ப்பு.

அப்படி அமையின் சிங்களக் கடும் போக்காளர்களின் ஆத்திரம் மற்றும் நடவடிக்கை எவ்வாறு அமையும்? இன்னொரு இனக்கலவரத்தைத் தூண்டிவிடுவதாக அமைந்துவிடுமோ என்ற அச்சம் சமாதான விரும்பிகள் மனங்களில் எழும்பியுள்ளது. அவ்வறான நிலைவரம் ஏற்படின் சர்வதேச சமூகம் மற்றும் இந்தியா என்ன நடவடிக்கை எடுக்கும்? என்று அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

'தந்தை'யின் கனவு நனவாகுமா? அல்லது 'தம்பி'யின் கனவு நனவாகுமா? அல்லது 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய உடன்படிக்கை கைசாத்திடப்பட்டபோது ஜேர்மன் நாட்டு பத்திரிகை ஒன்று கருத்து ஒன்றை வெளியிட்டது. அக்கருத்து இலங்கை இரண்டாவது சைப்பிரஸ் நாடாக மாறுவதற்கு முன்னர் இலங்கைக்கு கிடைத்த கடைசிச் சந்தர்ப்பமாக இந்திய - இலங்கை உடன்படிக்கை அமைந்துள்ளது.



அதென்ன சைப்பிரஸ் நாடாக இலங்கை மாறக்கூடும் என்பதன் அர்த்தம்? 1960 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 சைப்பிரஸ் பிரிட்டனிடம் இருந்தது. சைப்பிரஸ் நாட்டின் ஜனாதிபதியாக ஆர்ச்பிஷப் மக்காரியஸ் இருந்தார். மெடிற்றரேனியன் கடலில் மூன்றாவது பெரிய தீவாக சைபிரஸ் இருக்கிறது. அதன் தலைநகர் நிக்கோனியா. நாணயம் - யூரோ. ஐரோப்பா கண்டத்தில் உள்ள சைப்பிரஸ் தீவில் கிரேக்கர்களும் துருக்கியர்களும் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களில் கிரேக்கர்களே பெரும்பான்மையாக உள்ளனர். சைப்பிரஸ் 3000 சதுரமைல் விஸ்தீரணம் கொண்டது. மக்களின் எண்ணிக்கை ஏழு இலட்சம் இருக்கும். பெரும்பான்மை கிரேக்கர்கள் துருக்கி இனத்தவர்களை புறக்கணித்து வந்தனர். இலங்கை போன்று சைப்பிரஸிலும் இனமோதல் உருவானது.

துருக்கி இனத்தவர் முழுச்சமஷ்டி அரசமைப்பைக் கோரினர். கிரேக்க இனத்தின் பெரும்பான்மை ஆட்சி அதற்கு இணங்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையிடம் இது சம்பந்தமாக முறையிடப்பட்டது. சைப்பிரஸ் பிரச்சினையை தீர்க்க ஐக்கிய நாடுகள் சபை எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. இந்த நிலையில் சைப்பிரஸில் துருக்கி இன மக்கள் வாழும் பகுதிக்குள் அருகில் இருக்கும் துருக்கி நாட்டின் படைகள் 1974 இல் பிரவேசித்தன. சைப்பிரஸில் வாழும் துருக்கி இனத்தவரை 1974 இல் புகுந்த துருக்கி நாட்டுப் படைகள் பாதுகாத்து வருகின்றன.

ஐக்கிய நாடுகள் சபை தீர்வுகாணாத நிலையில் சைப்பிரஸில் வாழும் துருக்கி இனத்தவர் துருக்கி நாட்டுப் படைகளின் துணையுடன் தங்கள் பகுதிகளில் தனி நிர்வாகத்தை நடத்தி வருகின்றனர். இந்திய - இலங்கை உடன்படிக்கை முறிவடைந்தால் இந்த நிலைதான் இலங்கைக்கு ஏற்படும் என்று ஜெர்மனி நாட்டு நாளிதழ் 'த ஜெனரல் அன்ஸீஜர்' 1987 இலேயே ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியிருந்தது.

இது உண்மையாகுமா? பொய்த்துவிடுமா? இந்து மகா சமுத்திரத்தில் இரண்டாவது சைப்பிரஸ் தீர்வாக உருவெடுக்குமா? இதற்கு பதில் தென்னிலங்கையில் 13 ஆவது அரசமைப்பு திருத்தத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமைக்கு எதிராகக் குரல் எழுப்பும் சிங்கள கடும்போக்காளர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது என அவதானிகள் கருதுகின்றனர்.

அநாமிகன்








Colour: Cyan Magenta Black

# கவிதைகள்



## இன்றைய உலகம்

பள்ளி காலத்தில்
இழந்து விட்டேன்
பல தோழர்களை
தவறு
என்னுடையதல்ல.
என் நண்பர்கள்
வளர்ந்து விட்டார்கள்
இளைஞர்களாகி விட்டார்கள்
அவர்கள் மத்தியில்
நான்
சிறுவனாகிப் போனேன்
பத்து மரங்கள்
கொண்ட தோப்பில்
ஒன்பது கிளிகளுக்கும்
ஜோடி வந்தால்
ஒரு கிளியால்
யாது செய்ய முடியும்?
தனித்திருக்க முடியும்
நான் செய்ததும்
அது தான்.
தனித்துப் போனது
தவறாகி போனது
இணைந்து இருந்தது
என்னவாகி போனது?

ரோஹித் விஜய்,பொகவந்தலாவ.

## அன்பே வா

அன்பே
மரணத்தைத் தாண்டியும்
மகிழ்வோடு வாழலாம் என்றால்
வா மரணித்துப் போகலாம்
ஜாதி பேதம் பார்த்துப் பிரிக்கும்
ஜென்மங்களை விட்டுப் போய்
மரண தேசத்திலாவது
மகிழ்வோடு வாழ்வோம்
வா அன்பே
போய் விடுவோம்....

ந.ஷோபனா,மட்டக்களப்பு.





## என் காதல்!

புரியப்பட வேண்டிய!
காலத்தில்
புரியப்படாமலேயே!
போன என்!
காதல் கண்ணீரில்
கரைந்து
காணாமல் போன பின்
தேடிக் கொண்டிருக்கிறாயே!
பெண்ணே.

பா.ரிசாந்தன்
ஹொரப்டன்



## சுமை இல்லை நட்பு

தாய் பத்துமாதம் வயிற்றில் சுமக்கின்றாள்
தந்தை வளரும் வரை தோளில் சுமக்கிறார்
காதலி வாழும் வரை காதலை சுமக்கிறாள்
நான் உன்னைச் சுமக்கவில்லை ஏனெனில்
நம் நட்பு சுமையில்லை

எஸ்.பிரியா,வவுனியா.

## நீ போதும்

சுவாசிக்க காற்று இல்லை
என்றாலும் என்னை
நேசிக்க நீ இருக்கிறாயே
அது போதும் எனக்கு

சி.பிரகாஷ்,ஹொரப்டன்.



## எதிர்காலம்?

உன் இனிமையான
கடந்த கால நினைவுகள்
நிகழ்காலத்தில் வாழவைக்கிறதென்னை -என்
எதிர்காலத்தை கொஞ்சம் கொஞ்சமாய்
அழித்துக்கொண்டு....!இருக்கின்றது.

சி.என்.ஷாந்தன்,நானுஓயா.







## என்று மாறுமோ?

மலைத்தாயின்
மக்களின்
கதி
நிர்க்கதி
நித்தமவர்
இழந்தது
நிம்மதி!
இன்றும்
அவர்களுக்கிழைக்கப்படுவது
அநீதி என்றவர்கள்
ஈட்டிக்
கொடுப்பது
பெரும் நிதி!
என்று மாறுமோ?
அவர் தலை விதி
இன்றும் இங்கிவர்
மீட்டாத மென் சுதி

சி.என்.ஷாந்தன், நானுஓயா.




யார் இந்தக் குழந்தை நட்சத்திரம்
இதற்கான விடை


## வானலையதிசயம் ரீங்காரம்

வானில் தெரியும்
அதிசயங்களை விட
வானலையில் தெரியாத
இரகசியங்களே அதிகம்
தனிமையின்
வலியுணர்ந்த கவிகளை
செவிசாய்த்த சொந்தங்கள்
எத்தனை ...? எத்தனை....?
உறவுகள்...
உண்டென்ற உண்மையை
எடுத்துரைத்த உள்ளங்கள்
எத்தனை....? எத்தனை...?
பொய்மைக்கும்
மெய்மைக்கும்
முடிக்கப் போட
முற்பட்டவனை
அறியாமைக்கும்
தெரியாமைக்கும்
தூக்குப்போட
துணிந்தவனை,
வாழ்வணைத்து தந்தது
வானலையின் அதிசயமல்லவா...?
ஒட்டுமொத்தமாய்
சூரிய சமூகத்தையே
சேர்த்துவிட்ட ரீங்காரம்
என்றும் எம் சொத்தல்லவா?

வே.முல்லைத்தீபன்,ஒட்டுசுட்டான்.



# விடைபெற்றுச்சென்ற நண்பனின் ஆவி



விதி சிலருடைய வாழ்க்கையில் வித்தியாசமாக விளையாடும். என்னுடைய வாழ்வில் கொஞ்சம் அதிகமாகவே விளையாடிவிட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

என்னுடைய பெயர் ஜெகன். மலையகத்தைச் சேர்ந்தவன். அம்மா, அப்பா, பாட்டி, அண்ணன் என்று குட்டி அழகான குடும்பம் என்னுடையது.

வீட்டில் வறுமை இருந்தும் எங்கள் குடும்பத்தினர் என்னை நன்றாகப் படிக்க வைத்தார்கள். ஒரு வைத்தியராக வேண்டும் என்பதுதான் என்னுடைய இலட்சியம்.

உயர்தரம் விஞ்ஞானப் பிரிவில் படித்துக் கொண்டிருந்தேன். சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் மேலதிக வகுப்பிற்காக கண்டி செல்வது வழக்கம்.

என் நண்பன் மகேஷ் கண்டியில் வேலை செய்து கொண்டிருந்தான். எனவே அவனோடு இரு நாட்கள் தங்கியிருந்து படிப்பது வழக்கம். அப்போது தான் சுனில் என்ற ஒரு நண்பனை சந்தித்தேன். சுனில், மகேஷின் நண்பன். நான் சுனிலை பலதடவை என்னுடைய வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறேன்.

எனது அம்மா கையால் செய்யும் ரொட்டியும் சம்பலும் அவனுக்கு மிகவும் பிடிக்கும். ஒரு முறை சுனில் விடுமுறைக்கு கடுகண்ணாவையில் உள்ள அவனது வீட்டுக்கு என்னையும் அழைத்துச்சென்றான்.

அவர்கள் வீட்டுக்கு சென்றபின்தான் தெரிந்தது அவன் எத்தகைய வசதியான குடும்பத்தில் பிறந்தவன் என்று. ஆனால் எந்த பந்தாவும் இல்லாத அவனது இயல்பு என்னை மலைக்க வைத்தது.

சுனிலின் குடும்பத்தில் அம்மா, அப்பா மற்றும் பாசக்கார அக்கா மட்டும்தான். பல தடவைகள் நான் சுனிலின் வீட்டுக்கு சென்றிருக்கிறேன்.

பாடசாலை விடுமுறையும் வந்தது. நான் கண்டியில் தங்கிப் படிப்பதற்காக கிளம்பி வந்துவிட்டேன். காலையில் வகுப்புகள், மாலை சுனிலும் மகேஷும் வந்த பின் அரட்டை என மிகச் சந்தோஷமாக நாட்கள் நகர்ந்தன. நாங்கள் தங்கியிருந்தது ஒரு தனி வீடு. சிறிய வீடு, சுற்றிலும் மரங்கள் அடர்ந்த தோட்டம் இருந்தது. வீட்டுச் சொந்தக்காரர் வெளிநாட்டில் இருந்தார். எனக்குக் கொஞ்சம் சமையல் தெரியும் என்பதால் ஹோட்டல் சாப்பாட்டுக்கு விடை கொடுத்து விட்டு, வீட்டில் நாங்களே சமைத்துச் சாப்பிட்டோம்.

எங்களின் சந்தோஷத்திற்கு யார் கண்பட்டதோ தெரியவில்லை அந்த நாள் இன்னும் நன்றாக நினைவிருக்கிறது. 2007 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சுனில் குடும்பத்தோடு ஸ்ரீபாத மலைக்கு செல்கிறோம் என்று என்னையும், மகேஷையும் வரச்சொல்லி அடம்பிடித்தான். நான் அம்மாவுக்கு சுகமில்லை வீட்டுக்கு போகவேண்டும் நீ சென்றுவா என்று சொல்லிவிட்டேன், மகேஷும் ஏதோ வேலை இருப்பதாக சொல்லி மறுத்துவிட்டான்.

நான் வீட்டுக்கு வந்த மறுநாள் சரியாக காலை பத்து மணிக்கு மகேஷ் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்ன தகவல் என்னை நிலைகுலைய வைத்தது. ஆம்!!! குடும்பத்தோடு சிவனொளிபாதமலைக்கு சுனில் சென்ற கார் விபத்துக்குள்ளாகிவிட்டது. சுனிலின் மொத்த குடும்பமும் அதே இடத்தில் இறந்துவிட்டார்கள். சுனில் மட்டும் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறான் என்றான்.

பதறிப் போனேன். சுனிலின் மொத்த குடும்பமும் வெறும் பொட்டலங்களாக சவப்பெட்டிகளில் கிடந்தன. பாசத்திற்குரிய அவர்களின் முகத்தைக் கூட பார்க்க முடியவில்லை. முகம், உடல் என அத்தனையும் சிதைந்திருந்தது. மனதில் வேதனை தாங்கமுடியவில்லை. சடலங்களை அடக்கம் செய்யக் கூட சுனில் இல்லை. சுய நினைவற்ற நிலையில் ஆஸ்பத்திரி கட்டிலில் கிடந்தான்.

சுனிலின் மாமாவோடு சேர்ந்து அத்தனை காரியங்களையும் நானும் மகேஷும் முன்னின்று நடத்தினோம்.

சுனிலின் நிலை நாளுக்கு நாள் மோசமாக இருந்தது. நானும் மகேஷும் வைத்தியசாலைக்கு அடிக்கடி சென்று சுனிலை கவனித்துக்கொண்டோம்.

சுனிலின் நிலைகுறித்து வைத்தியர்களும் சரியான பதிலை சொல்லமுடியாது இருக்கிறார்கள். நானும் வேண்டாத கடவுள் இல்லை. கண்களுக்குப்பட்ட அத்தனை கோவிலுக்கும் சென்று அவனுக்காக வேண்டிக்கொண்டேன்.

ஒருநாள் மாலை நானும் மகேஷும் மாலை சுனிலை பார்க்கச் சென்றபோது சுனிலின் நிலை இறுதிக் கட்டத்தை எட்டியிருந்தது. பிணம்போல் கிடந்தான். மார்புக் கூடு மட்டும் லேசாக அசைந்து கொண்டிருந்தது. அவன் நிலை கண்டு கதறி அழுதுவிட்டேன். வீட்டுக்கு வந்து எதுவும் சாப்பிடாமல் எதுவும் பேசிக் கொள்ளாமல் படுத்துக்கொண்டோம்.

எப்போதுமே ஜன்னல் திறந்துதான் இருக்கும் நல்ல குளிர்காற்று வீசும். அன்றும் அப்படித்தான். சரியாக அதிகாலை 2.00 மணியிருக்கும் சுனில் கனவில் வந்தான், ''டேய் அக்கா கூப்பிடுறா நான் போறேன்'' என்று சொல்லி என்னுடைய கைகள் இரண்டையும் இறுகப் பற்றிக்கொண்டான். பின்னர் எழுந்து கதவருகில் சென்று 'பாய்டா...! என்று சொல்லிச் சிரித்தான்.

நான் ''சுனில்...! நில்லு..! என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே கண்விழித்துக் கொண்டேன். நான் கண்விழித்த அடுத்த நொடி அறையில் எரிந்துகொண்டிருந்த மின்குமிழ் படார் என்று வெடித்துச் சிதறியது. அறையெங்கும் இருள் சூழ்ந்து கொண்டது.

கண்விழித்துக் கொண்ட மகேஷ் இன்னொரு லைற்றைப் போட்டான். எனக்கு வியர்த்துக் கொட்டியது. மனதில் ஏதோ ஒரு நெருடல். நான் கண்ட கனவை மகேஷிடம் சொல்லி அழுதேன். அவன் என்னை சமாதானப்படுத்தினான். ''சரி விடியட்டும் காலையில் ஆஸ்பத்திரிக்கு செல்வோம்'' என்றான்.

மறுநாள் ஆஸ்பத்திரிக்கு செல்லவே பயமாக இருந்தது. ஆஸ்பத்திரி வாசலில் கால் வைக்கவே நடுங்கியது. மனதை தேற்றிக்கொண்டு சுனிலின் அறைக்கு சென்றபோது அங்கே அவன் இல்லை. பிணவறையில் அவன் உடல் இருப்பதாகச் சொன்னார்கள்

விசாரித்ததில் சரியாக அதிகாலை 2.00 மணிக்கு உயிர் பிரிந்ததாக சொன்னார்கள். ஆம் நான் கனவு கண்டதும் சரியாக இரண்டு மணிக்குத்தான்.

மனதை கல்லாக்கிக்கொண்டு சுனிலின் மரண செய்தியை அவனின் உறவினர்களுக்கு தெரியப்படுத்தினோம். சுனிலின் அடக்கம் முடிந்த கையோடு நாங்கள் கண்டிக்கு புறப்பட்டுவிட்டோம்.

பஸ்ஸில் ஏறி அமர்ந்த நாம் இருவரும் ஒருவருக்கொருவர் கதைத்துக்கொள்ளவில்லை. மனதில் அத்தனை வேதனையோடும் துக்கத்தோடும் வந்துகொண்டிருந்தோம்.

அன்று சரியான மழைவேறு! நாங்கள் எங்கள் அறை வாசலுக்கு வரும்போது இரவு 9.30 மணியைத் தாண்டிவிட்டது.

வீட்டு வாசலுக்கு வந்த மகேஷ் சாவியைத் தேடினான். இருட்டில் சரியாகத் தெரியவில்லை. அப்போது அறைக்குள் யாரோ நடமாடுவதுபோல் தெரிந்தது. என்ன ஆச்சரியம் திடீரென்று வெளியில் உள்ள லைற் போடப்பட்டது. அதிர்ந்துபோனோம். எப்படி இது சாத்தியம் யார் வீட்டுக்குள்? திருடனாக இருக்குமோ என்று பயந்தோம். அதற்குள் நாம் கதவைத் தள்ளிய போது சாவி போடாமலே உள்ளே இருந்து யாரோ திறப்பதுபோல் கதவு திறந்தது.

மகேஷ் நடுங்கிப்போய்விட்டான். எனக்கும் அதிர்ச்சிதான். சரி உள்ளே சென்று பார்ப்போம் என சென்றோம். வீட்டில் யாருமே இல்லை. வீடு வெறுமனே கிடந்தது.

சுனில் படுத்திருந்த இடம் மற்றும் அவன் பாவித்த பொருட்கள் படித்த புத்தகம் எல்லாவற்றையும் பார்க்கும் போது மனதில் வேதனை இன்னும் அதிகரித்தது.

மனதை தேற்றிக்கொண்டு குளிக்கச்சென்றேன். அப்போது மகேஷ் அருகில் உள்ள கடைக்கு சாப்பாடு வாங்க சென்றுவிட்டான். நான் கதவை பூட்டிவிட்டு குளிக்கச் சென்றேன்.

தண்ணீரை குறைத்துவிட்டு சோப் போட்டுக்கொண்டிருந்தபோது கதவருகில் யாரோ நிற்பதுபோல் ஒரு நிழல் தெரிந்தது. பின்னர் அறையில் கட்டிலை இழுக்கும் சத்தம் கேட்டது. சிறிது நேரத்தில் சமையலறையில் பாத்திரங்கள் அசைவதும் தண்ணீர் சத்தமும் கேட்டது.

நானும் மகேஷ்தான் இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டான் என்று நினைத்து கதவை திறந்து வெளியே வந்து பார்த்தேன். யாரும் இல்லை. அறைக்கு வந்துபார்த்தபோது சுனிலின் கட்டில் என்னுடைய கட்டிலோடு ஒட்டியிருந்தது. அதிர்ந்துபோனேன்.

யார் இப்படி அசைத்து வைத்திருப்பார்கள், பயம் ஆட்கொள்ள ஆரம்பித்தது. சரி ஆவியாகவாவது ஒரு முறை சுனிலை பார்க்கமாட்டோமா என மனது தவித்தது. இதை பெரிதாக எடுத்துக் கொள்ளவிலை. மேலும் மகேஷ் வந்ததும் இதுபற்றி எதுவும் சொல்லவில்லை.

ஆனால் அன்று இரவு நான் படுத்துக்கொண்டிருக்கும் போது என் கழுத்தை யாரோ இறுகப் பற்றி அணைத்து தூங்குவதை நான் உணர்ந்தேன். என்னால் மூச்சு எடுக்க முடியாது தவித்தேன். மெதுவாக கண்களை திறந்தபோது பக்ககத்தில் மகேஷ் முனங்கிக்கொண்டிருந்தான். தனக்கு ஏற்பட்டது போலத்தான் மகேஷுக்கும் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து திமிறி எழுந்தபோது, மகேஷ் சொன்னான் என் மேல் யாரோ உட்கார்ந்திருப்பது போல் இருக்கிறது என்றான்.

மகேஷ் ரொம்பவே பயந்துபோய்விட்டான். இப்படியே தொடர்ந்து ஒரு வாரம் நடக்க இதுதொடர்பாக மகேஷ் பக்கத்தில் உள்ள விகாரைக்குச் சென்று பிக்குவிடம் இது பற்றிச்சொன்னபோது அவர் சில விசயங்களை ஆராய்ந்து விட்டு சொன்னார்.

உங்கள் மீது உள்ள பாசத்தால் அந்த ஆத்மா தவிக்கின்றது. அந்த ஆத்ம சாந்திக்காக பூஜை செய்து பிக்குமார்களுக்கு அன்னதானம் கொடுக்கவேண்டும் என்றார்.

அவர் சொன்னது போல பூஜை. கிரியைகளைச் செய்தோம். சுனிலின் ஆத்மா சாந்தியடைந்துவிட்டது என்று நினைக்கிறேன். அதன் பின் அப்படி சம்பவங்கள் நிகழவில்லை.

ஆனால் நான் படிப்பை அப்படியே கைவிட்டுவிட்டேன். சுனிலின் மரணம் அதைத் தொடர்ந்து நடந்த சம்பவங்கள் என்னை ரொம்பவே பாதித்து விட்டது. வைத்தியராக வரவேண்டும் என்ற இலட்சியத்தோடு படித்துக் கொண்டிருந்த நான் இன்று ஒரு கடையில் வேலை செய்கிறேன்.

தகவல் தொகுப்பு - அபி -

## இந்த வாரம் உங்களுக்கு எப்படி


### 12.09.13 முதல் 18.09.13 வரை

| | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் |
|---|---|---|---|---|---|---|---|
| மேஷம் | நன்மை | நிறைவு | செலவு | மகிழ்ச்சி | உற்சாகம் | விருத்தி | ஆதாரவு |
| ரிஷபம் | பக்தி | பயம் | பயம் | தாமதம் | விவேகம் | தனம் | ஜெயம் |
| மிதுனம் | வெற்றி | முயற்சி | வரவு | சுகம் | நன்மை | மேன்மை | நன்மை |
| கடகம் | சுகம் | பாசம் | கவலை | வரவு | ஆதரவு | நலம் | நிம்மதி |
| சிம்மம் | பயம் | ஓய்வு | மேன்மை | சிக்கல் | போட்டி | ஓய்வு | உதவி |
| கன்னி | பாராட்டு | வெற்றி | தாமதம் | முயற்சி | பணிவு | நன்மை | அமைதி |
| துலாம் | குழப்பம் | நன்மை | நோய் | எதிர்ப்பு | நற்சொல் | இன்பம் | புகழ் |
| விருச்சிகம் | பிரயாணம் | சிந்தனை | ஆதரவு | வெற்றி | கவலை | மறதி | சுகம் |
| தனுசு | அமைதி | செலவு | வெற்றி | ஆதரவு | மேன்மை | நிம்மதி | இலாபம் |
| மகரம் | விவேகம் | அமைதி | பக்தி | பயம் | சுகம் | ஜெயம் | வெற்றி |
| கும்பம் | அன்பு | வரவு | நன்மை | நட்பு | வரவு | அமைதி | வரவு |
| மீனம் | சிரமம் | சாதனை | அமைதி | தடங்கல் | எதிர்ப்பு | முயற்சி | களிப்பு |

### தன்னம்பிக்கை வரிகள்

* ஒருவன் சந்தோசமாக வாழவேண்டும் என்றால், முதலில் அவன் தன்னைத்தானே நம்ப வேண்டும்.
* புரிந்து கொள்ளாத போதும், பொறாமைப்படும் போதும் மனிதன் மற்றவனை முட்டாளாகக் கருதுகிறான்.
* சோம்பேறிக்கு எல்லாமே கடினமாய்த் தோன்றும், ஊக்கமுள்ளவனுக்கு எல்லாமே எளிதாய்த் தோன்றும்.

# முன்னோக்கிச் செல்லுங்கள்!




தன்னம்பிக்கை உள்ளவன் பார்வை முன்னோக்கியே இருக்கும். அவன் வாழ்க்கைப் பயணத்தை முன்னோக்கியே நடத்துவான். அதுவே அவனது இலட்சியம்.

**முன்னோக்கிய பார்வை தேவை**

குதிரைகளுக்கு மட்டும் முன்னோக்கிப் பார்க்கும் கண்ணாடி போடுகிறோமே ஏன்? மாடுகள் போல குதிரைகள் மெதுவாகச் செல்லக்கூடியவை அல்ல. வேகமாகச் செல்ல வேண்டியவை. சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டே போனால் அதன் வேகம் தடைப்பட்டுப் போய்விடும். முன்னோக்கிப் பார்ப்பதற்கு மட்டுமே அவை பழக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுதுதான் அதன் வேகம் அதிகமாகும். செல்லவேண்டிய இடத்தைச் சீக்கிரம் சென்றடைய முடியும்.

நமது வாழ்க்கையையும் நாம் முன்னோக்கியதாக அமைத்துக்கொள்ள வேண்டும். வளர்ச்சிக்கு அதுதான் வழி. கவனத்தைச் சிதறவிட்டு, சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டிருந்தால், ஆங்காங்கே நின்று நின்று போனால் நாம் போய்ச்சேர வேண்டிய இடத்திற்குப் போய்ச்சேர முடியாது.

நிகழ்காலமே உயிருள்ள காலம். அதேபோல வாழ்க்கையைப் பின்னோக்கிப் பார்த்துக் கொண்டே இருப்பதிலும் பயனில்லை. வாழ்வில் நடந்ததற்காகவும் கடந்ததற்காகவும் வருந்திக்கொண்டிருப்பதும் முன்னேற்றத்திற்குப் பெருந்தடையாகும்.

தன்னம்பிக்கை உடையவன் ஒருகாலும் கடந்த காலக் குறைபாடுகளை எண்ணி மறுகிக்கொண்டிருக்க மாட்டான். கடந்தது இனி மீளாது என்பது அவனுக்குத் தெரியும். அதனால், நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும், இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும் என்று ஒரு முடிவுக்கு வருவான். நடந்த தவறுகளிலிருந்து விடுபட முயல்வான். அவற்றிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பான். முன்னோக்கிச் செல்வதில் நாட்டங்கொள்வான்.

நடந்தது வாழ்க்கையின் கடந்தகால வரலாறே தவிர, உயிருள்ளவை நிகழ்காலம்தான். நிகழ்காலச் சாதனைகளே வெற்றி நிறைந்த வரலாற்றை உருவாக்கும்.

**மகிழ்ச்சியானவற்றை நினைவு கூருங்கள்**

முன்னோக்கிச் செல்வதற்கு முன்னர் வந்த பாதைகளை அனுபவங்களை வரும் கால வளர்ச்சிக்கு உதவியாக எடுத்துக்கொள்ள வேண்டும். உற்சாகமான செயல்பாடுகளாக இருந்தால் சிறிது நேரம் அசை போட்டுப் பார்க்கலாம், அவ்வளவுதான். கடந்தகால நிகழ்ச்சிகளே வாழ்க்கை ஆகிவிடாது.

**பழம் பெருமைகளைப் பேசாதீர்கள்**

பின்னோக்கிச் செல்பவர்கள் பழம் பெருமைகளையே பேசிக்கொண்டிருப்பார்கள். பழம் பெருமை யாருக்கு வேண்டும்? உங்கள் தாத்தாவும், தந்தையும் செய்தவை உங்கள் சாதனைகள் ஆகிவிடுமா?

நான் இளமையில் அப்படி இருந்தேன், வாலிபத்தில் இதை இதைச் செய்தேன், இப்படி இருந்தேன் என்று ஒரு பெரியவர் சொல்வாரானால் அதற்கு என்ன பொருள்? அவரால் இப்போது எதுவும் முடியவில்லை என்பதுதானே! இவர்கள் உயிரோடு இருக்கும்போதே இறந்து போனவர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஆற்று நீர் போல ஓடிக்கொண்டே இருக்கவேண்டும். அவன் ஒருபோதும் குட்டைபோலத் தேங்குவதே இல்லை.

வாழ்க்கை தேங்கினால் வளர்ச்சி முடிந்துவிட்டது என்று பொருள்.

**சிலர் கை குலுக்குவதைப் பாருங்கள்**

கையை யார் முன்னோக்கி நீட்டுகிறார்களோ அவர்களைத்தான் கைகுலுக்கி வரவேற்கிறார்கள். கைகுலுக்குவதில் கூட கவனித்துப் பாருங்கள். சிலர் கையைக் கெட்டியாகப் பிடித்துக் குலுக்குவார்கள். இரும்புப் பிடிபோல் ஓர் பிடிப்பு இருக்கும். அந்தக் கை குலுக்கலில் ஓர் ஆர்வம், ஓர் உற்சாகம், ஒரு வேகம் பிறக்கும். வாழ்க்கையில் மகிழ்ச்சியாக சுறுசுறுப்பாக இருக்கக் கற்றுக்கொள். இப்படி சோம்பல் முறித்துக் கொண்டு இருக்காதே என்பது அந்தக் கை குலுக்கல் நமக்கு கற்றுக்கொடுக்கின்ற பாடம்.

**மகிழ்ச்சியை இரட்டிப்பு ஆக்குங்கள்**

தன்னம்பிக்கை உள்ளவன்தான் கைகளை நீட்டுகிறான். வாய்ப்பை எதிர்நோக்கிச் செல்கிறான். கை குலுக்கல் கிடைக்கின்றது. மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்கிறான். பிறர் மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறான். தன் மகிழ்ச்சியையும் இரட்டிப்பாக ஆக்கிக்கொள்கிறான். மகிழ்ச்சி ஆற்றலைப் பெருக்குகிறது. அவன் படிப்படியாக முன்னேறுகிறான்.

# கொஞ்சம் சிரிக்க சிந்திக்க



## யார் முட்டாள்



தேசிய நெடுஞ்சாலைப் பணியாளர் ஒருவர் வயதான விவசாயி ஒருவரை அவருடைய வயல் அருகில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தார்.

''உங்களுடைய இடத்தில் புதிய பாதை அமைக்கவிருப்பதால் உங்களுடைய நிலத்தைப் பார்வையிட விரும்புகிறேன்'' என்றார்.

''சரி. வயலின் உட்பகுதிகளுக்கு மட்டும் போகாதீர்கள்'' என்றார் விவசாயி.

''நான் நெடுஞ்சாலைத் துறைப் பணியாள். எனக்கு எங்கு வேண்டுமானாலும் சென்று பார்வையிட அனுமதியுண்டு. இதோ பாருங்கள். இது என்னுடைய அடையாள அட்டை. இது அரசாங்கம் கொடுத்தது'' என்றார் பணியாளர்.

''அதற்கு மேல் உங்கள் விருப்பம்'' என்று கூறிய விவசாயி பேசாமல் வயல் வரப்பில் அமர்ந்தார்.

வயலுக்குள் சென்ற பணியாளர் சிறிது நேரத்துக்கெல்லாம் அலறி அடித்துக் கொண்டு ஓடி வந்தார். அவருக்குப் பின்னால், முரட்டுக்காளை ஒன்று துரத்தி வந்ததை விவசாயி பார்த்தார்.

தன்னைக் காப்பாற்றும்படி அலறிய பணியாளரிடம் விவசாயி சொன்னார் ''சீக்கிரமாக உங்கள் அடையாள அட்டையை எடுத்து அதனிடம் காட்டுங்கள்''



## அச்சச்சோ இப்டி ஆயிடுச்சே

நாராயணசாமி ஒரு நவீனமான வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வாங்கினார்.

அதை வீட்டில் பொருத்தி, செய்முறை விளக்கம் கொடுக்க ஒரு ஊழியரும் வந்திருந்தார்.

தங்கள் நிறுவன தொலைக்காட்சிப் பெட்டியின் சிறப்பை ஓயாது வர்ணித்த ஊழியர், பின் ரிமோட்டை எடுத்தார். அதை நாராயணசாமியிடம் காட்டிய ஊழியர்,

''இது மிகவும் நுட்பமானது. இதன் வீச்சும் திறனும் மிக அதிகம். வாருங்கள் காட்டுகிறேன்'' என்று சொல்லி, பக்கத்தில் இருந்த 25 மாடிக்கட்டிடத்தின் உச்சிக்கு அழைத்துப் போனார்.

அங்கிருந்து ரிமோட்டை இயக்க, நாராயணசாமியின் வீட்டிலிருந்த தொலைக்காட்சிப் பெட்டி மிக அழகாக இயங்கியது.


நாராயணசாமிக்கு பரம திருப்தி.

ஒரு மாதம் கழித்து தொலைக்காட்சிப் பெட்டி நிறுவனத்துக்கு போன் செய்த நாராயணசாமி சொன்னார்,

''தயவுசெய்து எனக்கு ரிமோட்டை மாற்றிக் கொடுங்கள். ஒவ்வொருமுறை சேனல் மாற்றவும் 25 மாடிகள் ஏறி இறங்க என்னால் முடியவில்லை. இதனால், அந்தக் கட்டிடத்தின் வாட்ச் மேனுடன் வேறு சண்டை வந்துவிட்டது!''

என் உயிர் போனால்
உனக்கு அழுகை வருமோ வராதோ
எனக்குத் தெரியாது...?
ஆனால்,
உனக்கு அழுகை வந்தாலே
என் உயிர் போய்விடும் - அம்மா









அம்மா என்ன உணவு சமைத்தாலும் அது சுவை நிரம்பியதாக இருக்கிறதே...!!! ஐந்து நட்சத்திர உணவகத்தின் பலவகை உணவுகள் கூட அம்மா தரும் உருண்டைச் சோறு முன் கைகூப்பி நிற்கிறதே?

காரணம் என்ன தெரியுமா?

அம்மா தான் சமைக்கும் எல்லா உணவுகளிலும் எவருமே சேர்க்காத ஒரு முக்கியப் பொருளை சேர்த்து சமைக்கிறார். அதுதான் ''அளவற்ற அன்பு'' சமைக்கும்போது ஒவ்வொரு நொடியும் எதை எவ்வளவு சேர்த்தால் தன் பிள்ளைக்கு பிடிக்கும் என்பதை யோசித்து கொண்டே தான் அவர் சமைப்பார்.






இந்த ரோட் எங்க போகுது...!

★ ஆயிரம் முறை நீ...! அவமானப்படுத்தினாலும் அதை எல்லாம் மறந்து உன்னிடம் மறுபடியும் பேசத் துடிக்கும் அன்பே உண்மையான அன்பு...!

★ இரக்கப்படுபவன் ஏமாந்து போகலாம். ஆனால், தாழ்ந்து போவதில்லை...! ஏமாற்றுபவர்கள் வெற்றி பெறலாம். ஆனால், கடைசி வரை சாதிப்பதில்லை...!


மத்திய மாகாண சபைத் தேர்தல் - 2013
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்
தீர்க்கமான அரசியல் பாதையில்
தெளிவான மக்கள் புரிதலோடு
கண்டி மாவட்ட தமிழர்களின்
அரசியல் நம்பிக்கை!
6X
கண்டி மாவட்ட தமிழர்களின் தனித்துவ அரசியலுக்காக
அ. லெட்சுமணன்
072 - 4435872
துணிந்த குரல் மாகாண சபையில் ஒலிக்கட்டும்!


NAITA
JOIN PROGRAMME
ACTE
Reg No 00427
நுவரெலியாவிலுள்ள முன்னனி
கணனி பயிற்சி நிறுவனம்
100% தொழில் உறுதி
தேசிய பயிலுனர்களதும் தொழில்நுட்பம்
பயிற்றுவிக்கும் அதிகாரசபையுடன் சேர்ந்து
நடாத்தும் கற்கைநெறி திட்டமானது 15.09.2013 ம் திகதி
அன்று ஆரம்பமாகவுள்ளது.
இக் கணனி நிறுவனமானது 5 வருடங்களுக்கு
மேலாக நன்மதிப்புடனும் தரமான சான்றிதழ்களை
தொடர்தேர்ச்சியாக வழங்கிவருகின்றது.
JOIN TODAY
Academy for Computer Technology (Private)Limited
RAMANATHAN COMPLEX,
UNIT 09, NO.36,PARK ROAD, NUWARA ELIYA.
TEL:+(94)-522223389


மத்திய மாகாண சபைத் தேர்தல் - 2013
நுவரெலியா மாவட்டம்
இலங்கை இந்திய வம்சாவளி மக்கள் முன்னணி
19X
சு.ப. சுப்பிரமணியம்
6X
வீரய்யாகுமார்
3X
அ.செல்வராஜ் J.P
X
வளமான மலையகத்திற்கு அதிகப்படியான வாக்குளால் வெற்றி பெறச்செய்வோம்!


மத்திய மாகாண சபைத் தேர்தல் - 2013
நுவரெலியா மாவட்டம்
இலங்கை இந்திய வம்சாவளி மக்கள் முன்னணி
X
5X
காலம் மாறுகின்றது
நம் கனவுகள் பலிக்கின்றது
இரட்டைக் கொடிச் சின்னம் அழைக்கின்றது
நம் வெற்றி நிச்சயமாகின்றது
ஏகாம்பரம் சோபனா


மாகாண சபைத்தேர்தல் 2013
கண்டி மாவட்டம்
இளம் தலைமுறையினரே!
அரசியல் மாற்றம்
வாக்குப்பெட்டி நிரப்பும் அரசியலால் மட்டும் மலையகத்திற்கு விமோசனம் இல்லை
விழிப்புணர்வு பெற்ற வெகுசன பாதையின் பயணமே விமோசன வழி
என முன்னெடுக்கும் என்னோடு இணையுங்கள்.
கல்வி மாற்றம்
உயர் கல்வியில் விஞ்ஞானம், ஆங்கிலம், தொழிநுட்பத்தினூடான
உலக இணைவே மலையகத்தின் கல்வி மாற்றம்
தொ.தே.ச.
தலைவர்
ம.ம.மு.
ஸ்தாபகர்
தொ.தே.ச
பிரதித் தலைவர்
தொழிலாளர் தேசிய சங்கத்தின் முதன்மை
வேட்பாளராக மண்வெட்டி சின்னத்தில் போட்டியிடும்
X
22X
முதுமாணிப்பட்டதாரி
மு.முத்துகுமார்
(B.Com, M.Com, M.A.Dip.in. HR)




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்டாரால் (இல-68, எலிஹவுஸ் றோட், கொழும்பு-15) 12.09.2013 வியாழன் 94, பரமானந்த மாவத்தை கொழும்பு-13, தினக்குரல் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.